216654

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு.

ஏப்ரல் 22, 1997 தொகுதி 32
எண் 2.


32.2
216654.

வெளியீடு 13-5-98 Issued 13-5-98

1164/98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 22, 1997 – தொகுதி 32 – எண் 2

Tuesday the 22nd April, 1997 – Volume 32 – No. 2

D.
N211, 31'N97
N97. 32.2
216654.

றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

ive Assembly Secretariat, Fort St. George,

Chennai-600 009

[Price Rs. 3.00

1164
98

## 22-04-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள் - விடைகள் — | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 171-213 |
| (ஆ) குறுகிய கால வினா | 207-213 |
| 2. உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களின் தன்னிலை விளக்கம் | 214-215 |
| 3. கவன ஈர்ப்பு — | |
| (அ) தென்காசியில் ஆயிரப்பேரி பாலமும் செங்கோட்டையில் நித்திய கல்யாணி அம்மன் கோயில் பாலமும் கட்டுதல் | 215-218 |
| (ஆ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், கருவேப்பிலங்குறிச்சி கிராமத்தில் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் தொடங்குதல் | 218-221 |
| 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் - (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவுச்) சட்டமுன்வடிவு, 1997 | 221-222 |
| (ஆ) சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 | 222-223 |
| (இ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 223 |

பக்கங்கள்

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் - (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 — 223-224

(உ) குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 — 224-225

5. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1996-97, 1997-98 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1995-96, 1996-97 அளித்தலும், அவற்றின்மீது விவாதமும் - தொடர்ச்சி — 225-306

திரு. சி. ஞானசேகரன் — 225-233

திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் — 233-240

திரு. ஜி. பழனிசாமி — 240-244

திரு. இ. கணேசன் — 245-251

*திரு. செங்கை சிவம் — 251-256

*திரு. எல். சந்தானம் — 257-259

திரு. பி. வெங்கடசாமி — 260-261

டாக்டர் க. கிருஷ்ணசாமி — 261-265

*திரு. டி.சி. விஜயன் — 265-268

திரு. ஜி. நிஜாமுதீன் — 268-272

திரு. ஆர்.ஆர். சேகரன் — 272-278

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 278-306

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 306

216654.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 9, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு, 2028**

**1997, ஏப்ரல் 22, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில், காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல்"

ஒருவரின் வாழ்க்கைக்கு ஒளி தருவது, ஊக்கமேயாகும்; ஊக்கமின்றி உயிர் வாழ்வது, இழிவு தருவதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள்.

வினா எண் 601, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**601—**

**உசிலம்பட்டியில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்குதல்**

***4787-திரு. பி. என். வல்லரசு :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டியில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே, நமது ஆட்சி, பொறுப்பிலே இருக்கிற நேரத்திலே, பிற்படுத்தப்பட்ட பகுதிக்குப் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் வேண்டுமென்ற நோக்கத்தோடு, கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக, நாட்டார்மங்கலம், செக்கானூரணி மற்றும் வீரன் அழகுமுத்து மாவட்டத்தில் ஓரிடம், ஆகிய 3 இடங்களிலே பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை கடந்தகால ஆட்சியிலே எடுக்கப்பட்டு விட்டன. எனவே, பிற்படுத்தப்பட்ட மக்கள் மேன்மையுறுகிற அளவிலே, அரசு மீண்டும் பரிசீலனை செய்து, கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக, மீண்டும் அந்தப் பயிற்சிப் பள்ளிகளை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விடையை அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்தான் தர வேண்டும். இருந்தாலும்கூட, ஏற்கனவே நீதிமன்ற ஆணை காரணமாக, முறையோடு நடத்த முடியாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளெல்லாம் கைவிடப்பட்டன. முறையோடு நடக்கக்கூடிய வாய்ப்பு வசதியில்லாத சூழ்நிலை காரணமாக, நிறுத்தப்பட்டவற்றை மறுபடியும் ஏற்படுத்துவதற்கான அளவுக்கு நியாயமான காரணங்கள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் கடந்த 2 ஆண்டுகளாகப் பயிற்சி பெற்றவர்கள், இதுவரையில் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்படாமல் இருக்கிறார்கள். அந்தப் பரீட்சை, இந்த ஆண்டும் நடப்பதாக இதுவரையில் தெரியவில்லை. எனவே, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதில், ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்கள் என்று சொல்வதற்கான நியாயம் இல்லை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி என்ற பெயரால், ஏற்படுத்தப்பட்ட வியாபார நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மாணவர்கள், அங்கு முறையான பயிற்சி பெறவில்லை. இருந்தாலுங்கூட, அப்படிப்பட்ட ஒரு ஏமாற்றத்திற்கு ஆளானவர்களுக்கு, ஏதாவது அரசு உதவி செய்ய முடியுமா என்ற ஆலோசனை இருந்தாலும், உச்ச நீதிமன்ற ஆணை காரணமாக, உடனடியாக ஒரு முடிவிற்கு வர இயலவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில், பல முறைகேடுகளை தனியார் புரிகிறார்கள். இவற்றையெல்லாம் போக்குவதற்கு, முந்தைய அரசாங்கத்தில் ஒரு திட்டம் இருந்தது. அரசு மேல்நிலைப் பள்ளிகளில், ஒரு மாவட்டத்தில், இரண்டு, மூன்று 'இன்ஃப்ராஸ்ட்ரக்சர்' உள்ள பள்ளிகளில், அவர்களே 40 பேர், 50 பேர்களுக்கு, ஆசிரியர் பயிற்சிக் கல்வி என்று ஒரு செக்ஷனை எடுத்து நடத்தினார்கள். அந்தத் திட்டம் அமலுக்கு வந்தால், இப்படிப்பட்ட குறைபாடுகள் நீங்கும். பல இடங்களில் இப்படிப்பட்ட பயிற்சி கிடைக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ஏறத்தாழ 30 ஆயிரம் பேர் வேலை பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதேபோல், பி.டி. பட்டம் பெற்றவர்களும் ஏராளமான எண்ணிக்கையிலே காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓராண்டிற்கு ஏறத்தாழ 3,350 மாணவர்களுக்குத் தகுந்த முறையில் பயிற்சி வழங்குவதற்கு, மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மூலமாகவும், மற்ற ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையங்கள் மூலமாகவும், நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளிலே தொடங்கிய ஆசிரியர் பயிற்சி, நிறைவான பயிற்சி அல்ல. மேலநிலைப் பள்ளிகளையே முழு அளவுக்கு நிறைவாக நடத்துவதற்கு, மேலும் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, அதிலே ஆசிரியர் பயிற்சியைத் திணித்து செம்மையாக இயக்காமல், செம்மையாக அவர்களுக்குப் பயிற்சி அளிக்காமல், அவர்களை ஆசிரியர்களாக்குவது சிறப்பாக இருக்காது.

[1997 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 9-35

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, அந்த மாணவர்கள் முறையாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெறவில்லை; வியாபார ஸ்தலத்தில் சேருவதுபோல சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் சேர்ந்தது எல்லாம் அரசாணையை நம்பித்தான். ஏற்கெனவே கடந்த கால ஆட்சியாளர்கள் தவறான முறையில் முறைகேடுகளைச் செய்து பல ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி அளித்திருந்தாலும்கூட, அரசாணையை நம்பித்தான் அவர்கள் மோசம் போனார்கள். அப்படி மோசம் செய்யப்பட்டவர்கள் சுமார் 12,000 பேர்தான் என்பது அரசின் கணக்கு. சிலர் 50,000 என்று சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு முறை சொல்லுகிறபோது அவையிலே 12,000 என்றுதான் கூறினார்கள். இந்த 12,000 பேர்களை, ஏற்கெனவே நம்முடைய தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலாவது சேர்த்து அவர்களுக்கு மீண்டும் ஒரு மாத காலமோ அல்லது 3 மாத காலமோ பயிற்சி அளித்து, நீங்கள் அவர்களை மட்டுமாவது தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்க வேண்டும். ஆந்திராவில் அப்படி அனுமதிக்கப்பட்டதாகச் செய்திகள் வருகின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக யாரையும் சேர்க்கவில்லை என்றாலும், ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கிற மாணவர்களையாவது மீண்டும் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வழக்கறிஞர். உயர் நீதிமன்றத் தடையோடு, அதற்குப் பின்னர், அன்றைய அரசாங்கம் மேல்நிலைப் பள்ளிகளிலே பயிற்சி வழங்கலாம் என்று இவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்ள ஒரு முயற்சி எடுத்துக்கொண்டது. அந்த முயற்சியும் தவறு என்று உயர் நீதிமன்றத்திலே திரும்பவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவே ஒரு பயிற்சி அளிப்பதாக இருந்தால்கூட உயர் நீதிமன்றம் தடையானது இடையூறாக இருக்கிறது. ஆந்திராவிலே 20 ஆண்டுகளுக்குமுன்னால் இப்படி ஏற்பட்ட ஒரு சூழ்நிலையின் காரணமாக அங்கே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை ஆராய்ந்து வருமாறு தொடக்கப் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அரசு அறிவுறுத்தியிருக்கிறது. அவற்றை முழு அளவுக்கு ஆராய்ந்து ஏதேனும் செய்ய முடியுமா என்று பரிசீலிக்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 602, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**602—**

## நீலாம்பூண்டியில் அரசு கலைக் கல்லூரி நிறுவுதல்

***5801—டாக்டர் ஆ. ஞானசேகரன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் உள்ள நீலாம்பூண்டியில் ஓர் அரசு கலைக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகமிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கிற தொகுதி. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி. இவர்கள் கல்லூரிகளில் பயிலுவதற்காக பல இடங்களுக்குச் செல்ல வேண்டிய ஒரு துர்பாக்கிய சூழ்நிலை பல வருடங்களாக இருந்து வருகின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தனியார் கல்லூரியையாவது நிறுவுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியினுடைய கடைசிப் பகுதி கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது. தனியார் அப்படி முன்வருவார்களேயானால் அதுபற்றியுங்கூட இருக்கிற நிலைமைகளுக்கேற்ப கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 603, திரு. குழந்தை. தமிழரசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 22

**603—**

**விருத்தாசலம் ஊரின் பெயரை திருமுதுகுன்றம் எனப் பெயரிடுதல்**

***4584—திரு. குழந்தை. தமிழரசன் :**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "விருத்தாசலம்" என்ற ஊர்ப் பெயரை "திருமுதுகுன்றம்" எனப் பெயரிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உள்ளாட்சிமன்றங்களுக்கான தேர்தல்கள் முடிவு அடைந்துள்ள சூழ்நிலையில், பெயர் மாற்றம் குறித்து அவர்களது அறிக்கை, மாவட்ட ஆட்சியர் மூலம் கேட்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்தபின் பரிசீலித்து முடிவெடுக்கப்படும். இதுபற்றி இறுதி முடிவெடுக்க சில காலம் ஆகும்.

**திரு. குழந்தை. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆமாம் என்று பதிலளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சில காலங்கள் ஆகும் முடிவெடுக்க என்று அறிவித்திருக்கிறார்கள். இது விருத்தாசலம் மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையாகும். அந்த ஊரில் அமைந்துள்ள அந்த விருத்தகிரீஸ்வரர் ஆலயம், அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரால் பாடப்பட்ட ஸ்தலம். அவர்கள் பாடிய அந்தத் தேவாரப் பாடல்களில் அந்த ஊர் திருமுதுகுன்றம் என்றே வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கோவில்களில் காணப்படும் கல்வெட்டுக்களில்கூட அந்த ஊரின் பெயர் திருமுதுகுன்றம் என்றே விளங்கி வந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கோவிலானது 13½ கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்டதால் தான் முதுகுன்றம் என்ற பெயர் வரலாற்றில் இருப்பதாக அறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள். 1986-லேயே விருத்தாசலம் நகர்மன்றத்திலும் அந்த ஊரின் பெயர் மாற்றம் குறித்துத் தீர்மானமும் போடப்பட்டிருக்கிறது. எனவே நீண்ட காலம்



1997 ஏப்ரல் 22]

எடுத்துக்கொள்ளாமல் மிக விரைந்து முடிவெடுத்து அந்த ஊரின் பெயரை திருமுதுகுன்றம் என்று மாற்றி அறிவிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் என்ற பெயரை முதுகுன்றம் என்று மாற்றுவதற்கு சில காலம் ஆகும் என்றுதான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த முடிவு காலமாகும் என்று சொல்லவில்லை. சில காலம் ஆகும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 604, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

முற்பகல் 9-40

**604—**

**கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

***1782—திரு. ஜி. நிஜாமுதீன் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தை கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களையும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்க இயலவில்லை. ஆனால், இம்மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 222 கிராமங்கள், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 57 கிராமங்கள், இஃதன்னியில் 203 வழியோர கிராமங்கள், திருத்துறைப்பூண்டி நகராட்சி, வேதாரண்யம் நகர பேரூராட்சி மற்றும் தலைஞாயிறு ஊரக பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் தற்போது உள்ளது.

[1997 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 605, திரு. உ. திசைவீரன். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

605—

## பரமக்குடியில் சுகாதாரக்கேடு ஏற்படுவதைத் தடுத்தல்

***3863—திரு. உ. திசைவீரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் நகர் எல்லைக்குள் பன்றிகளால் சுகாதாரக்கேடு ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பரமக்குடியில் நகர எல்லைக்குள் சுற்றித் திரியும் பன்றிகளை நகர எல்லைக்கு அப்பால் கொண்டு செல்ல வேண்டுமென்று பன்றி வளர்ப்போர்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. பன்றிகளை நகர எல்லைக்கு அப்பால் கொண்டு செல்லத் தவறினால், பன்றி உரிமையாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நகரில் சுற்றித் திரியும் பன்றிகளைப் பிடித்து அழிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. உ. திசைவீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து சுகாதாரச் சீர்கேட்டைத் தடுக்க முயற்சித்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் நகரத்தில் திரிகின்ற அந்தப் பன்றிகளை அடித்த நகராட்சி ஊழியர்களை, பன்றி வளர்ப்போர்கள் சமூக விரோதிகளை வைத்துக் கொண்டு திருப்பி அடித்து, அடிக்கப்பட்ட பன்றிகளை தலையிலே சுமக்க வைத்து நகராட்சியிலே கொண்டுவந்து போட்டுள்ளனர். அவர்கள்மீது தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தகவல் எதுவும் அரசுக்கு வரவில்லை. அப்படி ஏதாவது இனிமேல் நடந்து தகவல் தருவார்களானால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 606, திரு. ரெ. செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

606 —

## விவசாயப் பொறியியல் மாணவர்களை அரசு செலவில் மேல்படிப்பிற்கு அனுப்புதல்

***4767—திரு. ரெ. செல்வம் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு ஆணை எண் 330 (விவசாயம்) (எ.ச.3) 4-6-1992-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைக்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் விவசாயப் பொறியியல் துறையிலிருந்து அரசு செலவில் மாணவர்களை மேல்படிப்பிற்கு அனுப்பும்முறை நிறுத்தப்பட்டதை அரசு மீண்டும் செயல்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆணை (நிலை) எண் 1606, வேளாண்மை, நாள் 2-7-1982-ன் படியும் மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 330, வேளாண்மை, நாள் 4-6-1992-ன் படியும் வேளாண்மைப் பொறியியல் துறையிலே பணிபுரியும் உதவிப் பொறியாளர்கள் இருவர் அண்ணா பல்கலைக் கழகத்திற்கும், இருவர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும் முதுகலைப் பட்டப் படிப்பு படிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டனர். 1995-ஆம் ஆண்டு முதல் நிதித்துறை தடைவிதித்த காரணத்தால் இப்போது அனுப்பப்படுவதில்லை. இதுபற்றி அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. ரெ. செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் விவசாயப் பொறியாளர்களில் இரண்டு நபர்கள் மேல் படிப்பு படிப்பதற்காக 3 ஆண்டுகள் சென்றுகொண்டிருந்தார்கள். இது 1995-லிருந்து நிறுத்தப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

சொல்லியிருக்கிறார்கள். இதை நமது அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் ஆய்வில் உள்ளது என்றுதான் பதில் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 607, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**607—**

## அரசு தோப்பு அணையைச் சீர் செய்தல்

***2965—திரு. எஸ். வி. கிருஷ்ணன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குநேரி தொகுதி, வடகரை கிராமத்திலுள்ள அரசு தோப்பு அணையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, வடகரை கிராமத்திலுள்ள அரசு தோப்பு அணையிலிருந்து செல்லும் கால்வாயைச் சீரமைக்க தற்பொழுது செயலாக்கத்தில் உள்ள வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதால் இந்த அணைக்கட்டைச் சீர் செய்ய, தனியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 608, திரு. சீ. வெ. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**608—**

## புதிய அரசுப் பேருந்துகள் இயக்குதல்

***5071—திரு. சீ. வெ. கிருஷ்ணன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திண்டுக்கல்-குஜிலியம்பாறை வழித்தடத்தில் கரூர் வரை புதிய அரசுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 104 தனி நடைகள் இந்த வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. எனினும் இவ்வழித்தடத்தில் பயணிகள் விகிதாசாரத்தினை ஆய்வு செய்து தேவையினடிப்படையில் புதிய பேருந்துகள் இயக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. சீ. வெ. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல்லிலிருந்து எரியோடு, கோவிலூர், குஜிலியம்பாறை, பாளையம், கூடலூர் வழியாக இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் சுமார் 15 ஆண்டு காலமாக அந்த வழித்தடங்களில் பஸ் விடவில்லை. திண்டுக்கல்—வேடசந்தூர் வழியாக திருச்சியிலிருந்து தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை விடுகிறது. அதேபோல திண்டுக்கல்—குஜிலியம்பாறை வழியாக தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் இரண்டு பேருந்துகளைக் கூடுதலாக விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 7-4-1996-இல் அந்த மாவட்டத்திலேயே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு. பெரியசாமி ஆகியோர் எல்லாம் கலந்துகொண்டு ஒரு ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின்படி, கரூர்-திண்டுக்கல், குஜிலியம்பாறை வழியாக 6 நடையுள்ள பேருந்துகள் 15-5-1997-லிருந்து விடப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பேருந்துகளினுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, மேலும் அவருடைய கோரிக்கைகளை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. நடராஜன்.

**திரு. டி. நடராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு, சொகுசுப் பேருந்துகளை இயக்கியிருக்கின்றது. இந்த வண்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளை வழங்க அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அரசுத் துறை போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் செல்வதற்காக பாஸ் அளிக்கப்படுகிறது. அது, இந்த சொகுசுப் பேருந்துகளுக்கும் நீட்டிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 609, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**609—**

**வாகனங்களின் பதிவு எண்களைத் தனி வண்ணத்தில் எழுதுதல்**

***6096—திரு. அ. வ. அப்துல் நாசர் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசிற்குச் சொந்தமான அமைச்சர் பெருமக்கள் பயன்படுத்தும் வாகனங்களின் பதிவு எண்களை அண்டை மாநிலமான புதுச்சேரியைப் போல தனி வண்ணத்தில் எழுத ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள சிறப்பு எண்களை, சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில், 5,000 ரூபாய் என்று இருக்கும் கட்டணத்தை வசூலிக்காமல், வருடத்திற்கு





இரண்டு பதிவு எண்களை ஒதுக்கித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே, எண் எழுதப்படுகிற போர்டுகளின் நிறங்களைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்டிருந்தாலும், சிறப்பு எண்கள் வழங்கப்படுவதற்கு ரூ.5,000/- என்பது எல்லோருக்கும் இருப்பதைப் போலத்தானே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதிலே விதிவிலக்கு கொடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 610, திரு. கு. மனோகரன். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**610—**

**விவசாயிகளுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் டீசல் விற்பனை செய்தல்**

*** 6159 – திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் டீசலை எடுத்துச் செல்ல தடை செய்யப்பட்டுள்ளதால், கிராமப்புற விவசாயிகளுக்கு நியாயவிலைக் கடைகள் மூலமாக டீசல் விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு என நியாயவிலைக் கடைகள் மூலம் டீசல் விற்பனை செய்திட இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகள் டீசல் வாங்க வேண்டுமென்றால் சுமார் 20 கி.மீ., 25 கி.மீ. தள்ளி உள்ள நகரப்பகுதிக்குச் சென்றுதான் வாங்கி வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அங்கிருந்து பேருந்துகள் மூலமாக கிராமங்களுக்கு வரும்போது, டீசல்

எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 15-20 கி. மீ. சைக்கிளில் 10 அல்லது 15 லிட்டர் டீசலைக் கொண்டுவருவது மிகுந்த சிரமமாக உள்ளதால் அரசு மறுபரிசீலனை செய்து நியாய விலைக் கடைகள் மூலமாக டீசல் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசலானது மத்திய அரசு நிறுவனங்கள் மூலமாக சில தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டு, அவர்கள்தான் விற்பனை செய்ய இயலும். நியாய விலைக் கடைகளிலே மண்ணெண்ணெய் விற்பனை செய்கின்றபோது கூட்டம் அதிகமாக இருக்கின்றது என்கின்ற காரணத்தினால், அதற்கென்று ஒரு தனித்திட்டத்தை, இன்றைக்கு இந்த அரசு உருவாக்கி, மண்ணெண்ணெய் பங்குகள் அமைத்து, கூட்டத்தைக் குறைக்க வேண்டும் என்ற நடவடிக்கை எடுக்கும்போது, டீசலை அங்கே வைத்து விற்பனை செய்ய இயலாது. மேலும் டீசலை விற்பனை செய்ய வேண்டும் என்றால், அதற்கென்று 'explosives' லைசென்ஸ் எல்லாம் பெற வேண்டும். எனவே அது சுலபமாக முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நியாய விலைக் கடைகள் மூலமாக டீசல் வழங்க இயலாது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியான தாமபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலே, டீசல் பங்குகளுக்குச் செல்வதற்கு சுமார் 25—35 கி.மீ. செல்லவேண்டியிருக்கிறது. சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் டீசலை பேருந்துகளிலே எடுத்து வருவதற்கு இயலாது இருக்கிற காரணத்தினாலே வருத்தப்படுகிறார்கள். ஆகவே, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் வாயிலாக, அங்கே பங்க் தொடங்கி அவர்களுக்கு டீசல் விநியோகம் செய்வது சாலப்பொருத்தமாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மத்திய அரசு நிறுவனம் சம்பந்தப்பட்டது, அவர்களிடம் முதலிலே அதற்கென்று உரிமம் பெற வேண்டும். அவர்கள் உரிமம் தருவதற்கு ஒப்புதல் தர வேண்டும். அப்படி ஒப்புதல் தந்தால், தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் மூலமாக விற்பனை செய்ய இயலுமா என்பதை ஆய்வு செய்யலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் டீசலை விற்பனை செய்வதற்கான சூழ்நிலையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே பல சிரமங்கள் இருந்தாலும், இந்த டீசலை நகரத்திலிருந்து கிராமப்பகுதிக்கு விவசாயிகள் வாங்கிகொண்டு செல்லும்போது, பேருந்திலே தடையில்லாமல் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, அந்தத் தடையை நீக்கி, விவசாயிகளுக்கு ஆதரவு கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைத்தான் நானும் கேட்க இருந்தேன். ஆனால், அன்புக்குரிய உறுப்பினர் அவர்களே அதைக் கேட்டுவிட்டார்கள். நன்றி. எனவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று மீண்டும் நான் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுபற்றி நீங்கள் அமைச்சருடைய அறையில் போய்த்தான் கேட்க வேண்டும்.

வினா எண் 611, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 22

611—

**பால் விநியோகத்தில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டுதல்**

***5321—திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் விநியோகம் செய்யும் வாகனங்களில் ஏற்படும் கசிவின் நஷ்டத்தை ஈடுகட்ட எத்தனை லிட்டர் பால் ஒதுக்கப்படுகிறது ?

(ஆ) தினசரி சென்னை நகர பால் விநியோகத்தில் அவ்வாறு ஒதுக்கப்படும் பாலின் மதிப்பு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பால் விநியோகம் செய்கிற வாகனங்களில் ஏற்படும் கசிவின் நட்டத்தை ஈடுகட்ட, ஒவ்வொரு நட வண்டியிலும், அவ்வாகனம் ஏற்றிச் செல்லும் பாலின் அளவில் 0.5% அளவு பால் ஒதுக்கப்படுகிறது.

(ஆ) சென்னை நகரில் ஒதுக்கப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு சுமார் 3,750 லிட்டர் ஆகும்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலிதீன் பைகளில் அடைக்கப்படுகின்ற பால் விற்பனை செய்யப்படும்பொழுது அதிலே முறைகேடுகள் நடப்பதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது. கொள்முதல் செய்யப்படுகிற பாலிதீன் பைகள் மிகவும் தரக்குறைவாக உள்ளன. இப்படி தரக்குறைவான பாலிதீன் பைகள் கொள்முதல் செய்யப்படுவதோடு, லீக்கேஜ் என்ற பெயரிலே, ஒதுக்கப்படுகிற பாலும் மோசடி செய்யப்படுகிறது. எனவே, தரமான பாலிதீன் பைகளைக் கொள்முதல் செய்வதற்குரிய கொள்முதல் கொள்கையை உருவாக்குவதோடு, தனியாரிடம் விடப்பட்டிருக்கின்ற லாரிகளுக்குப் பதிலாக பால்வளத் துறை டேங்கர்களைப் பயன்படுத்துவதற்கும் அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் தரமில்லாத பாலிதீன் பைகள் கொள்முதல்



1997 ஏப்ரல் 22]

செய்யப்பட்டன என்பது உண்மை. ஆனால் தற்போது தரமுள்ள பாலிதீன் பைகளில்தான் பால் அடைக்கப்படுகிறது. அதேபோல் சென்னை மாநகரத்திற்கு மட்டும் 5 இலட்சம் லிட்டர் பால் பாலிதீன் பைகளில் அடைத்தும், 3,20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர்களில் எடுத்துச்செல்லப்பட்டு தானியங்கி பால் வழங்கு நிலையங்கள் மூலமும் விநியோகம் செய்யப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் செய்யப்படும் பால் அவ்வப்போது கெட்டுப்போய் விடுகிறது. அப்படிக் கெட்டுவிட்ட பாலிலிருந்து இரண்டாம் தர நெய் தயாரிப்பது போல, whey என்ற பொருளையும் தயார் செய்து இந்த நட்டத்தை மேலும் குறைப்பதற்கு அரசிடம் கருத்துரு ஏதும் உள்ளதா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெட்டுவிட்ட பாலைக் கொண்டு இரண்டாம் தர நெய் செய்கின்ற முறைதான் தற்போது கையாளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பற்றிப் பின்னர் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் குறைந்த பாலிதீன் பைகள் கடந்த காலத்தில் கொள்முதல் செய்யப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நமது மாநிலத்தில் பெண்களே கூட்டுறவுத் துறையில் பாலிதீன் பைகளை உற்பத்தி செய்கிறார்கள். அவர்களிடம் அந்தப் பைகளைக் கொள்முதல் செய்யாத காரணத்தால் திண்டுக்கல்லில் பெண்களே நடத்துகின்ற கூட்டுறவுச் சங்கமானது இப்போது நட்டத்திலே இயங்கி, அதனால் வேலையில்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, தரமான பாலிதீன் பைகளை பெண்களே நடத்தும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் டன் கணக்கில் பாலிதீன் பைகளைக் கொள்முதல் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மாதிரி,

[1997 ஏப்ரல் 22

அங்கே அதிக அளவு பாலிதீன் பைகள் உற்பத்தி செய்யப்படுமானால் வாங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனத்திலே பாலை எடுத்துச் செல்லுகின்றபோது லீக்கேஜ் வருகிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று பேக்டரியிலே பாலிதீன் பைகளில் பாலை அடைக்கின்றபோது பேக்டரிக்குள்ளேயே லீக்கேஜ் வரும் சூழ்நிலையும் உள்ளது. இப்படி லீக்கேஜ் எதுவும் இல்லாமல் பால் விற்பனையை இலாபகரமாக நடத்துவதற்கு, லீக்கேஜைக் கட்டுப்படுத்துவதற்கு, குறைப்பதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நவீன முறையில் பாலிதீன் பைகளில் பாலை அடைக்கின்ற இயந்திரம் இருக்கிறது. அந்த இயந்திரத்தின் மூலம் பால் அடைக்கப்படுவதால் இப்போது தவறுகள் ஏற்படுவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

முற்பகல் 9-55

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறையின் மூலமாக நடத்தப்படுகிற டெப்போக்களில், ஒரு நாள் பால் வரவில்லை என்றால், அடுத்த நாள், இரண்டு நாள் பாலையும் சேர்த்து வாங்கிக் கொண்டாக வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அந்த முறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றியமைப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறை ஏதுமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.



1997 ஏப்ரல் 22]

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உற்பத்தியாகும் பாலை, பெரியார் மாவட்டத்திலுள்ள சங்கத்தின் மூலமாக வாங்குகிறார்கள். எனது சொந்த மாவட்டத்திலே ஏற்கெனவே பால் உற்பத்தியாளர் சங்கம் இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தொகுதியைப் பற்றி, உங்கள் மாவட்டத்தைப் பற்றி முதலில் கேளுங்கள்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் உற்பத்தியாகும் பாலை, பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலமாக வாங்குகிறார்கள். ஒட்டன்சத்திரத்தில் உற்பத்தியாகும் பால், திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டச் சங்கத்தின் மூலமாக வாங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் போதுமான வாகனங்கள் இல்லாத காரணத்தால், பெரியார் மாவட்டச் சங்கத்தின் மூலமாக வாங்கப்படுகிறது. ஆகவே அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 612, திரு. செங்கை சிவம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**612—**

### கருணை அடிப்படையில் பணியமர்த்துதல்

***1947— திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுத் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் பணிக் காலத்தில் இறக்க நேரிட்டால் அவர்களுடைய வாரிசுதாரரை கருணை அடிப்படையில் உடனடியாகப் பணியமர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 22

பணியிலிருக்கும்பொழுது இறக்க நேரிடும் அரசுப் பணியாளர்களின் குடும்பம் வறிய நிலையில் இருந்தால் அவர்களின் வாரிசுகளுக்கு அந்தந்த அரசுத் துறை அல்லது அரசுத் துறை நிறுவனத்தில் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்க அரசால் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை வாரியாக எவ்வளவு பேருக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு இன்னும் வழங்கப்பட வேண்டும்? குறிப்பாக மிகப் பெரியத் துறைகளான கல்வித்துறை, மின்துறை, மருத்துவத்துறை போன்ற துறைகளில், கடந்த ஆட்சிக் காலத்தில் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்புகள் கொடுக்கப்படாமல் இருந்தன. இன்றைக்கும் அந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் குறிப்பாக நம்முடைய மின்துறையில், இதுவரை 529 பேருக்கு, 8-ஆம் வகுப்புக்குமேல் படித்தவர்களுக்கு கருணை அடிப்படையிலே வேலை வழங்கியிருக்கிறார்கள். அதுபோல 1990-ல் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறபோது 8ஆம் வகுப்புக்குக் கீழே படித்தவர்களையும், அவர்களுடைய கல்வித் தகுதியைத் தளர்த்தி, அவர்களை பியூன், வாட்ச்மேன், ஸ்வீப்பர், ஹெல்பர் போன்ற பணிகளில் அமர்த்தினார்கள். அப்படி மீதம் இருக்கிற பல பேர்களுக்கும்—8ஆம் வகுப்புக்குக் கீழே படித்தவர்களுக்கும், கல்வித் தகுதியைத் தளர்த்தி இப்படிப்பட்ட வேலைவாய்ப்புகளை பல்வேறு துறைகளில் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பல்வேறு துறைகளில் எவ்வளவு பேருக்கு கருணை அடிப்படையிலே வேலைவாய்ப்பு தரப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார். தனிக் கேள்வி போட்டால்தான் துறைவாரியாக எவ்வளவு பேர் என்று சொல்ல முடியும். ஆனால் கேள்வியின் அடிப்படைக் கருத்து, காலதாமதம் ஆகிறது என்பதுதான். கருணை அடிப்படையில் பணிகளில் அமர்த்துவதற்குக் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார். காலதாமதத்திற்கு அடிப்படைக் காரணம், மனு செய்பவர்கள் தேவையான விவரங்களை—குடும்பத்தின் வறுமை நிலை சம்பந்தமான விவரங்கள், வாரிசு சம்பந்தமான விவரங்கள்—கொடுப்பதிலே காலதாமதம் ஆகிறது. அரசுத் துறையிலே எந்தவிதமான காலதாமதமும் இல்லை. சர்வீஸ் கமிஷனுடைய (தேர்வாணைக் குழுவினுடைய)



1997 ஏப்ரல் 22]

வரம்புக்குள் வராத பதவிகளைப் பொறுத்தவரையில் அதிகாரிகளே கருணை அடிப்படையில் நியமனம் செய்யலாம். அரசுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. சர்வீஸ் கமிஷனின் வரம்புக்குட்பட்ட பதவிகளில் கருணை அடிப்படையில் நியமனம் செய்வதைப் பொறுத்தமட்டில், அதன் செயற்குறிப்பை அரசுக்கு அனுப்ப வேண்டும்; அரசு அதைப் பரிசீலித்து சர்வீஸ் கமிஷனுடைய அனுமதியுடன் உத்தரவு போடும். ஆகவே இதில் எந்தக் காலதாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. க. ஸ்டாலின்.

**திரு. மு. க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்து போனால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்குகிறபோது, அவர்கள் எந்தத் துறையிலே வேலை பார்த்தார்களோ, அந்தத் துறையில்தான் வேலை வழங்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆகவே இதைத் தளர்த்தி, வேலைவாய்ப்பு காலியாக இருக்கின்ற பல்வேறு துறைகளில் கருணை அடிப்படையில் நியமிக்க வாய்ப்பு உண்டா என்பதை நான் அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு[illegible] உறுப்பினர் சொல்வது போன்ற கருத்து நடைமுறையில் இருக்[illegible]இருந்தாலும், அந்த விதிகள் எப்படி என்பதை ஆய்ந்துதான் சம்பந்தப்பட்ட துறைகளில் அந்த வாய்ப்பு இல்லை என்று சொன்னால் வேறு துறைக்கு அதை பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை அடிப்படையில் வேலை கொடுப்பதற்கு பல ஆண்டுக்காலம் ஆகின்றது. முன்னுரிமைப்படிதான் கொடுக்கப்படும் என்று சொல்வதனால் அந்தக் குடும்பம் நலிந்த நிலையிலேயே இருக்கின்றது. அரசு ஊழியர் இறந்தவுடனே அவர் குடும்பத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் வேலை கொடுக்க வேண்டும் என்ற நடைமுறையை அரசு பின்பற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதத்திற்கு பல்வேறு காரணங்களை நான் எடுத்துச்

[1997 ஏப்ரல் 22

சொல்லி இருக்கிறேன். குறிப்பிட்ட நேரம் (Stipulated period) என்று வரையறுக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிக்காலத்தில் இறக்க நேரிடுகிற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் விண்ணபிக்க வேண்டும் என்ற நடைமுறை உள்ளது. வாரிசுதாரர்கள் சிறு வயதினராக இருந்தால், அவர்களால் குறிப்பிட்ட அந்தக் காலத்திற்குள் விண்ணப்பிக்க முடியவில்லை. உரிய வயதை அடைந்ததும் அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால் அதையொட்டி கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உறுப்பினரின் மனிதாபிமான அடிப்படை குறித்த கருத்தை கவனத்தில் கொண்டு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குணமடைந்த தொழுநோயாளர் மறுவாழ்வு மற்றும் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று அரசு ஆணை இருக்கிறது. இருந்தாலும்கூட, அதிலே விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரையிலே வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை. ஆகவே, இதுகுறித்து அரசு பரிசீலனை செய்து அவர்களுக்கும் கருணை அடிப்படையிலே வேலை வாய்ப்பு வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவதுபோல புகார் இதுவரையும் அரசின் கவனத்திற்கு வரவில்லை; கவனத்திற்கு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்குவதிலே இத்தனை சதவீதம்தான்



1997 ஏப்ரல் 22]

வழங்கப்பட வேண்டும் என்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதனால்தான் பல ஆண்டுகள் காலதாமதம் ஆகிறது. எனவே, கருணை அடிப்படையிலே வேலை வழங்குவதற்கான சதவீதத்தை உயர்த்திக் கொடுத்தால், பிற்காலத்தில் வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்கு வழிவகை ஏற்படும்; அதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் பணியாற்றும்போது இறந்துவிட்டால் வாரிசுதாரர் ஒருவருக்கு வறுமையின் காரணமாக இருக்கின்ற சூழ்நிலையில், கருணையின் அடிப்படையிலே அரசு பணி தருகிறது. இதில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையே பின்பற்றப்படவில்லை; இவ்வளவு சதவீதம்தான் கொடுக்கப்பட வேண்டும் என்ற வரையறையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணை அடிப்படையில் வேலை பெற்ற ஒருவர், வேலை பெற்ற 6 மாதத்தில் திருமணம் ஆகாமல் ஆக்சிடென்டில் இறந்து விடுகிறார். அப்படியானால் அவருடைய தம்பிக்குக் கருணை அடிப்படையிலே வேலை வழங்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சிக்கல்களை ஆய்ந்துதான் பதில் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய வாரிசுகள் வேலை கோருகிறபோது பல ஆண்டுகள் காத்து இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. சில நேரங்களில் அந்த வாரிசுகள் வயது வரம்பைக் கடந்து விடும் நிலை இருக்கிறது. உதாரணமாக என்னுடைய தொகுதியில் நான் ஒருவருக்கு வேலைவாய்ப்புக்கு முயற்சி செய்கிறபோது, அவர் 45 வயதைக் கடந்து விட்டார். அவருக்கு வேலைவாய்ப்புத் தர முடியாது என்று சொல்லுகிறார்கள். எனவே, அவர்களுக்கு வயது வரம்பிலே இருந்து விதிவிலக்கு அளித்து வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலே பணி வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக வாரிசுதாரர்களைப் பொறுத்தமட்டில் 30 வயது என்று பொதுவாக வயது வரம்பு வாரிசுதாரரின் மகனுக்கோ, மகளுக்கோ வைக்கப்பட்டு இருக்கிறது. அதேநேரத்தில் விடோயராக இருந்தால் 40 வயதும், விதவைப் பெண்ணாக இருந்தால் 50 வயதும் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏராளமான உறுப்பினர்கள் கையைத் தூக்கிக்கொண்டு இருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் இதிலே பெரும்பாலான துணை வினாக்கள் மாண்புமிகு முதலமைச்சர் முடிவு எடுக்க வேண்டியது. பாவம். அந்த அமைச்சர் ஒன்றும் செய்ய முடியாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்களுடைய வினாக்களும் பணிக் காலத்திலே இறந்துவிட்ட அரசு அலுவலர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலே வேலை வழங்குவது பற்றியது ஆகும். கருணைக்கு உச்சவரம்பு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில உறுப்பினர்கள் இங்கே எழுப்பிய வினாக்களில், அந்த வினாக்களுக்கு உரியவர்களாக இருக்கின்ற வாரிசுதாரர்கள் விண்ணப்பங்கள் அவ்வப்போது தனித் தனி நேர்வுகளாகக் கருதப்பட்டு, தனித் தனி ஆய்வு செய்யப்பட்டு, இரக்க மனப்பான்மையினுடைய அடிப்படையிலே, அவர்கள்மீது எந்த வகையான இரக்கம் காட்டுவது, எந்த வகையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது என்பதை அரசு தனியாக அவ்வப்போது பரிசீலனை செய்யும். இந்தக் கோப்புகள் எல்லாம் என்னிடத்திலே வருகிற நேரத்தில் உறுப்பினர்களுடைய கேள்விகளை நிச்சயமாக மனதிலே பதிய வைத்துக் கொண்டு முடிவு எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 613, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 22]

**613—**

**தாசப்பளஞ்சிகா இனத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்**

***3503-திரு. ஜி. பி. வெங்கிடு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாசப்பளஞ்சிகா என்கிற இனத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு வகுப்பு, பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படத் தகுதி வாய்ந்ததுதானா என்பதைக் கண்டறிய தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் சில அளவு கோல்கள்/குறியீடுகளை நிர்ணயித்துள்ளது. அவ்வாணையம், தாசப்பளஞ்சிகா இனத்தை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திடும் பொருட்டு செய்கின்ற பரிந்துரையின் அடிப்படையில், அவர்களது கோரிக்கை அரசினால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாசப்பளஞ்சிகா' என்ற அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், காரமடை போன்ற பகுதிகளிலேதான் இருக்கிறார்கள். மிகச் சிறுபான்மையினராக இருக்கிற அவர்களுக்கு பெரியார் மாவட்டத்திலே இரண்டொரு ஊர்களிலே மட்டும்தான் உறவு என்று சொல்லக்கூடிய வகையிலே சிலர் இருக்கிறார்கள். அப்படியிருக்கிற அந்தச் சிறுபான்மையோர் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மிகவும் தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் அரசுப் பணிகளிலே இருக்கிறார்கள் என்று சொல்லத்தக்க அளவிற்கு ஓரிருவர் கூட இல்லை. ஆகவே, பொருளாதாரத்திலும் கல்வியிலும் தாழ்ந்த நிலையிலே இருக்கிற 'தாசப்பளஞ்சிகா' என்ற அந்தச் சிறுபான்மை இனத்தவரை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்த்து அவர்களுக்குப் புனர்வாழ்வு தருகின்ற ஏதாவது ஒரு திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை மட்டும்தான் நான் அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாசப்பளஞ்சிகா' இனத்தவரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திடக் கோருவது தொடர்பான பரிந்துரையை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் அரசுக்கு அனுப்பியுள்ளது. அவ்வாணையத்தின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ராஜு.

**திரு. எஸ். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு வேளாளர் சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விடை தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்? அக்கோரிக்கைகளின்மீது அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 614, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 22]

**614—**

## இலவம்பஞ்சு பயிரிடும் விவசாயிகளுக்குத் தீர்வையை முறைப்படுத்துதல்

***5944—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் வனப்பகுதியில் இலவம்பஞ்சு விவசாயம் செய்திருக்கும் விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வருடாந்திர தீர்வையைக் குறைப்பதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) போடிநாயக்கனூர் வனப்பகுதியில் இலவம்பஞ்சு விவசாயம் செய்திருக்கும் விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வருடாந்திரத் தீர்வையைக் குறைப்பதற்கு அரசிடம் உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 615, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**615—**

## பூம்புகாரில் தொழில் மையம் அமைத்தல்

***4111—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், பூம்புகாரில் தொழில் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், பூம்புகாரில் தொழில் மையம் அமைக்கும் பிரேரணை ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) மேற்படி தொழில் மையம் அமைக்கும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் முன்னாலே முதலமைச்சராக இருந்தபோது பூம்புகாரிலே தொழில் மையம் அமைப்பதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டன. அதற்கென இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், ஆட்சி மாறியதால், அது கலைஞர் அவர்களால் செய்யப்பட்டது என்ற காரணத்தினாலே அதை விட்டுவிட்டார்கள். எனவே, கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட பூம்புகார் இன்றைக்குச் சிறப்பாக இருக்கின்ற இந்த நேரத்தில் அங்கே தொழில் மையம் அமைக்க ஏற்பாடு செய்து அங்கேயுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிப்பதற்கு அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, அரசு புறம்போக்கு நிலங்கள் அங்கே இருந்தால் வருங்காலத்திலே பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 616, திரு. என். பாண்டுரங்கன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

616—

**சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைத்தல்**

*6259—திரு. என். பாண்டுரங்கன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில், இரகுநாதசமுத்திரம் ஊராட்சியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் இரகுநாதசமுத்திரம் ஊராட்சியில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்த திட்டம் எதுவும் தற்போது சிட்கோவிடம் இல்லை.

முற்பகல் 10-10

**திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதி என்பது மிக மிகப் பின்தங்கிய தொகுதியாகும், இங்கே வாழ்கிற மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கிற மக்களாக இருக்கிறார்கள். இவர்கள் மழைக் காலங்களைத் தவிர மற்ற காலங்களில் வயிற்று பிழைப்புக்காக சென்னை, மும்பை, பெங்களூர் போன்ற பெரு நகரங்களுக்குச் செல்கிறார்கள். எனவே அவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடுகிற வகையிலும், அந்தப் பகுதியில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையிலும், அந்தப் பகுதியில் சிட்கோ மூலம் தொழில்பேட்டை அமைக்க அரசு முன்வருமா? அங்கே ஏற்கெனவே 35 ஏக்கர் தரிசு நிலம் சிட்கோவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, அங்கே அரசு புறம்போக்கு நிலம் இருந்தால் வருகிற காலத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 617, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 22

617—

## உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் அளித்தல்

***4381-திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உடல் ஊனமுற்றோர் அனைவருக்குமே இலவச பேருந்து பயணச் சலுகை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர்கள் சில பேர்களுக்கு மட்டும் நீங்கள் இலவச பஸ் பாசை வழங்கிவிட்டு சில பேர்களுக்கு வழங்காமல் இருக்கிறபோது, அந்த உடல் ஊனமுற்றவர்கள் ஏற்கெனவே பாதிப்புக்குள்ளாகி கவலையில் தவித்துக் கொண்டிருப்பவர்கள், இன்னும் கவலைக்குள்ளாகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே, அரசுப் பேருந்துகளில் நீங்கள் தாராளமாக எல்லோரையும் அனுமதிக்கிறபோது சமூக நலத் துறையில் இதற்காக ஒரு கணிசமான தொகையை வழங்கி 40 சதவீத உடல் ஊனமுற்றவர்கள் அனைவருக்குமே அல்லது அதற்கு மேலிருப்பவர்கள் எல்லோருக்கும் நாம் இலவச பஸ் பாஸ் வழங்கலாம் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா, சமூகநலத் துறை அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடிதான் தற்போது 40 சதவீத உடல் ஊனமுற்றவர்கள் அனைவருக்குமே இந்தப் பயணச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுடைய குடும்ப வருமானம் ஆண்டுக்கு 12,000 ரூபாய் என்று இருக்க வேண்டும். அந்தச்



1997 ஏப்ரல் 22]

சான்றிதழை அவர்கள் பெற்று மாவட்ட மறுவாழ்வுத் துறை அலுவலரிடத்திலே தருவார்களானால் மாவட்ட மறுவாழ்வுத் துறை அலுவலர் மூலமாக அவர்களுக்கு இலவச பேருந்துப் பயணச் சலுகை நிச்சயமாக வழங்கப்படும். அதைப்போல உடல் ஊனமுற்றவர்களில் கண்பார்வையற்றோர்களும், கால் முடமானவர்களும் விரைவுப் பேருந்தில் செல்கிற வசதியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்சமயம் அளிக்குமாறு உத்தரவிட்டு இருக்கிறார்கள். ஆகவே ஆண்டிற்கு ஒருமுறை அந்த வசதியும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு வரையில் 11,000 பேர்கள் இந்தப் பேருந்துப் பயணச் சலுகை பெற்றிருக்கிறார்கள். 1996-97ஆம் ஆண்டில் 12,000 பேர்கள் சலுகை பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும் இலவசப் பயணம் செய்ய பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றி அனைத்து பேருந்துகளில் செல்வதற்கும் அரசு பாஸ் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர், தான் தங்கியிருக்கிற இடத்திலிருந்து மருத்துவ சிகிச்சை பெறுகிற இடத்திற்கு அல்லது தான் தங்கியிருக்கிற இடத்திலிருந்து பயிலுகிற பள்ளி, கல்லூரி போன்ற கல்விக்கூடங்களுக்கும் மற்றும் அவர்கள் பயிற்சி மேற்கொள்கிறார்கள் என்று சொன்னால் சுயவேலைப் பயிற்சிக்குச் செல்கிற இடங்களுக்கும், அவர்கள் தொழில் செய்கிறவர்களாக இருந்தால் பணிபுரிகிற இடத்திற்கும் செல்லலாம் என்ற அளவில்தான் உடல் ஊனமுற்றவர்களுக்கு பேருந்துப் பயணச் சலுகைக் கட்டணம் அளிக்கப்படுகிறது என்பதால் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இச்சலுகை தர வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குகிற மாதிரி வாய் பேசாத ஊமைகளுக்கும் பஸ் பாஸ் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



V24, 31/11/97 N97.32.216654.

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் என்ற தகுதி வாய் பேசாதவர்களுக்கும், காது கேட்காதவர்களுக்கும், மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் இலவசப் பயணம் செய்வதற்கு குடும்ப ஆண்டு வருமானம் 12,000 ரூபாய் என்று இருப்பதை குறைந்தபட்சம் 25,000 ரூபாய் என்று உயர்த்துவதற்கு சமூகநலத் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் ஊனமுற்றவர்கள் என்று பாதிப்புக்குள்ளானவர்களுக்கு 12,000 ரூபாய் என்று இருந்த ஆண்டு வருமான வரம்பை 15,000 ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறோம். மற்ற ஊனமுற்றவர்களுக்கு இந்த ஆண்டு வருமான வரம்பை உயர்த்த வேண்டுமென்று உறுப்பினர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதில், நிதித் துறையினுடைய குறிப்பையும் பார்த்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கையே இல்லாத தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒருவருக்கு இலவச பஸ் பாஸ் வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அது எந்த வகையில் வரும்? 40 சதவிகிதத்திற்கு வருமா, அல்லது அதைவிட குறைவான சதவிகிதத்திற்கு வருமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவருக்கும் மருத்துவமனைக்குப் போகிறவரைக்கும்தான் அந்தச் சலுகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதுகுறித்துப் பரிசீலனை செய்து அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு சிறப்புச் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர் என்ற அடிப்படையில் ஒரு கை இழந்தவருக்கு பேருந்துப்பயண சலுகைக் கட்டணம் நிச்சயமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அனைவருக்கும் எப்போதுமே சென்று வருவதற்கான இலவச பஸ் பாஸ் அளிப்பதற்கு தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 618, திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**618—**

### சோழகர் இனத்தவருக்குச் சாதிச் சான்றிதழ்கள் வழங்குதல்

***4518—திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட ஆட்சியர் சோழகர் வேறு சோழகா என்பவர் வேறு எனக் கூறுவதால் அவ்வினத்தவர்கள் சாதிச் சான்றிதழ் பெற முடியாதுள்ளது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசாணை எண் 1773, சமூக நலத் துறை, நாள் 23-6-1984-ன்படி பழங்குடியினர் பட்டியலில் சோழகர் என்ற சொல் இடம் பெறவில்லை. 'சோழகா' என்று மட்டுமே பழங்குடியினர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதால் 'சோழகா' என்ற

[1997 ஏப்ரல் 22

இனத்தவருக்கு மட்டுமே பழங்குடி இனத்தவருக்கான சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சோழகர் என்பது ஆங்கிலத்தில் சோழகா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டியலில் 'சோழகா' என்பதை மொழி பெயர்க்கும்போது தமிழிலும் 'சோழகா' என்று இடம் பெற்றதால் அந்தச் சமுதாய மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படாமல் மறுக்கப்பட்டு வருகிறது. 'சோழகர்' சமுதாய மக்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் எவ்வாறு குடியேறினார்கள் என்பதை மலைவாசிகள் பற்றி ஆராய்ந்து புத்தகம் எழுதிய ஆசிரியர் 'பிலோ இருதயநாத்' அவர்கள் 'மேற்கு மலைவாசிகள்' என்ற புத்தகத்திலே தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1970-ஆம் ஆண்டு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்கூட இந்தப் புத்தகத்திற்கு முன்னுரை எழுதியுள்ளார்கள். 15 ஆண்டு காலமாக அந்த மக்கள் சாதிச் சான்றிதழ் கிடைக்காமல் மிகவும் இன்னல்பட்டு வருகிறார்கள். ஆகவே அவர்களுடைய பிரச்சினையை மைய அரசுக்குப் பரிந்துரை செய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய மூல வினாவை விட துணை வினாதான் ரொம்ப நீளமாக இருக்கிறது. மிகச் சுருக்கமாக கேட்க வேண்டும். அதுதான் மரபு.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சோழகா' என்பதை 'சோழகர்' என்று பட்டியலில் பெயர் மாற்றம் செய்வதற்கு மைய அரசுக்குப் பரிந்துரை செய்வதோடு, மைய அரசு இறுதியான முடிவு எடுக்கும் வரை அவர்களுக்கு பழங்குடியினர் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சோழகர்' என்பதும் 'சோழகா' என்பதும் ஒன்று என்று கூறுகிறார்கள். 'சோழகர்' என்ற சொல் பழங்குடி இனப் பட்டியலிலோ, மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலோ இடம் பெறவில்லை. 'சோழகா' என்று மட்டும்தான் இடம் பெற்று இருக்கிறது. மேலும் 'சோழகா' என்று நீங்கள் எந்த அலுவலகத்திற்கும் சென்று சாதிச் சான்றிதழ் கேட்கும்போது கொடுக்க மறுத்தாலோ, அதில் தாமதம் ஏற்பட்டாலோ உடனுக்குடன் புகார் செய்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 22]

அதேநேரத்தில், இந்த 'சோழகர்', 'சோழகா' என்ற இரண்டும் ஒன்று என்றால் அதையும் ஆராய்ந்து மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 619, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**619—**

**குத்தாலம் பகுதியில் சுற்றுலாப் பேருந்து இயக்குதல்**

***653— திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் பகுதியில் நவக்கிரக தலங்களுடன் திருமணஞ்சேரி போன்ற தலமும் உள்ளதால் அவற்றைச் சுற்றிப் பார்க்க வரும் பயணிகளுக்கு சுற்றுலாப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நவக்கிரகத் தலங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காக, இந்து சமய அறநிலையத் துறை சொகுசுப் பேருந்து ஒன்று வாங்கி, அதனை இயக்கும் பொறுப்பை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைத்தது. இவ்விதம் ஒப்படைக்கப்பட்ட சொகுசுப் பேருந்து, இன்னும் இயங்க ஆரம்பிக்கவில்லை. இப்பேருந்தினை இயக்குவதற்கு, இந்து சமய அறநிலையத் துறையினரும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் கலந்து பேசி வருகின்றனர். அவ்விதம் கலந்து பேசி பேருந்து இயக்கப்படும்பொழுது, நவக்கிரகத் தலங்களுடன் திருமணஞ்சேரி போன்ற தலங்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்பதை உறுப்பினருக்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்தினுடைய சிறப்பு திருமணம் ஆகாத ஆண்களும், பெண்களும் அங்கு சென்று வழிபட்டால், அவர்களுக்கு,

[1997 ஏப்ரல் 22

உடனடியாக திருமணம் ஆகும் என்பது ஒரு ஐதீகம். அந்த ஆலயத்தைச் சுற்றி 'டெம்பிள் சிட்டி' என்று சொல்லப்படுகிற குடந்தை நகரம், நாகூர், வேளாங்கண்ணி போன்ற பகுதிகள் இருக்கிற காரணத்தால், அவற்றோடு இணைத்து, பக்தர்கள் வரக்கூடிய அளவிற்கு சுற்றுலாப் பேருந்துகள் இயக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நிச்சயமாக இயக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 620, திரு. கே. மணிவர்மா, மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**620—**

## சோப்பு அலகு தொடங்குதல்

***3595—திரு. கே. மணிவர்மா:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு பகுதியில் கதர் கிராமம் கைத்தொழில் வாரியத்தின் மூலம் சோப்பு அலகு தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தண்டராம்பட்டு பகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் சோப்பு அலகு தொடங்குதல் செயற்குறிப்பு கதர்வாரியத்தின் பரிசிலனையில் தற்போது இல்லை.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு தொகுதியில் பின்தங்கிய மற்றும் மலைவாழ் பழங்குடி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்கள், தானிப்பாடி, பீமரப்பட்டி, ஆத்திப்பாடி, கல்நாட்டூர், உள்சக்கடி, உடையார்குப்பம் போன்ற கிராமங்களில் எந்தத் தொழிலும் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்கள் வாழ்க்கை நடத்த தகுந்த ஊதியம் பெறும்விதத்தில், கதர் கிராம வாரியத்தின் மூலம் சோப்பு அலகு மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற சிறுதொழில்கள் புரிய அரசு மறுபரிசிலனை செய்து, சிறுதொழில்



1997 ஏப்ரல் 22]

தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், கடலாடி என்னும் இடத்தில் சோப்பு அலகு ஒன்று இயங்கி வருகிறது. அங்கு சோப்பு உற்பத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அதே மாவட்டத்தில் தோக்கவாடி என்னும் இடத்தில் சோப்பு அலகுக்குத் தேவைப்படும் எண்ணெய் பிழியும் அலகும் செயல்பட்டு வருகிறது. எனவே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் தண்டராம்பட்டு பகுதியில் மேலும் ஒரு சோப்பு அலகு துவங்கும் செயற்குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) குறுகிய கால வினா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து குறுகிய கால வினா எண் 2 திரு. ம. அப்துல் லத்தீப், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

குறுகிய கால வினா எண் 2

## ஆதிதிராவிட மக்களுக்கு விட்டுமனைப்பட்டா வழங்குதல்

**திரு. ம. அப்துல் லத்தீப் :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி வட்டம், சான்றோர் குப்பத்திலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க சாதகமாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும், இன்னமும் அவர்களுக்கு மனைப்பட்டா வழங்காதது குறித்தும், பெரியாங்குப்பத்தில் நில உரிமையாளரே ஒப்புதல் கடிதம் கொடுத்த பிறகும் இன்னமும் அவர்களுக்கு மனைப்பட்டா வழங்காதது குறித்தும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 22

(அ) மற்றும் (ஆ): இதுகுறித்து விவர அறிக்கை ஒன்று அவையிலே வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

வாணியம்பாடி வட்டம், சான்றோர்குப்பம் என்று தற்போது அழைக்கப்படும் சாணாங்குப்பம் கிராமத்தில் வசிக்கும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க வேண்டி மேல்கிருஷ்ணாபுரம் கிராமம் புல எண் 77/2-ல் 0.57 ஏக்கர், புல எண் 78-ல் 1.34 ஏக்கர் மற்றும் சாணாங்குப்பம் புல எண் 107/4-ல் 0.76 ஏக்கர், ஆக மொத்தம் 2.67 ஏக்கர் நிலங்களை மேற்படி கிராமங்களில் நில எடுப்பு சட்டம் 1894-ன் கீழ் கையகம் செய்ய 18-10-1993 அன்று நில எடுப்பு அலுவலரால் [தனிவட்டாட்சியர் (ஆதிந), திருப்பத்தூர்] மேற்படி சட்டத்தின் பிரிவு 4(1)-ன் கீழ் அறிவிக்கை வெளியிட முன்மொழிவு வடஆற்காடு (அம்பேத்கர்) மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இம் முன்மொழிவை மாவட்ட ஆட்சித் தலைவர் 3-9-1985 அன்று சட்டப்பிரிவு 4(1)-ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் வேண்டி அரசுக்கு அனுப்பியிருந்தார். அரசு ஆணை (நிலை) எண் 2359, சமூக நலத் துறை, நாள் 18-11-1985 பிரிவு 4(1)-ன் கீழான அறிவிக்கைக்கு அரசு ஒப்புதல் அளித்தது. இதன்மீது நில எடுப்பு அலுவலர் தொடர் நடவடிக்கை எடுத்து நில எடுப்பு சட்டத்தின் பிரிவு 5(ஏ)-ன்படி நில உரிமையாளர்களை விசாரிப்பதற்கு உரிய அறிவிப்பு கொடுத்து 31-1-1986-ல் விசாரணை மேற்கொண்டார். இவ்விசாரணையின்போது நில உரிமையாளர் திரு. சந்திரமோகன் நில எடுப்பு அலுவலர் முன் விசாரணைக்கு வரவில்லை. எழுத்து மூலமும் நில எடுப்புக்கு எந்தவிதமான மறுப்போ, எதிர்ப்போ தெரிவிக்கவில்லை. எனவே, நில எடுப்பிற்கான நடவடிக்கை தொடரப்பட்டு, சட்டத்தின் பிரிவு 6-ன் கீழ் வெளியிடப்பட வேண்டிய விளம்பல் அறிவிக்கை முன்மொழிவு நில எடுப்பு அலுவலரால் 3-6-1986 அன்று மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் சிறப்பு நில நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு 5-12-1986-ல் அனுப்பிவைக்கப்பட்டது. இதனிடையில் நில உரிமையாளர் திரு. சந்திரமோகன் 10-3-1986 மற்றும் 29-3-1986 ஆகிய 2 தேதிகளிட்ட எதிர்ப்பு மனுக்களை நில எடுப்பு அலுவலரிடம் கொடுத்து அவை நில எடுப்பு அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றைத் தள்ளுபடி செய்யலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு, சிறப்பு நில நிர்வாக ஆணையருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்டு, சிறப்பு



1997 ஏப்ரல் 22]

நில நிர்வாக ஆணையரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பிரிவு 6-ன் கீழான விளம்பல் அறிவிக்கைக்கு ஒப்புதல் வேண்டி முன்மொழிவு அரசுக்கு 18-12-1986-ல் அனுப்பப்பட்டது. இம்முன்மொழிவு ஆய்வுக்குப்பின் ஏற்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 3333, சமூக நலத் துறை, நாள் 24-12-1986-ல் விளம்பல் அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. விளம்பல் அறிவிக்கை 27-12-1986-ல் செய்தித் தாளில் வெளியிடப்பட்டது. பின்னர் நில உரிமையாளர் திரு. சந்திரமோகன் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 5589/87 மற்றும் நீதிப்பேராணை பல்வகை மனு எண் 8064/87 இவற்றில் நில எடுப்பு நடவடிக்கையை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்குகளில் இடைக்கால தடை வழங்கி, எதிர் மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பின்னர் 22-6-1994 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில், நில உரிமையாளர் திரு. சந்திரமோகன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனையடுத்து நில உரிமையாளர் அரசுக்கு நில எடுப்பு நடவடிக்கையைக் கைவிடுமாறு கொடுத்திருந்த விண்ணப்பத்தின்மீது அரசு கடிதம் எண் 27163/ நிஎ 1/94-5 நாள் 3-10-1994-ல் மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு, அனைத்து நில எடுப்பு நடவடிக்கைகளையும் கைவிடுமாறும், தற்போதுள்ள குடியிருப்புக்கு அருகில் மாற்று நிலம் தேர்வு செய்யுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனினும், நில எடுப்பு நடவடிக்கையைக் கைவிடும் பொருட்டு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 48(1)-ன்கீழ் வெளியிடப்பட வேண்டிய திரும்பப்பெறல் அறிவிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரும் அதற்கான முன்மொழிவு ஏதும் அனுப்பவில்லை. அரசு சிறப்பு வழக்கறிஞர் 4-1-1995 அன்று அரசுக்கு அனுப்பியிருந்த கடிதத்தின் அடிப்படையில், அரசு இந்த ஆணையை மறுபரிசீலனைசெய்து ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவை மாற்றி அரசு வழக்கறிஞரின் கருத்துப்படி, முதலில் தேர்வு செய்யப்பட்ட இடத்திலேயே நிலம் கையகம் செய்யும் நடவடிக்கையைத் தொடர்ந்து, பட்டா வழங்க முடிவு செய்து 13-7-1995 நாளிட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கியது. இதன்பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவரால் தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/1978-ன்படி 4(1) முன்மொழிவு அனுப்புமாறு திருப்பத்தூர் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டு 19-1-1996-ல் 4(1) முன்மொழிவு மாவட்ட ஆட்சியருக்கு வரப்பெற்றது. இதனிடையில் நில உரிமையாளர் 2-1-1996-ல் தான் ஒரு சிறு விவசாயி என்றும் தனக்கு மொத்தம் 2.67 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது என்றும், எனவே தன்னுடைய நிலத்தைக் கையகம் செய்வதிலிருந்து

விலக்களிக்க வேண்டும் என்றும் தெரிவித்து சிறு விவசாயி சான்றுடன் மனு கொடுத்தார். இக்கோரிக்கை மாவட்ட ஆட்சித்தலைவரால் ஆய்வு செய்யப்பட்டு அரசு கடிதம் எண் 72237/சி. ஸ்பெஷல். 2/95-1 வருவாய்த்துறை, நாள் 24-1-1996-ன்படி மேற்படி நில உரிமையாளர் சிறு விவசாயி என்பதால் அவரது நிலத்தைக் கையகம் செய்வதைத் தவிர்த்து தகுதி வாய்ந்த மாற்று நிலம் (Alternate Site) தேர்ந்தெடுத்து 4(1) முன்மொழிவு அனுப்ப வாணியம்பாடி ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியருக்கு முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவரால் கடித எண் கே.10/173952/83 நாள் 8-3-1996-ல் அறிவுறுத்தப்பட்டது. இந்நேர்வில் நில உரிமையாளருக்கு 2.67 ஏக்கர் நிலம் இருந்துள்ளது என்றும், அவர் 23 நபர்களுக்கு 1.56 ஏக்கர் நிலத்தை வீட்டு மனைகளாகப் பிரித்து விற்றுள்ளார் என்றும், அதுபோக தற்போதுள்ள 1.11 ஏக்கர் நிலம் தான் அவருக்குச் சொந்தமாகும் என்றும், அரசு ஆணையின்படி கையகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்தின் உரிமையாளர் ஒரு சிறு விவசாயி என்பதாலும் மேற்கொண்டு நில எடுப்பு நடவடிக்கையைத் தொடர இயலாத நிலை உள்ளது என்றும், தகுதியான மாற்று நிலம் தெரிந்தெடுத்து நிலம் கையகம் செய்ய நடவடிக்கைகளை முடித்து மேற்படி நகரத்தின் வீடற்ற ஏழை ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சியர் தன்னுடைய 19-7-1996 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சியரின் அறிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு மாற்று நிலம் எடுக்கத் தேவையில்லை என்றும், ஏற்கெனவே கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலத்தைத் தமிழ்நாடு சட்டம் 31/1978-ன்படி நில எடுப்பு செய்து பட்டா வழங்கி 20-9-1996 க்குள் அறிக்கை அனுப்பும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்கெனவே நில எடுப்பு செய்ய உத்தேசிக்கப்பட்ட நிலங்களையே மீண்டும் தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 31/78-ன்கீழ் கையகம் செய்ய தனிவட்டாட்சியரிடமிருந்து முன்மொழிவு பெற்று ஆய்வு செய்து வருகிறார். சட்டப்பிரிவுகளின்படி கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றி வெகுவிரைவில், ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்.

வாணியம்பாடி வட்டம், பெரியாங்குப்பம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கும் பொருட்டு தனியார் பேச்சுவார்த்தை மூலம் தமக்கு சொந்தமான 1.61 எக்டேர் நிலத்தினை அரசுக்குக் கிரயம் செய்து கொடுக்க சம்மதம் தெரிவித்து 30-9-1996



அன்று திரு. இலியாஸ், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருந்தார். இதனடிப்படையில், திருப்பத்தூர் தனிவட்டாட்சியரால் புலத்தணிக்கை செய்யப்பட்டபோது 0.10.0 எக்டேர் நிலத்தில் ஒரு கேணி இருப்பதாகவும், அக்கேணியில் பாதிபாகம் மட்டும் திரு. இலியாசுக்குச் சொந்தம் என்பதும் தெரிய வந்தது. மேலும், திரு. இலியாஸ் கிரயம் செய்து கொடுக்க சம்மதித்த நிலத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து இரண்டுக்குமிடையில் வேறு பட்டாதாரரின் நிலம் அமைந்துள்ளதும் தெரிய வந்தது. எனவே, கிணற்றுப் பகுதியை நீக்கி மற்றவர்களுக்குச் சொந்தமான நிலத்தினையொட்டியுள்ள இரண்டு துண்டுகளாக உள்ள நிலங்களில் ஒரு பகுதியை மட்டும் கிரயம் செய்து தர திரு. இலியாஸ் சம்மதம் தெரிவித்திருந்தார். இதனடிப்படையில் புல எண் 181/5ல் 0.80.0 எக்டேர் நிலம் மட்டும் அவரிடமிருந்து கிரையம் பெற திருத்திய 4(1) முன்மொழிவு அனுப்புமாறு தனிவட்டாட்சியரை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார். இதற்கிடையில், திரு. இலியாஸ் கிரயம் தர விருப்பம் தெரிவித்துள்ள நிலத்தில் குத்தகை பிரச்சினை உள்ளதெனவும், நில உரிமையாளர் தங்களுக்கே நிலத்தைக் கிரயம் செய்வதாக வாக்களித்து இருந்ததாகவும் கூறி திருவாளர்கள் டி. கோவிந்தன் மற்றும் டி. ஷண்முகம் ஆகியோர் நில எடுப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து இருந்தனர். இதன்மீது விசாரணை மேற்கொண்டு கிராம ஆவணங்களை ஒப்பிட்டு நோக்கி, இவர்களுடைய எதிர்ப்பு மனுவை நிராகரிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்பின் புல எண் 181/5ல், 0.80.0 எக்டேர் நிலத்தை மட்டும் பேச்சுவார்த்தை மூலம் கிரயம் பெறுவதற்கு மாவட்ட அளவிலான குழுவின் முன் 18-3-1997 அன்று முன்மொழிவு வைக்கப்பட்டு, குழுவின் ஒப்புதல் பெறபட்டுள்ளது. அதன்படி நில உரிமையாளரிடமிருந்து 0.80.0 எக்டேர் (அல்லது 1.98 ஏக்கர்) நிலத்தை, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 62,000/- வீதம் கிரயம் பெற முடிவு எடுக்கப்பட்டு, இதற்கென ரூ.1,22,760/-க்கான காசோலையும் திருப்பத்தூர் தனிவட்டாட்சியரால் 31-3-1997ல் பெறப்பட்டு, 7-4-1997 அன்று ஆம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்யப்பட்டு பதிவு தினத்தன்று நில உரிமையாளருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் பெற்று 40 பயனாளிகளுக்குக் குடும்பத்திற்கு 3 சென்ட் வீதம் இம்மாத இறுதிக்குள் வீட்டுமனை வழங்கப்படும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கடந்த 15 ஆண்டுகளாக வீட்டுமனைப் பட்டாவிற்காக ஏங்கித் தவித்துக் கொண்டு

[1997 ஏப்ரல் 22

இருக்கின்றவர்கள் எப்படி எல்லாம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு வரலாறாக இந்த விவரம் அமைந்திருக்கிறது. 1985-லேயே அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டு, அது பல்வேறு வகையிலே பல்வேறு அவதாரங்களை எடுத்து, கடைசியிலே உயர் நீதிமன்றத்திலே அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டும், நில உரிமையாளர்கள் சொல்லியிருக்கிற ஆட்சேபணைகளுக்கு எல்லாம் ஆதாரம் இல்லை, எடுக்கப்பட்ட முடிவு சரியானது, சட்டப்படி செல்லுபடியானது, எனவே உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகும், இவ்வளவு தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்றால், தாழ்த்தப்பட்டவர்கள் இன்றைக்கும் எவ்வளவு இயலாமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் இது தெரிவிக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டா வழங்க வேண்டும் என்று தேதி குறிப்பிட்டும், அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பட்டா வழங்கமுடியவில்லை என்று சொன்னால், எந்தச் சக்திகள் அவைகளைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, உடனடியாக தேதி குறிப்பிட்டு, அதுவும் விரைந்து தேதி குறிப்பிட்டு, தயவுசெய்து, அரசு எடுத்த முடிவைச் செயல்படுத்தும் வகையில், பட்டா வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று, கடந்தகால ஆட்சியிலே முன்னுக்குப் பின் முரணாக முடிவுகள் எடுத்ததன் காரணமாக ஆதிதிராவிட மக்கள் அல்லலுற்று இருக்கிறார்கள். அவதிப்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக இங்கே நிறைய இருக்கிறது. முன்னாள் அமைச்சர் அவர்கள் 2 தடவை முன்னுக்குப் பின் முரணாக உத்தரவு எல்லாம் வழங்கி இருக்கிறார்கள். அதனால் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்பது உண்மை. இப்போது இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2 தடவை அரசின் சார்பாக நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியிடமும் உத்தரவாகப் போட்டு, குறுகிய காலத்திற்குள் விரைவாக அந்த மக்களுக்கு பட்டா வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறோம். அதன் அடிப்படையிலே அவர்கள் அந்த இடத்தை வழங்குவதற்கு தேதியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வருகின்ற 30-ஆம் தேதிக்குள் பட்டா வழங்குவதாக உறுதியளித்திருக்கின்றார்கள். மேலும் பெரியாங்குப்பம் என்ற இடத்திற்கு 40 பயனாளிகளுக்கு 3 சென்ட்



1997 ஏப்ரல் 22]

வீதம் 25-4-1997-க்குள் பட்டா அளிப்பதாக உறுதியாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அதற்குரிய முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான வேலைகளையும் முடித்துவிட்டார்கள் என்று அங்கேயிருந்து தகவல் வந்திருக்கிறது. ஆகவே அந்தப் பாதிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரைவான நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்பதை நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் நம்முடைய பெரியாங்குப்பத்தைப் பற்றி குறிப்பிட்டதற்கு நன்றி. தேதியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நன்றி. சான்றோர்குப்பத்திலே வாழக்கூடியவர்கள் சான்றோர்களாக இருக்கின்ற காரணத்தினால் 20 வருடங்களாக அவர்கள் பொறுமையாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்களுக்குத் தெரியும் பொறுமைக்கும் எல்லை உண்டு என்று. நான் அந்த வழியாகத்தான் போகிறேன், வருகிறேன். ஆகவே என்னைக் காப்பாற்றுவதற்காகவாவது சான்றோர்குப்பத்தில் உடனடியாக தேதி குறிப்பிட்டு பட்டா கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதைப் போன்று இந்தப் பொறுத்தவர்களுக்கு இந்த மாத இறுதிக்குள் பூமிக்கான பட்டா வழங்கப்படும் என்பதை நான் உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுமையாகப் பதிலை சொன்ன அமைச்சருக்கு நான் வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களின் தன்னிலை விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் அவைக்கு தன்னிலை விளக்கம் ஒன்றை அளிப்பார்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, சுருக்கமாகப் பேச வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17-ஆம் தேதியன்று இந்த மாமன்றத்தில் கோவில்பட்டியில் ஏற்பட்ட பதட்டத்தைக் குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்கள் ஓர் அறிக்கையை வைத்தார்கள். அதிலே என்னைப் பற்றிச்சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே என்னுடைய கருத்தை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகின்றேன். அதற்கு அனுமதி கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி நான் இந்த அறிக்கையைப் படிக்க இருக்கின்றேன். கோவில்பட்டியில் நடந்த உண்ணாவிரதத்தில் நான் உணர்ச்சிப்பூர்வமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தன்னிலை விளக்கத்திற்குத்தான் அனுமதி கொடுத்தேனே ஒழிய, உறுப்பினருக்கு அறிக்கை படிப்பதற்கு உரிமை கிடையாது. நீங்கள் தன்னிலை விளக்கத்தைச் சுருக்கமாகச் சொல்லலாம். நீங்கள் அதிலே ஒன்றும் பெரிய குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் படிக்கும் நேரத்தில் காவல் துறையிலிருந்து வந்த அறிக்கையைப் படித்தார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் மிக உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்கள் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குண்டான தன்னிலை விளக்கத்தை மிகச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு அமைச்சரவர்கள் அன்று அளித்த அறிக்கைக்கு என்னுடைய தன்னிலை விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவில்பட்டியில் நடந்த உண்ணாவிரதத்தில் நான் உணர்ச்சிபூர்வமாக ஆவேசப்பட்டுப் பேசினேன் என்று இந்த அவையில் தெரிவிக்கப்பட்டது சரியான செய்தி அல்ல. கோயில் திருவிழாவில் மண்டகப்படி உரிமை கேட்ட தேவேந்திர குல மக்களுக்கு உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான் எனது வாதம். திருவிழாவில் 9-ஆம் நாளில் தேருக்கு சாதிக் கொடி கட்டியும், அடைப்புத் தடிபோட வந்த மூப்பன்பட்டி தேவேந்திரகுல மக்களைத்



தாக்கியும், தேவேந்திரகுல மக்களின் தடிபோடும் உரிமையைப் பறித்தும், மறுநாள் ஆதிதிராவிடர் மாரிமுத்துவை கொலை செய்தும் தொடர் தவறுகள் செய்த பெரும்பான்மை சாதியினர் இதுவரை 1989 . . . .

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுத்தது எதற்காக என்பதை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் அன்றைக்கு அவையிலே இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு வருகிற நேரத்திலே இல்லை. நான் உங்களுக்கு அனுமதி கொடுத்தது ஒரேயொரு கருத்துக்குத்தான். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பிலே, பதில் சொல்கிற நேரத்திலே, காவல் துறையிலேயிருந்து வந்த அறிக்கையிலே நீங்கள் உணர்ச்சிவயப்பட்டு தேவேந்திர குல மக்கள் மத்தியிலே, அவர்கள் உண்ணாவிரதம் இருந்த இடத்திலே பேசினீர்கள் என்று குறிப்பிட்டார்கள். அந்த ஒன்றைப் பற்றித்தான் சொல்ல வேண்டுமேயொழிய, அன்று அவையிலே நீங்கள் இல்லாத நிலையில் அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசுவதற்கு அனுமதியை உங்களுக்கு நான் கொடுக்கவில்லை. "உணர்ச்சியோடு நான் பேசவில்லை, அப்படித் தூண்டவில்லை" என்று சொல்லிவிட்டு நீங்கள் நிறுத்த வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதாவது அரசியல்வாதிகள் உண்ணாவிரதம், ஊர்வலம், இதுபோன்ற நிகழ்ச்சிகளில் வாழ்த்திப் பேசுவது என்பது சாதாரணமான நிகழ்ச்சி. அதுபோன்றுதான் அன்று நடந்த உண்ணாவிரதத்திலே நான் பேசினேனே தவிர உணர்ச்சிபூர்வமாகவோ அல்லது ஆவேசப்பட்டோ அந்த நிகழ்ச்சியில் நான் பேசவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான் பிரச்சினை முடிந்தது.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) தென்காசியில் ஆயிரப்பேரி பாலமும் செங்கோட்டையில் நித்திய கல்யாணி அம்மன் கோயில் பாலமும் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. கு. ரவி அருணன் அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. ரவி அருணன்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசி-ஆயிரப்பேரி பாலத்தையும், செங்கோட்டை நித்திய கல்யாணி அம்மன் கோயில் பாலத்தையும் பருவமழை ஆரம்பமாவதற்கு முன் கட்டி முடிக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பெற்றிருக்கிறது.

**அறிக்கை**

மேற்படி கவன ஈர்ப்பில் இரண்டு பாலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. தென்காசி-ஆயிரப்பேரி சாலை கி.மீ. 0/4ல் சிற்றாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாலம் அமைக்கும் பணியானது 1992-93 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தில் அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) அவர்களால் ரூ.44.00 இலட்சம் மதிப்பிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு, தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடம் பணி செயலாக்கம் செய்யும் பொருட்டு 3-10-1996 அன்று ஒப்படைக்கப்பட்டது. மேலும் ரூ.4,72,720/- மதிப்பில் பணி செயலாக்குவதற்கு முன்பணமாக (Mobilisation Advance) தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திற்கு 4-11-1995 அன்று வழங்கப்பட்டது.

இப்பாலப் பணியில் தென்காசி பக்கத்தில் உள்ள தூண்கள் (Piles) மற்றும் தாங்கு சுவருக்கான (Abutment) கடக்கால் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாலப் பணியினை துரிதமாக செயலாக்கி முடித்திட தொகுதி மேலாளர், தமிழ்நாடு கட்டுமானக் கழகம் அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய பாலப்பணியினை எதிர்வரும் மழைக்காலத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





2. செங்கோட்டை-நித்திய கல்யாணி அம்மன் கோவில் பாலம்:

சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பாலமானது, செங்கோட்டை-சாம்பவர் வடகரை சாலை கி.மீ.0/4-ல் உள்ள பாலமாகும். மேற்படி இடத்தில் உள்ள பழுதுபட்ட பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் கட்டுவதற்கு ரூ.28.94 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, 18-12-1996-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்த அழைப்பில் தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்திடமிருந்து மட்டும் ஒப்பந்த விலைப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்த விலைப்புள்ளி அரசு ஒப்புதல் பெறும் நிலையில் உள்ளது.

ஒப்பந்த உடன்படிக்கை விதிகளின்படி உடன்படிக்கை செயலாக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள்ளாக பாலம் கட்டி முடிக்கப்பட வேண்டும். உடன்படிக்கையில் பாலம் கட்டி முடிக்க 12 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி 12 மாத கால அவகாசத்தில் மழைக்காலமும் அடங்கும்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி-ஆயிரப்பேரி பாலத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பாலத்திற்கு அருகில் மின்சார வாரிய டவர் லைன் செல்வதால் அந்தப் பாலத்திற்கு அஸ்திவாரம் அமைக்கும் பணி தாமதமாகி வருகின்றது. அதுபோன்று செங்கோட்டை-நித்திய கல்யாணி அம்மன் கோயில் பாலம் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட அரசு ஆணை பிறப்பித்ததாக அறிகின்றேன். அந்தப் பழைய பாலத்தை இடித்துவிட்டு, வருகின்ற ஜூன் மாதத்திற்கு முன்பாக, புதிய பாலத்திற்கு அஸ்திவாரப் பணிகளைத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி-ஆயிரப்பேரி சாலையின்மீதான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதாகக் குறிப்புகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல மின்வாரிய லைன் போன்ற தடை இருக்கும் என்று சொன்னாலும்கூட அதை உடனடியாக அகற்றி, அந்தப் பணியை விரைவுபடுத்தி, இந்த மழைக்காலத்திற்கு முன்பாகவே முடிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, செங்கோட்டை-நித்திய கல்யாணி அம்மன் கோயில் பாலப் பணிகள்

பரப்பளவு கொண்ட நிலப்பகுதியென தனித்தனியே அமைந்துள்ளது. எனவே இவ்விரண்டு பகுதிகளையும் இணைப்பதற்கு 30 அடி அகல பாதை தேவையென பல்கலைக்கழகம் கோரியுள்ளது. இணைப்பு பாதைக்கான நிலம் அளிக்கப்பட்டால்தான் மேற்படி நிலத்தில் இம்மையம் அமைக்க இயலுமென பல்கலைக்கழகம் கூறியுள்ளது.

முந்தைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடலூர் வருகையின்போது பல்வேறு திட்டங்கள் தொடங்கும் அறிவிப்பு பற்றி கால்கோள் விழாவில் இம்மையம் அமைப்பது குறித்து திட்டம் சேர்க்கப்பட்டது.

தற்போழுது நில நிர்வாக ஆணையர் கருவேப்பிலங்குறிச்சியில் 3.91.5 எக்டேர் நிலம் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்கவும், இதற்கான வழிப்பாதை அமைக்க 0.67.5 எக்டேர் நிலமாற்றம் செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இந்நில மாற்றத்திற்கு நிலத்தின் கிரயத்தொகை செலுத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பதிவாளர் நிலக்கிரயமின்றி நிலமாற்றம் செய்யப்படவேண்டும் என்று கோரியுள்ளார். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

எனவே தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கருவேப்பிலங்குறிச்சி கிராமத்தில் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் முந்தைய அரசால் துவக்கப்பட்டது என்று கூறுவது சரியல்ல. பல்வேறு திட்டங்கள் அறிவிப்பு பற்றிய கால்கோள் விழாவில் இத்திட்டமும் சேர்க்கப்பட்டது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக இயக்குநர், கால்நடை நலக்கல்வி மையம், சென்னை-51 அலுவலகத்திலிருந்து, கருவேப்பிலங்குறிச்சியில் இப்பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை அக்கிராம நிர்வாக அலுவலருடன் 2-4-1997 அன்று நேரடியாக பார்வையிட்டதில் மேற்படி இடத்தில் யாதொரு ஆக்கிரமிப்பும், மக்கள் கொந்தளிப்பும் ஏதும் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும் இப்பொருள் தொடர்பாக கருவேப்பிலங்குறிச்சி கிராம ஊராட்சி மன்றத் தலைவரிடம் விசாரித்ததில் ஏதும் ஆக்கிரமிப்போ மற்றும் மக்கள் கொந்தளிப்போ இல்லையென அவரும் உறுதிபட தெரிவித்தார். இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அலுவலகத்தில் நேரடியாக விசாரித்ததிலும் மேற்படி தகவல் ஏதும் அவர்கள் கவனத்திற்கு வரவில்லை எனத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்திற்கு தேவையான நிலம் பெறப்பட்டவுடன் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்கப்படும்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதில் சில கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1993ஆம் ஆண்டு கருவேப்பிலங்குறிச்சியில் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைக்க இடம் ஒதுக்குமாறு இவ்வரசுக்குக் கோரிக்கை வந்தது. அதன் அடிப்படையில் வருவாய்த் துறை 3.91.5 மற்றும் 0.95 எக்டேர் பரப்பளவு கொண்ட இடத்தை அந்தக் கிராமத்திலே ஆர்ஜிதம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்கள். முந்தைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தென் ஆற்காடு, வள்ளலார் மாவட்டமாகவும், விழுப்புரம் மாவட்டமாகவும் பிரிக்கப்பட்ட நேரத்தில் கடலூரில் நடந்த விழாவில், கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையத்திற்கு ஒரு கால்கோள் நாட்டியிருக்கிறார்கள், அதைத் தொடர்ந்து 12 இலட்சம் ரூபாயை இதற்காக ஒதுக்கியிருப்பதாகவும் அந்தக் கூட்டத்திலே அறிவித்துள்ளார்கள். அதன் பிறகு, அப்போது இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தராக இருந்த திரு. ஞானபிரகாசம் அவர்கள் விருத்தாசலத்திற்கு அருகிலே உள்ள பெண்ணாடத்தில் நடந்த கருத்தரங்கில் உடனடியாக 42 ஏக்கர் நிலத்தில் இந்த ஆராய்ச்சி மையம் தொடங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள். அப்போதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் அதற்கு இடம்கூட ரெடியாக ஒதுக்கித் தரப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள அந்த விவர அறிக்கையில்.....

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்த இடத்தை வருவாய்த் துறையும் பல்கலைக்கழக நிர்வாகமும் இன்னும் கைப்பற்றுவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்து உள்ளார்கள். எனவே இந்த இரண்டு பேருக்கும் உள்ள போட்டியில் இந்த இடம் கைப்பற்றப்படாமல் இருப்பதாக நான் அறிகிறேன். நான் வேண்டுகோள் வைக்க விரும்புவது, உடனடியாக பதிவாளர் அவர்கள் கிரயத் தொகையைக் கொடுத்தோ அல்லது நில நிர்வாக ஆணையர் அவர்கள் இடத்தை பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு இனாமாகக்



கொடுத்தோ, உடனடியாக அந்த ஆராய்ச்சி மையத்தை அந்த இடத்தில் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஆராய்ச்சி மையத்தை அமைப்பதாக அறிவித்தார்களே ஒழிய எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொண்டு செய்யவில்லை. ஆனால் இந்த அரசு வருவாய்த் துறை மூலம் ஆராய்ச்சி மையம் அமைக்க நிலங்களை கையகப்படுத்த முன்வந்து இப்போது இரு துண்டுகளாக நிலத்தை அளித்திருக்கிறது. இந்த இரு பகுதிகளையும் இணைப்பதற்காக 30 அடி அகலப்பாதை தேவைப்படுகிறது. மேற்படி பாதை வருவாய்த் துறை மூலம் கிடைத்தபின் விருத்தாசலம் வட்டம், கருவேப்பிலங்குறிச்சியில் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைக்க உடனடியாக கால்நடை மருத்துவ பல்கலைக் கழகத்தின் மூலமாக அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவு) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் (நீக்கறவு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக்கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஆ) சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.





**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(இ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(உ) குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997ஆம் ஆண்டு குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு குற்றவியல் செய் சட்ட (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.



1997 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1996-97, 1997-98 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1995-96, 1996-97 அளித்தலும், அவற்றின்மீது விவாதமும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள் மீது விவாதம் தொடர்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் பேச விருப்பம் தெரிவித்து இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு ஒரு மணி நேரம் தேவையில்லை. காரணம், ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவ்வப்பொழுது பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அரை மணி நேரம் பேசினால் போதும். எந்த உறுப்பினரும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசக் கூடாது. திரு. சி. ஞானசேகரன்.

*முற்பகல் 10-40*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) தலைமை]**

மின்வாரிய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கு நேற்று 61-வது பிறந்தநாள். அதற்கு வாழ்த்துத் தெரிவித்த அவையினரும், மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களும், அமைச்சர் எல்லோருக்கும் விருந்து வைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை

[திரு. சி. ஞானசேகரன்] [1997 ஏப்ரல் 22

வைத்தார்கள். ஆனால், விருந்து பற்றி அமைச்சர் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், தமிழக மக்களுக்கு விருந்தே வேண்டாம்; எங்களுக்கு விருந்தே வேண்டாம்; நீங்கள் ஏற்கெனவே 14-2-1997 ஆம் நாள், அரசாணை எண் 17-இன்படி திடீரென்று மின் கட்டண உயர்வை அறிவித்ததை வாபஸ் பெற்று விட்டாலே அதுவே தமிழக மக்களுக்கு நல்ல விருந்தாகும். அந்த விருந்தை நீங்கள் படைக்க வேண்டுமென்று நான் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

ஒரு சட்டசபை கூடுவதற்கு ஏற்கெனவே அறிவிப்பு வெளியிடப்பட்டும், சபை கூடுவதற்கு முன்பாகவே, அவசரம் அவசரமாக ஒரு அரசாணையைப் பிறப்பித்து, அரசாணை மூலம் மின் கட்டண உயர்வு என்று அறிவிப்பது ஒரு நல்ல மரபு ஆகாது. தமிழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு வந்து விவாதத்தையெல்லாம் முழுமையாக விவாதித்து முடித்த பின்னால் ஒரு முடிவு எடுத்து மின் கட்டண உயர்வை அரசு அறிவித்திருக்கலாம். அப்படிச் செய்யாமல், திடீரென்று இப்படி மின் கட்டண உயர்வைத் தமிழக மக்கள் மேல் நீங்கள் சுமத்தியிருப்பது உண்மையிலேயே எங்களுக்கு ஏற்புடைய ஒன்று அல்ல. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்களும் மாண்புமிகு மற்ற அமைச்சரவையைச் சார்ந்த அத்துணை அமைச்சர்களும் மாண்புமிகு தமிழக முதல்வரவர்களும் முடிவெடுத்து, மின் கட்டண உயர்வை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், ஏற்கெனவே மாண்புமிகு முதல்வரவர்கள் இந்த அவையிலே கூறுகிறபொழுது, ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள்கூட இப்படிச் செய்திருக்கிறார்கள் என்ற ஒரு மேற்கோளினைக் காட்டினார்கள். கடந்த கால ஆட்சியிலே இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்தது உண்மை. அதையெல்லாம் தவிர்க்கும் பொருட்டுத்தான் ஒரு ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்த தமிழக மக்கள், இப்படிப்பட்ட சுமை நம்முடைய தலையில் விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு நாம் நிச்சயமாக ஏமாற்றத்தை அளிக்கக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், இதுமாதிரி மின் கட்டண உயர்வுகளை, இப்படிப்பட்ட அவையிலே நீங்கள் முழுமையாக விவாதித்த பின்னால் முடிவு எடுத்திருக்க வேண்டும்...



1997 ஏப்ரல் 22]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய கட்டண உயர்வுகள் சட்டமன்றத்திலே விவாதித்து எந்தக் காலத்திலேயும் முடிவு செய்யப்படுவதில்லை. பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த அந்தக் காலத்திலேயிருந்து என்றைக்கும் சட்டமன்றத்திலே விவாதித்து முடிவெடுக்கப்படுவது இல்லை. வேண்டுமானால், அமைச்சர்களைக் கலந்து ஆலோசிப்பது உண்டே தவிர, சட்டமன்றம் தீர்மானித்து, அந்த உயர்வுக்கு என்றைக்கும் ஆணை பிறப்பித்தது இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. கர்மவீரர் காமராஜர் காலத்தில் இப்படி மின் கட்டண உயர்வெல்லாம் அதிகமாக வந்தது கிடையாது. அப்பொழுது மின் கட்டணம் என்பதே மிகக் குறைந்த கட்டணமாக இருந்தது. ஆனால் இப்பொழுது (குறுக்கீடு) இந்தக் காலத்தில் அதிகம் என்று சொன்னாலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறபொழுது, அவை கூடுவதற்காகத் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு உயர்த்துவது என்ன நியாயம்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜருடைய காலத்தில் மின் கட்டணம் அவ்வளவு உயர்ந்தது இல்லை என்கிறார். காமராஜருடைய காலத்தில் இலவச மின்சாரம் கிடையாது. ஆகையினாலே, இப்போதைக்கும் அப்போதைக்கும் ஒப்பிடக் கூடாது. இப்பொழுது என்ன நிலைமை, அதைச் சொல்லுங்கள். ஏன் பெருந்தலைவரையெல்லாம் இழுக்கிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்பொழுது இலவச மின்சாரம் இல்லை என்கிற கருத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஒட்டு மொத்தமாக நீங்கள் பார்க்கிறபொழுது, இலவச மின்சாரத்திற்கு ஒதுக்குகிற தொகையே மிகக் குறைவுதான். அரசே ஒரு மானியமாக அளித்து, நீங்கள் இப்பொழுது அதை ஏற்றுக் கொள்ளலாம். ஏழை எளிய மக்களெல்லாம் மின் கட்டணத்தைக் கட்ட முடியாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிற காலத்தில், நீங்கள் சட்டமன்றம் கூடும் தேதியைக் குறிப்பிட்ட பின்னால், திடீரென்று நீங்கள் இப்படிச் செய்வது முறையல்ல என்பதற்காகத்தான் எங்களுடைய கண்டனத்தை நாங்கள் தெரிவிக்க . . .

[1997 ஏப்ரல் 22

முற்பகல் 10.45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருந்தும் மீண்டும் மீண்டும் இதைப் பேசிக் கொண்டிருக்கிறார். எந்தக் காலத்திலேயும் சட்டமன்றக் கூட்டம் அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு மின்சாரக் கட்டணம் அறிவிக்காமல் இல்லை. கடந்த கால வரலாறுகளைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தால் தெரியும். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு முன்னாலே அல்லது தேதி அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலே மின்சார வாரியக் கட்டணம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இது ஒரு அட்டானமஸ் பாடி. அதிலே அவர்கள் பரிந்துரை செய்து ஒவ்வொரு ஆண்டும் - இன்னும் சொல்லப்போனால், கடந்த காலத்திலே ஒவ்வொரு ஆண்டும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, ஆட்சி வந்தவுடனே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் அது நன்றாக இருக்காது என்று எண்ணித்தான், ஒரு வருடம் கழித்து மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம். ஏதோ ஏழைகள் பாதிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். எந்த ஏழை, எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்று விளக்கிச் சொன்னால் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால வரலாறுகளை நாம் சொல்லிக் கொண்டிருப்பதைவிட்டு, நான் கூறுவதெல்லாம் அட்டானமஸ் பாடி என்று சொன்னாலும்கூட, எதற்காக பேரவை இருக்கிறது? எதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? அரசினுடைய பணத்தைக் கொடுக்கிறோம். அரசினுடைய பணம் 250 கோடி, 450 கோடி ரூபாய் என்று மின்வாரியத்திற்கு ஒதுக்கப்படுகிறபோது மக்கள் பிரதிநிதிகள் இதை விவாதிப்பதற்கு ஒரு வாய்ப்பினை நீங்களாவது அளிக்கலாம் அல்லவா? கடந்த காலத்தில் அளிக்கப்படாமல் இருக்கலாம்.

*** மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதிப்பதற்கான வாய்ப்புதான் இப்போது அளிக்கப்படுகிறது. ஆனால், இயங்குகிற முறையில், நடைமுறையில் வெட்டுத் தீர்மானம்கூட இந்த அவையிலே தர முடியாது. ஏனென்றால் அந்த நிதி செலவழிக்கப்படுவதோ, அதனால் மின் கட்டணம் விதிப்பதோ தனி உரிமையோடு செய்யப்படுகிறது. ஆகவே, கருத்தைத் தெரிவிக்கலாம். ஆனால், சட்டமன்றத்திலே நாம் முடிவெடுத்துச் செயல்படுத்த வாய்ப்பு கிடையாது.



1997 ஏப்ரல் 22]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானம் கொடுப்பதில்லை. என்னுடைய ஒரே ஒரு தாழ்மையான கருத்து, இப்போது நீங்கள் எப்படி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, எங்களுக்கெல்லாம் வாய்ப்பு நல்குகிறீர்களோ, அதுபோல் விவாதம் முடிந்த பின்னால் அதை நீங்கள் செய்திருக்கலாம். அப்போது எதிர்ப்பு என்ன, சாதகமான கருத்து என்ன, பாதகமான கருத்து என்ன என்று நீங்கள் அலசி ஆய்ந்து பிறகு முடிவு எடுத்திருந்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அடுத்த பாயின்ட். ஏற்கெனவே மின்வாரிய நிதிநிலை அறிக்கையிலே பாரா 4-ல் சொல்கிற போது, தென் மண்டலத்தில் எவ்வித மின்வெட்டும் இல்லாமல் நுகர்வோர்களுக்கு மின்சக்தி வழங்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு என்று பெருமையாக நாம் குறிப்பிடுகிறோம். கடந்த 5 ஆண்டுகளிலும் இப்படித்தான் முன்பு இருந்த அமைச்சர், மின்வெட்டே இல்லாத ஒரே மாநிலம் தமிழ்நாடு, தமிழ்நாடு என்று சொல்லிக்கொண்டிருப்பார். இப்போதும் நிதிநிலை அறிக்கையிலே அப்படித்தான் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அமைச்சருக்கும் தெரியாமல், அரசுக்கும் தெரியாமல் யாரோ இங்கே சதி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எங்களுக்கு நினைக்கத் தோன்றுகிறது. அடிக்கடி தமிழகத்திலே மின்வெட்டு. அறிவிக்கப்படாத மின்வெட்டுக்கள். இப்படி மின்வெட்டுக்களை உருவாக்குவது யார்? அதற்குக் காரணம் என்ன? ஏற்கெனவே நாம் இங்கே மின்வெட்டே இல்லாத மாநிலம் என்று சொல்லிவிட்டு, மின்வெட்டை நாம் அவ்வப்போது உருவாக்கிக் கொண்டிருப்பது எந்தவகையிலும் நியாயமல்ல. குறிப்பாக விவசாயிகளெல்லாம் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஏற்கெனவே, நீங்கள் பாரா 58-ல், நிதிநிலை அறிக்கையில் சொல்லுகிறபோது, விவசாயிகளுக்கு 10 மணி நேரம் என்று-மாண்புமிகு அமைச்சர் அவர்களேகூட 110-வது விதியின்படி ஒரு அறிக்கையை இங்கே வைத்தார்கள். ஆனால், அந்த 10 மணி நேர கரென்ட்கூட கிடைக்காமல் பாவம் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சொல்லப்போனால், உழவன் சேற்றிலே காலை வைத்தால்தான் நாம் சோற்றிலே கையை வைக்க முடியும். ஆனால், உழவன் உழவுக் கூலிகூட மிஞ்சாமல் தவித்துக்கொண்டிருக்கிறான். உழவனுக்குக் கிடைப்பது 4 மணி நேரம் அல்லது 5 மணி நேரம் கரென்ட்தான். அதுவும் நள்ளிரவில். ஏற்கெனவே கூலிக்கு ஆள் கிடைக்காமல் விவசாயத்திற்கு வேலை ஆட்கள் கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் துயரப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நீங்கள் இரவு நேரத்தில் கரென்ட் கொடுத்தால், தண்ணீர் கட்ட, மடையை மாற்றுவதற்குக்கூட

[திரு. சி. ஞானசேகரன்] [1997 ஏப்ரல் 22

ஆட்கள் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைமையை மாண்புமிகு அமைச்சர் உணர்ந்து நீங்கள் பகல் பொழுதிலே விவசாயிகளுக்குக் கண்டிப்பாக 12 மணி நேரம் கரென்ட் வழங்கப்படும் என்கிற நிலைமையை தமிழகத்திலே உருவாக்கித் தந்தால்தான் விவசாயப் பெருமக்களுக்கு உதவியாக இருக்கும். காரணம், விவசாயிகள் நிறைந்த நாடு நம்முடைய நாடு. விவசாயம்தான் நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இப்படி இரவு நேரத்தில் 4 மணி நேரக் கரென்டாவது உருப்படியாக வருகிறதா என்று பார்த்தால் அடிக்கடி கரென்ட் கட் ஆகிறது. திடீரென்று குறைந்த மின் அழுத்தம். அந்தக் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மோட்டார் காயில் போய்விடுகிறது. சாப்பாட்டிற்கே வக்கில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிற சிறு விவசாயிகள் மோட்டார் காயிலைக் கட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை நீங்கள் முழுமையாக மாற்றியமைக்க வேண்டும். குறிப்பாக, என்னுடைய கிராமத்திலே, என்னுடைய தந்தையார்கூட, நிலத்தை விற்றுவிடலாமா என்று என்னிடம் முந்தாநாள் கேட்டார்கள். காரணம், மின்சாரம் எப்போது வருகிறது, எப்போது போகிறது என்றே தெரியவில்லை. தண்ணீர் கட்டக்கூட ஆட்கள் வரமாட்டேன் என்கிறார்கள். நிலம் தேவையா என்கிற அளவுக்கு நாங்கள் நினைக்கத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் எல்லோரும் நிலத்தைத் தாரைவார்த்துக் கொடுத்து விட்டால் சோற்றுக்கே நாம் திண்டாடக்கூடிய நிலைமை உருவாகும். ஆகவே, விவசாயிகளை அரசு அதிகாரிகள் பழிவாங்குகிறார்களா என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. 10 மணி நேரம் என்று நீங்கள் சொல்லிவிட்டப் பின்னாலும்கூட, ஏன் அங்கே குறைவு ஏற்படுகிறது என்பதை நீங்கள் தயவுசெய்து விளக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பாயின்ட்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே எல்லோரும் பேச நேரம் நிர்ணயித்தாகிவிட்டது. விவாதத்தைத் துவங்கி வைப்பவருக்கு 10 நிமிடம், மற்றவர்களுக்கெல்லாம் 7 நிமிடம்.

முற்பகல் 10-50

**திரு. சி. ஞானசேகரன்:** நான் விவாதத்தை இன்று தொடங்கியிருக்கிறேன். தொடங்குபவர்களுக்கு அதிக நேரம் கொடுப்பவர்கள் தாங்கள். எனவே அந்த வகையிலே....



1997 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நாள் விவாதம் நடக்கிறது. நேற்று அரை மணி நேரம் ஒதுக்கினோம். இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தவரையில் 12 மணி நேரம் பகல் நேரத்தில் மின்சாரம் வழங்கவேண்டும். புறம்போக்கு நிலம் பற்றி திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். ஜெயலலிதா ஆட்சியில் 1995-ஆம் ஆண்டு ஒரு அரசாணையை திடீரெனப் பிறப்பித்தார்கள். வருவாய்த் துறையிலிருந்து என்.ஓ.சி. பெற்றுத் தந்தால்தான் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு மின் இணைப்பு தரப்படும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார்கள். கடந்த கால ஆட்சியின் ஊழல்கள், முறைகேடுகள் எல்லாவற்றையும் தவிர்க்க வேண்டுமென்றுதான் நாம் இங்கே வந்திருக்கிறோம். புதிய அரசு அமைந்த பின்னாலும்கூட கடந்த காலத்தில் போட்டிருக்கிற அந்த 1995-ஆம் ஆண்டு அரசாணையை நீங்களும் வைத்துக்கொண்டு புறம்போக்கு நிலங்களில் ஏழை எளியவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்னால் வீடு கட்டியவர்களுக்கு இன்னும் மின் இணைப்பு கொடுக்காமல் இருப்பது மிகவும் வருத்தமான விஷயம். ஆகவே அந்தக் குறைபாட்டை உடனடியாக நீக்கவேண்டும். ஏற்கெனவே இதுபற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கூட வருவாய்த் துறை அமைச்சருக்குக் கொடுத்திருக்கிறேன். இன்னும் அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி அதற்குப் பதில் சொல்வதாகச் சொன்னார்கள். வருவாய்த் துறையும் மின்சார வாரியமும் இணைந்து 10-12 ஆண்டுகளுக்கு முன்னாலே புறம்போக்கில் வீடு கட்டியிருக்கும் ஏழைகளுக்கு உடனடியாக நிபந்தனை அடிப்படையிலாவது மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். பிறகு வேண்டுமானால் அதைத் தளர்த்திவிட்டு எடுத்துக்கொள்ளலாம். அந்த அடிப்படையில் ஒரு மாத காலத்திற்குள் மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்புக் கொடுத்தால், தமிழக மக்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவார்கள்.

அடுத்தது கான்ட்ராக்ட் லேபர். ஏற்கெனவே காலித் கமிஷன் அறிக்கையில் 18,000 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்த பதினெட்டாயிரம் பேரில் இப்போது சிலபேர் தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிகிறேன். அதிலே கூட, ஐ.டி.ஐ. படித்தவர்கள், என்.டி.சி., என்.ஏ.சி. படிப்புப் படித்தவர்கள், பட்டயப் படிப்புப் படித்தவர்கள் இவர்களையெல்லாம் 1 : 1 என்ற அடிப்படையில் உடனடியாக

[திரு. சி. ஞானசேகரன்] [1997 ஏப்ரல் 22

எடுக்கவேண்டும். இப்போது 21,000 வேகன்சி இருப்பதை பூர்த்தி செய்ய வேண்டும். அதிலே சில யூனியன்களைச் சேர்ந்தவர்கள், அரசியல் கட்சிகள் மக்கள்தொகை பட்டியலைக் கொடுப்பதைப்போல பட்டியல்களைக் கொடுப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு யூனியனும் 2,000, 3,000, 10,000 என்று பட்டியல் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட முறைகேடுகள், ஊழல்கள் இதில் தலையிடாமல் பார்த்துக்கொண்டு, காலித் கமிஷன் எந்தெந்த ஊழியர்களை அப்போது கணக்கில் எடுத்துக்கொண்டதோ அவர்களுக்கு மட்டும் வேலை கொடுக்கப்பட வேண்டும். புதிதாக சந்தில் வந்து நுழைபவர்களுக்கு நிச்சயமாக இடம் கிடைக்காது என்ற உறுதியை அமைச்சர் அளித்து, படித்தவர்களுக்கு 1:1 என்ற அடிப்படையில் அவர்களின் கல்வித் தகுதி அடிப்படையிலும் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி, பேரூராட்சிகளுக்கெல்லாம் ஏற்கெனவே அவர்கள் 4,500, 5,000 ரூபாய் பணத்தைக் கட்டினால்தான் கம்பம் நடுவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு, அதைக்கட்டினால்தான் வருவோம் என்கிறார்கள். அதுவும் அரசுத் துறை, நீங்களும் அரசுத் துறை. 4,500, 5,000 ரூபாய் கம்பத்திற்குக் கட்ட வேண்டுமென்று சொல்வது எந்த விதத்திலும் நியாயமில்லை. குறைவாகக் கட்டணம் வாங்க வேண்டும். உங்களுக்கு எவ்வளவு செலவாகிறதோ அந்தச் செலவை மட்டும் வாங்கவேண்டும். ஏதோ தனியாரிடம் கேட்பதைப் போல நகராட்சிகள், ஊராட்சிகள், பேரூராட்சிகளிடம் கேட்பது நல்லதல்ல, அங்கே சம்பளம் கொடுக்கக்கூட முடியாமல் திண்டாடிக்கொண்டு இருக்கிற நிலையில் இருப்பதால், அவர்களிடம் போய் பணத்தைக் கேட்பது கொஞ்சம்கூட பொருத்தமாக இல்லை. ஆகவே அதற்குச் செலவுக் கட்டணம் எவ்வளவோ அதை மட்டும் வசூல் செய்யுங்கள். நகராட்சி, பேரூராட்சிகளில் பண வசதி படைத்த நகராட்சிகளிடம் வேண்டுமானால் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். சம்பளம் கொடுக்கக்கூட திணறிக் கொண்டிருக்கிற உள்ளாட்சி அமைப்புகளிடம் இலவச மின்சாரத்தைக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

குறைந்த மின் அழுத்தம் தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் இருக்கிறது. டிரான்ஸ்பார்மர்கள் இல்லை. யாராவது விவசாயிகள் மின் இணைப்பு கேட்டால் மீட்டர் இல்லை என்கிறார்கள். வீட்டுக்கு இணைப்புகள் கேட்டாலும் மீட்டர் இல்லை என்கிறார்கள். மீட்டரை உற்பத்தி



1997 ஏப்ரல் 22] [திரு. சி. ஞானசேகரன்]

செய்கிற தொழிற்சாலைகளில் இருந்து போதிய அளவுக்கு வாங்குங்கள். டிரான்ஸ்பார்மர்கள் இல்லை என்கிறார்கள். ஏற்கெனவே சப்-ஸ்டேஷன் வந்து இருந்தால் அதற்கு சார்ஜ் செய்ய சாதனங்கள் இல்லை என்ற குறையெல்லாம் இருக்கிறது. அவற்றையெல்லாம் முழுமையாக வாங்கித் தரவேண்டும். வீட்டுக்கு இணைப்பு கொடுப்பதற்கு விண்ணப்பம் வந்தால் ஒரு மாதத்திற்குள் மின்இணைப்பு வழங்கப்படும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஒரு மாதத்திற்குள் நிச்சயமாக வழங்கப்படும் என்ற உறுதிப்பாட்டை வழங்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பு பெற்றது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். மின்வாரியம் எவ்வளவு நஷ்டத்தில் தமிழ்நாட்டில். இயங்கினாலும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என்று உறுதியான கொள்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து தமிழ்நாட்டிலே அதை வெற்றிகரமாக நடத்தி வருவதைப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 10-55

அதைப்போலவே மின்வாரியத்தின் சார்பில் புதிய திட்டங்களைத் துவக்குவதற்கு உலக வங்கியினுடைய உதவியை நாடுகிறபோது, உலக வங்கியும் கடுமையான நிபந்தனைகளை விதிக்கிறது. அப்படி உலக வங்கி நிபந்தனைகளை விதித்தாலும், மத்திய அரசு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை கொடுக்கக் கூடாது. அவர்களிடத்திலேயும் வசூல் செய்ய வேண்டும் என்று கூறுகிறது. ஒரு யூனிட்டுக்கு ஐம்பது பைசா அல்லது ஒரு ரூபாய் அல்லது ஒரு ரூபாய் ஐம்பது காசு என்று வசூலிக்க வேண்டும் என்ற தாக்கீது மத்திய அரசிடமிருந்து வந்தாலும்கூட, அதையும் ஏற்றுக்கொள்ளாமல், உலக வங்கியினுடைய நிர்பந்தத்தையும் ஏற்றுக் கொள்ளாமல், தமிழ்நாடு மின்சார வாரியம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், நம்முடைய மின்சார வாரியம் ஒரு கமர்சியல் ஆர்கனைசேஷன் என்று சொல்லப்படுகிறது. கமர்ஷியல் ஆர்கனைசேஷனாக இருக்கிற காரணத்தாலே அவ்வப்போது கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்பதை மின்சார வாரியமும் தெரிவிக்கிறது, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவிக்கின்றார்கள். நான் அரசுக்கு ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். அது ஒரு

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1997 ஏப்ரல் 22

கமர்ஷியல் ஆர்கனைசேஷன்—வியாபார அடிப்படையிலே நடக்கக்கூடிய ஒரு அமைப்புதான். ஆனால் அதிலே இலாபம் பெறுவதற்காகக் கட்டணத்தை மட்டும் உயர்த்தினால் போதாது. வியாபாரத்தையும் பெருக்க வேண்டும். 1997-98-ஆம் ஆண்டிற்குத் தேவையான மின்சாரம் 5.290 மில்லியன் யூனிட். ஆனால் உற்பத்தி செய்வது 4.502 மில்லியன் யூனிட். தேவை அதிகமாக இருக்கிறது. உற்பத்தி குறைவாக இருக்கிறது. ஆகவே உற்பத்தியைப் பெருக்கினால் வியாபாரம் அதிகமாக ஆகும். வியாபாரம் அதிகமானால் நஷ்டத்தைக் குறைக்க முடியும் என்ற காரணத்தால் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். அதற்கான முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. தனியார் துறையிலே 16 திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது என்று சொல்கிறபோது, தனியார் துறையிலே துவங்கக்கூடிய இந்தத் திட்டங்களை மாநில அரசு மட்டும் அனுமதிக்க முடியாது. மத்திய அரசும் அனுமதிக்க வேண்டும். ஏனென்றால், மின்சாரத் துறை Concurrent list-ல் இருக்கிறது. State list-லே மட்டும் இல்லை. ஆகவே, மத்திய அரசு அதற்கு அனுமதி வழங்குவதில் தேவையில்லாமல் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொல்லுகிறபோது அப்படியொன்றும் காலதாமதம் ஏற்படவில்லை என்று சொன்னார்கள். நிச்சயமாக மத்திய அரசு அனுமதி அளிப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அந்தக் காலதாமதம் இல்லாமல் இருந்தால்தான் நாம் எடுக்கிற முயற்சி வெற்றி பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் தனியார் துறையை மட்டும் நாம் நம்பியிருக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. தாராளமயக் கொள்கையை முழுமையாக ஆதரித்துச் செயல்படுத்திய முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள்கூட கடந்த அரசு இந்த மின்சார உற்பத்தியில் ஒரு தவறு செய்துவிட்டது என்று குறிப்பிட்டுவிட்டு, தனியார் துறையை மட்டும் நம்பி நாம் இந்தத் திட்டத்திலே இறங்கிய காரணத்தாலே பல தடைகள் ஏற்பட்டுவிட்டன. பல சங்கடங்கள் வந்துவிட்டன. வெறும Memorandum of Understanding மட்டும் போடுகிற நிலையிலேதான் இருக்கிறது, செயல்பாட்டுக்கு வரவில்லை என்று சொன்னார்கள். ஆகையால் பொதுத் துறையிலேயும், அரசாங்கத் துறையிலேயும் மின்சார உற்பத்தியை நாம் செய்தாக வேண்டும் என்ற கருத்தை, தாராளமயக் கொள்கையை ஆதரித்துச் செயல்படுத்திய



1997 ஏப்ரல் 22] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதையும் மனதில் கொண்டு நம்முடைய தமிழக அரசு தனியார் துறையை மட்டும் நம்பியிருக்காமல் அரசாங்கத் துறையிலேயும், மின்சார வாரியத்தின் சார்பிலேயும் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். அதிலே குறிப்பாகவும், சிறப்பாகவும் நான் சொல்ல விரும்புவது வட சென்னை அனல் மின் திட்டத்தை அரசாங்கமே செயல்படுத்த வேண்டும். அதைத் தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்று, நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அதைப்போலவே தூத்துக்குடியில் அனல் மின் நிலையத்தின் இரண்டாவது கட்டம் துவக்கப்படவிருக்கிறது. அதையும் தனியாருக்குக் கொடுக்காமல் அரசாங்கமே செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இதிலே இந்தத் தனியார் துறைக்கு அனுமதி அளிப்பதிலே சில சங்கடங்கள் இருப்பதாக நான் அறிகின்றேன். அதிலே குறிப்பாகச் சொல்லப்பட்டிருப்பது, Public Sector has in-house infrastructure for capacity addition but no money. பொதுத் துறையில் நம்முடைய மின்வாரியமே infrastructure facility வைத்திருக்கிறது. ஆனால் பணம் இல்லை. 'Private sector has some money, but no infrastructure'...... தனியார் துறையினர் கொஞ்சம் பணம் வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்திலே அடிப்படைக் கட்டமைப்பு வசதி கிடையாது. 'Foreign investors have money; but no confidence in Indian policy makers.'....வெளிநாட்டு நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் பணம் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் கொள்கை வகுக்கின்றவர்களிடத்திலே அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லப்படுகின்றது.

ஆக, இந்த மூன்று விதமான பிரச்சினைகள் இருப்பதால் தனியார் துறையை மட்டும் நம்பியில்லாமல் பொதுத் துறையிலும் மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் தனியார் துறையிலே மின் உற்பத்திக்கு அனுமதி கொடுப்பதை நான் கடுமையான முறையில் எதிர்க்கிறேன் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான் அதற்கு எதிர்ப்பாளன் அல்ல. I am more than a communist. நான் அவருடைய கொள்கையை முழுமையாக ஆதரிக்க கூடியவன். ஆனால் வளர்ந்து வருகிற இந்தப் பொருளாதார யுகத்தில்,

வளர்ந்து வருகிற நாடுகள் போட்டிபோட்டுக் கொண்டு முன்னேறுகிற இந்தக் கால கட்டத்தில், இந்தியாவிலேயே பல மாநிலங்கள் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிற இந்த காலகட்டத்தில் .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோழர் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது தனியாருக்கு அப்படியே தாரை வார்த்துக் கொடுத்துவிடக்கூடாது என்று சொன்னார். புதிதாகத் துவங்கக்கூடாது என்று சொல்லவில்லை. அரசிடத்திலே இருக்கக்கூடிய மின்துறையை தனியாருக்குத் தாரை வார்க்கக்கூடாது என்றுதான் சொன்னாரே தவிர, புதிதாக எதுவும் துவங்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லை.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. அதேநேரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சி சோஷலிஸ்ட் கட்சி ஆகிய இடதுசாரி கட்சிகளின் கூட்டமைப்பு, மேற்கு வங்கத்தில் ஆட்சி நடத்துகிறது. அந்த மேற்கு வங்கத்தில் முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ஜோதி பாசு அவர்கள் அந்த மாநிலத்திற்கு ஏராளமான வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வருகிறார் என்றால் அதைப் பாராட்ட வேண்டும். அவர் அந்த மாநிலத்தை பொருளாதாரத்தில், பொருளாதார வாழ்க்கையில் முன்னேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்கிறார். இப்போது கூட நம்முடைய தமிழ்நாட்டில் உற்பத்தி மட்டும்தான் தனியாருக்குத் தரப்படுகிறது. அதைப் பகிர்ந்து அளிப்பது மின்வாரியத்திடம்தான் இருக்கிறது. ஆனால் மேற்கு வங்கத்தில் என்ன நடக்கிறது? ஏப்ரல் 12-ம் தேதி இந்து பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன்.

"Calcutta—April 11—West Bengal invites proposals from private entrepreneurs for power distribution in districts. To begin with, the State Administration has invited proposals for power distribution in Midnapore District. The BOT proposals are also invited for various other infrastructural projects including setting up of an additional unit in Santhaldi Power Station under West Bengal State Electricity Board."



இதை நான் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. நம்முடைய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு, நம்முடைய மின்சார உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு நாம் மட்டுமல்ல, நம்மிடத்திலே பணம் இல்லை என்ற காரணத்தால் தனியார் துறையில் இவைகளை ஒப்படைப்பதில் தவறு இல்லை என்றுதான் சொல்கிறேன். மேற்கு வங்கத்தில் இப்படித்தான் செய்யப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்று பவர் லாஸ்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் சொல்கிறபோது தனியாரிடம் ஒப்படைத்தால் நமக்குச் சரியான பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். ஒரிசாவை எடுத்துக்கொண்டால், ஏற்கெனவே அங்கே மின்சார வாரியம் பொதுத் துறையில் இருந்தபோது யூனிட் காஸ்ட் ரூ. 1.80 பைசா என்று இருந்தது. ஆனால் தனியாரிடம் அதை ஒப்படைத்தபிறகு யூனிட்டுக்கு ரூ. 4.50 என்று ஆகிவிட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழகத்திற்கு வந்துவிடக்கூடாது என்ற அச்சத்தில்தான் தனியாருக்கு மாற்றுவதை எதிர்த்தாரே தவிர, தனியார்மயம் என்கிறபோது யூனிட் காஸ்ட் என்பதில் நமக்குப் பாதுகாப்பே இல்லாமல் போய்விடும். நம்மைக் குழியில் தள்ளிவிடுவார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலையில் பொதுத் துறையில் இருந்தால்தான் தமிழ்நாட்டுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கும் என்ற வகையில்தான் பேசப்பட்டதே தவிர வேறல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறையைத் தவிர்த்துப் பேச வேண்டும். பொதுத் துறையை ஆதரித்துப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையானால் இரண்டும் வேண்டுமானால் கலந்து இருக்கலாம்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்கிறேன். குறை கூறுவதற்காக நான் சொல்லவில்லை. அதேநேரத்தில் பவர் டிஸ்டிரிபியூஷனை தமிழ்நாட்டில் நாம்தான், நம்முடைய மின்வாரியம்தான் வைத்துக் கொண்டிருக்கிறது. வேறு விளைவுகளை தடுப்பதற்காகத்தான் மக்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான், ஏழைகளைக் காப்பாற்றுவதற்காகத்தான், விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரத்தைத் தருவதற்காகத்தான், இந்த மின் பகிர்வை மின்வாரியம் வைத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் மின்சார வாரியத்திற்கு ஒரு யோசனையைச் சொல்வேன். கடந்த ஆண்டு 7,072 மில்லியன் யூனிட்டுகள் பவர் லாஸ்

ஏற்பட்டு இருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'மற்ற மாநிலங்களில் 21 சதவீதம் power loss இருக்கிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தில் 17% தான் power loss இருக்கிறது' என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் அளித்திருக்கிற அறிக்கையின்படி பார்த்தால், 7,072 மில்லியன் யூனிட் power loss இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட 21 சதவீதத்திற்கும் மேல் power loss இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால், இதையும் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

அடுத்து, மின் திருட்டு. பெரிய மனிதர்கள் பலரால் மின்சாரம் திருடப்படுகிறது. அதேபோல, பெரிய தொழிற்சாலைகளால் மின்சாரம் தவறாக எடுக்கப்படுகிறது. எனவே, இவைகளையும் கண்காணித்தால், power loss குறைந்து, நம்முடைய தேவையை நாம் நிச்சயமாகப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நேற்றையதினம் இங்கே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் குறிப்பிட்டதைப் போல, 'மால்கோ' போன்ற பெரிய நிறுவனங்கள் பல கோடி ரூபாய்க்கு மின் கட்டணத்தைச் செலுத்தாமல் இருக்கின்றன. இதை வசூலிப்பதற்கு மின்சார வாரியம் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின்சாரம் மிக மிகத் தேவை என்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக, தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிக மிக அவசியம். போக்குவரத்து வசதி, தொலைதொடர்பு வசதி இல்லாத இடங்களில்கூட, மின்சார வசதி இருந்தால், தொழில் தொடங்கலாம். நம்முடைய அரசு பல பகுதிகளில், பல ஒன்றியங்களை தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதி என்றும், மிகவும் பின்தங்கிய பகுதி என்றும் அறிவித்திருக்கிறது. அப்படி அறிவிக்கப்பட்டதில், 216 ஒன்றியங்கள் பின் தங்கிய பகுதிகளாகவும், 71 ஒன்றியங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகவும் இருக்கின்றன. ஆனால், இந்தப் பின் தங்கிய பகுதிகளிலும், மிகவும் பின் தங்கிய பகுதிகளிலும் Rural Feeder தான் அதாவது Agricultural Feeder தான் இருக்கிறது. விவசாயத்திற்கு மட்டும்தான் மின் இணைப்பு இருக்கின்றது. Industrial Feeder கிடையாது.



பிறகு, தொழிலில் மிகவும் பின்தங்கிய பகுதி என்று அறிவித்து என்ன பிரயோசனம்? அங்கே Industrial Feeder-க்கு மின்சார வசதி இல்லையென்று சொன்னால், யார் அங்கே தொழில் துவங்க முன்வருவார்கள்? குறிப்பாக, திருச்சி மாவட்டத்தில் மருங்காபுரி ஒன்றியத்தில் Industrial Feeder கிடையாது. என்னுடைய பசும்பொன் மாவட்டத்தில் கண்ணங்குடி மற்றும் எஸ்பூர் ஒன்றியங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே Agricultural Feeder தான் இருக்கின்றது. Industrial Feeder கிடையாது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த காளையார்கோவில் ஒன்றியமும் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அங்கேயும் Agricultural Feeder தான் இருக்கிறது. Industrial Feeder கிடையாது. (மணியடிக்கப்பெற்றது) ஆகையினால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் வளர்ச்சியை விரும்புவதாலும், தொழில்கள் வளர வேண்டுமென்று ஆசைப்படுவதாலும், பின்தங்கிய பகுதிகளுக்கும், மிகவும் பின்தங்கிய பகுதிகளுக்கும் மின்சாரம் தேவை என்பதை உணர்ந்து அந்தப் பகுதிகளில் Industrial Feeder வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடைசியாக ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறி என் உரையை முடிக்கிறேன். மின்சாரத் துறையில் அடிக்கடி கொள்கை மாற்றங்கள் வருவதாகத் தொழில் முனைவோர் கருதுகின்றனர். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சட்டமன்றம் கூடுவதற்குச் சில நாட்கள் முன்பு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில அறிவிப்புகளை வெளியிடும் நேரத்தில், உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழிற்சாலைகளுக்கு மின்சாரச் சலுகை இனிமேல் வழங்கப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறார்கள். பல பேர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தொழில் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, கடன்கள் வாங்கி, கட்டிடங்களையும் கட்டி அதற்குத் தேவையான மெஷின்களைப் போட்டு, தொழில் துவங்குகிற நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பு வந்ததைக் கண்டு அவர்கள் பேரதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அவர்கள் மேலும் என்ன நினைக்கிறார்கள் என்றால், இந்த அறிவிப்போடு நின்றுவிடுமா அல்லது மேற்கொண்டு சில அறிவிப்புகள் வந்துவிடுமா என்று அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கேரளத்தில் ஒரு கொள்கையை வைத்திருக்கிறார்கள். அது என்னவென்றால், ஒரு தொழிற்சாலைக்கு மின் இணைப்பு வழங்குகிறபோது, என்ன கட்டணம் இருந்ததோ, அதே கட்டணம்

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1997 ஏப்ரல் 22

ஐந்தாண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்கும், மாற்றப்பட மாட்டாது என்ற ஒரு முறையை வைத்திருக்கிறார்கள். அதை Pegging of Electricity tariff என்று சொல்லலாம். இடையிலே அரசு அறிவிப்புகள் எது வந்தாலும் அது அந்தத் தொழிற்சாலையைப் பாதிக்காது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு முறையை, கேரளாவில் இருப்பதைப் போன்ற Pegging of Electricity tariff என்ற அந்த முறையை நம்முடைய தமிழ்நாட்டிலேயும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிறைவாகச் சொல்லிவிடுகிறேன். இன்னும் சில கருத்துக்கள் சொல்ல வேண்டியிருந்தாலும், நேரத்தின் அருமை கருதி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஜி. பழனிசாமி.

முற்பகல் 11-10

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய 1996-97 மற்றும் 1997-98-ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிநிலை அறிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்தின் விவசாயம், தொழில் வளர்ச்சி, வர்த்தகம், கல்வி ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி, வறுமை நீக்கி, நிறைந்த வாழ்வு அளித்திட ஒளி கொடுக்கக்கூடியது மின் துறை. மின் உற்பத்தி ஆதாரங்களைக் கொண்டு, தரமான மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தரமான மின்சாரத்தை எந்த வகையிலே வழங்கப்போகிறோம் என்பதற்கான கொள்கைகளைக்கூட, நீண்டதூரப் பார்வையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில், 8,9, மற்றும் 10-வது திட்டக் காலங்களிலே ஏற்படும் தேவைகள், உற்பத்தியை பெருக்குவதற்கான முறைகள், சிக்கன நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி ஒரு நீண்டதூரப் பார்வையோடு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1997 ஏப்ரல் 22] [திரு. ஜி. பழனிசாமி]

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. கிருட்டிணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். புதிதாக மின் உற்பத்திச் செய்கின்ற திட்டங்களுக்கு தனியார்களுக்கு அனுமதி அளிப்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் நம்மிடத்தில் இருக்கின்ற மின் உற்பத்தியை தனியார்களுக்கு தாரை வார்த்துக் கொடுப்பதைதான் நாங்கள் வரவேற்கவில்லை. இதேபோன்று தனியார்களுக்கு தாரை வார்த்துக் கொடுப்பதன் காரணமாக, அவர்களுக்குப் பின்னாலே நம்முடைய அரசு செல்ல வேண்டிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அரசு நடத்தும் வாரியத்திலேயே பல கோடிக்கணக்கான ரூபாய்கள் நட்டம் வருகிறது. குறிப்பிட்ட காலம் வரை அவர்கள் அரசு விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு, பின்னர் தனக்குக் கட்டுப்படியாகவில்லை, வேறுமாதிரி செய்யலாம் என்று அவர்கள் கோரிக்கை வைக்கிறபோது, அதைப் பரிசீலனை செய்யக்கூடிய அபாயம் ஏற்படும். முறையாக, சீரான விநியோகம் செய்யப்பட வேண்டுமென்றால், இவ்வாறு தனியார்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்கக் கூடாது. அப்படி தாரை வார்த்துக் கொடுப்பதன் மூலமாக நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மிகப் பெரிய அபாயம் ஏற்படும் என்ற கருத்தைத்தான் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

லைன் லாஸ் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அமைச்சர் அவர்கள், லைன் லாஸ் 17 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது, உண்மையாக லைன் லாஸ் என்பது 13 சதவீதத்திலிருந்து 16 சதவீதம் வரைதான் இருக்கும். மற்றவற்றையும் இதில் சேர்த்து 17 சதவீதம் லைன் லாஸ் என்று கணக்கு காட்டுகிறார்கள் அதிகாரிகள். லைன் லாஸ் என்றால் என்ன? முன்னால் காப்பர் கம்பி போடப்பட்டிருந்தபோது லைன் லாஸ் கிடையாது. தற்போது அலுமினியக் கம்பி போடுவதால் லைன் லாஸ் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதிலேகூட, தரமான அலுமினியக் கம்பிகளை அரசாங்கம் கொள்முதல் செய்கின்றதா என்றால் கிடையாது. மின் மீட்டர்களை பல நிறுவனங்களில் பொருத்தியிருக்கிறோம். அந்த நிறுவனங்களில் மீட்டர் சரியாக இயங்குகிறதா, இல்லையா என்பதைக் கண்காணிப்பது கிடையாது. மீட்டர் ஓடாமல் நிற்கிறது. ஆனால் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். இதைக் கண்காணிக்க வேண்டும். விவசாயிகள், பல்வேறு தரப்பினர், ஒற்றை விளக்கு கொண்ட வீடுகள் ஆகியவற்றிற்கு மின்சாரத்தை வழங்குகிறபோது, அந்த மின்சாரத்தை, அதிகாரிகள் கண்காணிப்பு இல்லாத காரணத்தால், திருடுகிறார்கள்.

இந்தத் திருட்டை அதிகாரிகள் தடுப்பதற்குப் பதிலாக, துணை போகிறார்கள். ஆகவே இதிலே இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுவதைத் தடுக்க வேண்டும்.

தனியார்மயம் பற்றி உறுப்பினர்கள் பேசினார்கள். 'பெல்' நிறுவனத்தை தனியாருக்கு விட்டுவிடலாம் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அன்றைக்கு திரு. வி.பி. சிங். பாரதப் பிரதமராக இருந்தபோது, தனியாருக்கு விடத் தேவையில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு என்ன நிலைமை? 'பெல்' நிறுவனம் இலாபகரமாக நடக்கிறது. இதை ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

மின்சாரத் துறை நிர்வாகத்தை சீராக நடத்த வேண்டுமென்றால், ஒழுங்குபடுத்த வேண்டும். 1989-லிருந்து 1997 வரை எத்தனை முறை தலைவர் மாற்றப்பட்டிருக்கிறார்? வாரியத்தின் தலைவர் பொறுப்பிற்கு 9 பேர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? 9 பேர் மாற்றப்பட்டதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்படியெல்லாம் மூன்று மாதங்களுக்குள், ஆறு மாதங்களுக்குள் அந்த வாரியத்தின் தலைவர்கள் மாற்றப்பட்டதன் விளைவாக, மின்சாரத் துறையிலே சரியானதொரு நிர்வாகத்தை நடத்த முடியாத காரணத்தினால், அங்கே பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், மின்சாரத் துறையை ஒழுங்கு படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-15

அதேபோன்று, மின் அழுத்தக் குறைவு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறுவிதமான கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருந்தாலும்கூட, 48 துணை மின் நிலையங்களை உருவாக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் தன் உரையில் அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு, நகரத்திலே மட்டும் போதிய மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இருந்தாலும், கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமென்றால், ஏழையெளிய மக்களுடைய பிள்ளைகளின் கல்வித்தரம் உயரவேண்டுமென்றால், கிராமப்புறங்களிலும் சீரான மின்சாரம் வழங்கப்பட வேண்டும். ஆனால், அங்குள்ள சாதாரண மக்களுடைய பிள்ளைகள், உட்கார்ந்து படிப்பதற்குப் போதுமான மின் ஒளி இல்லாத ஒரு நிலை கிராமப்புறங்களிலே இருக்கின்றது. எனவே,



புதிய துணை மின் நிலையங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், சென்ற தடவை, எங்கள் தொகுதியிலுள்ள முத்துப்பேட்டையில் ஒரு துணை மின் நிலையம் ஓராண்டு காலத்திற்குள் நிறுவப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றையதினம் வரை அதற்கான பணிகள் துவங்கப்படவில்லை. அதற்கான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், ஒரு வேலையை தனியாருக்கு காண்ட்ராக்ட் மூலமாக விடுகின்றபோது, அவர்கள் உடனடியாக அந்தப் பணிகளைச் செய்து விடுகிறார்கள். எனவே, இதுபோன்ற தேக்க நிலைகளை நீக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று, விவசாயிகளுக்குச் சென்ற ஆண்டு 40,000 இணைப்புகள் வழங்கப்பட்டதைப் போன்று, இந்த ஆண்டும் 40,000 இணைப்புகள்தான் வழங்கப்பட உள்ளன. அதேபோன்று வீடுகளுக்கு ஒற்றை விளக்குகள்—ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கக்கூடிய மின்சாரம் —சென்ற ஆண்டு 9,000 ஆதிதிராவிட குடியிருப்புப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டதைப் போன்று இந்த ஆண்டும் 9,000 குடியிருப்புப் பகுதிகளுக்கு வழங்கப்பட உள்ளது. அதேபோன்று, தொழிற்சாலைகளுக்கு சென்ற ஆண்டு 21,000 மின் இணைப்புகள் வழங்கப்பட்டதைபோல இந்த ஆண்டும் 21,000 இணைப்புகள் தான் வழங்கப்பட உள்ளது. இப்படி இருப்பதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று, கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 50,000 ரூபாய்க்கு மேல் செலவழிக்கக்கூடிய விவசாயிகளுக்கு—அந்த விவசாயிகளே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்—மின் இணைப்பு என்று இருப்பது, ஏதோ வசதியடைத்தவர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதைப் போன்று இருக்கின்றதே தவிர, ஏழையெளிய, நடுத்தர விவசாயிகளைப் பாதுகாக்கக்கூடிய விதத்திலே, நேரடியாக விவசாயத்திலே இறங்கி, உழக்கூடிய விவசாயிகளைப் பாதுகாக்கின்ற விதத்திலே இந்த நிலை இல்லை. ஆகையினால், சீனியாரிட்டி அடிப்படையில் நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அது சரியாக இருக்கும். அந்தவகையில் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

[திரு. ஜி. பழனிசாமி] [1997 ஏப்ரல் 22

அதேபோன்று திராவிட முன்னேற்றக் கழகம் முன்னர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 32,000 ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக, அரசு ஊழியர்களாக அறிவித்தார்கள். அதேபோன்று, இன்றும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்று, இப்போது இருக்கக்கூடிய 16,000 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நிரந்தரப்படுத்துவதன் மூலம் மின்சாரத் துறையினை ஒழுங்காகப் புனரமைப்புச் செய்ய முடியும். இன்றைக்குப் போதுமான தொழிலாளர்கள் இல்லை. எனவே, ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி போன்ற பகுதிகளில், மின்சாரம் வழங்கப்படும்போது, அங்கே நடப்படுகின்ற 'போஸ்ட்'களுக்கு ரூ. 2,500 கட்ட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால், போதுமான நிதிநிலை இல்லாத பேரூராட்சிகள் அதைக் கட்ட இயலாத அவல நிலையில் இருக்கின்றன. ஆகையினால், அவர்களுடைய தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு, அந்தக் கட்டணத்தைக் குறைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், கிராமப்புறங் களிலே நடப்படுகின்ற அந்த இரும்பு போஸ்ட்கள் கான்ட்ராக்ட் மூலம், தனியார் மூலம் செய்யப்படுகின்றன. அவை ஓராண்டுக்குக்கூட இருப்பதில்லை. கம்பிகள் மட்டும் இருக்கின்றன. அதிலும் எங்களுடைய மாவட்டங்களைப் போன்ற மாவட்டங்களில், விவசாயிகள் நிறைந்திருக்கின்ற மாவட்டங்களில், வயல்களில் நடப்படுகின்ற கம்பங்கள், அடிக்கடி புயல் வருகின்ற காரணத்தினால், நூற்றுக்கணக்கான கம்பங்கள் விழுந்து விடுகின்றன. சென்ற ஆண்டில் நடப்பட்ட கம்பங்கள் இந்த ஆண்டில் விழுந்துவிடுகின்ற அபாயம் இருக்கின்றது. ஆகவே, கான்ட்ராக்ட் முறையை மாற்றி, அரசாங்கமே அந்த போஸ்ட்களைத் தயாரிக்கின்ற பணியில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே மிகப்பெரிய மோசடி நடக்கிறது. அதிலே, பொறுப்பு இல்லாத தன்மை இருக்கிறது. அதிகாரிகள் கண்காணிப்பும் கிடையாது. இதன் விளைவாக, பல உயிரிழப்புகள்கூட ஏற்படுகிற அபாயகரமான நிலை இருக்கிறது என்று சொல்லி...(மணியடிக்கப்பெற்றது)



1997 ஏப்ரல் 22]

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, நல்ல இதயம் படைத்த ஆற்காட்டார் அவர்களின் மருத்துவத் துறை மானியத்திலே, நான் பேசுவதற்காக வாய்ப்பு கேட்டிருந்தேன். அப்போது அனுமதி மறுக்கப்பட்டது. அதன்பிறகு, நான் வேறு மானியத்திலே பேச மறுத்துவிட்டேன். மீண்டும் ஆற்காட்டாருடைய இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு அனுமதித்ததற்காக என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை உங்களுக்கு மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல இதயம் படைத்த ஆற்காட்டார், 61 வயதை நேற்று எட்டியிருக்கிறார்; அவரை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், ஏழை, பின்தங்கிய மக்கள் சார்பாகவும் உளமாரப் பாராட்டி, நன்றி சொல்ல நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஏனென்றால், எந்த உறுப்பினர்கள் அவரைத் தேடிச் சென்றாலும், உடனே அவர் இன்முகம் காட்டி, வரவேற்று, கட்சிப் பாகுபாடின்றி, கேட்டதைக் கேட்டபடி, 'அட்சய பாத்திரம்' போல, அள்ள அள்ள வழங்கக்கூடிய, ஒரு நல்ல இதயம் படைத்த அவருக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை மீண்டும் சொல்லிக்கொள்கிறேன். அப்பேர்ப்பட்ட நல்ல இதயம் படைத்த ஆற்காட்டார் அவர்கள்மேல், சென்ற முறை, இதே மாமன்றத்திலே, ஒரு பழி வந்தது; அதை துணிவோடு, தைரியத்தோடு, எதிர்த்து நின்றார். அதுவும் எப்படி? ஒரு குணக்குன்று போல எதிர்த்து நின்றார். நான் அந்தத் தவறைச் செய்ததாக நிரூபித்தால், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியையும், இந்த அமைச்சர் பதவியையும் தூக்கி எறியத் தயார்; நிரூபிக்கத் தயாரா என்று இந்த மாமன்றத்தில் சிம்மக் குரல் எழுப்பினார். அப்படிப்பட்ட அவருடைய சிம்மக் குரலுக்கு, மதுரையிலே நீதியைக் காத்த, இப்போது இந்த ஆசனத்திலே வீற்றிருக்கும் நம்முடைய சபாநாயகர் அவர்கள், சிறந்த ஒரு நீதியை எடுத்துச் சொன்னார்கள்......

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று . . . .

[1997 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உரையை முடித்து விடட்டும், பிறகு கேளுங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன், அவர் என்னதான் சொல்ல வருகிறார் என்பதைப் பார்ப்போம். அவர் உரையை முடித்துவிடட்டும்; நீங்கள் இருங்கள்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசும்போது சொல்லலாம். இப்போது குறுக்கிட்டுச் சொல்லக் கூடாது. அன்பு துணை சபாநாயகர் அவர்களே, இதுபோல, ** குறுக்கீடுகள் இல்லாமல், எனக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசிய வார்த்தைகளில் ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலே இருந்து அகற்றுமாறு உத்தரவிடுகிறேன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத் திரும்பப் பெற்று, சின்னக் குறுக்கீடு என்று வேண்டுமென்றால் அமைத்துக் கொள்ளுங்கள்.

நமது ஆற்காட்டாரைப் பற்றி சொல்லும்போது, 'மாடு முட்டி கோபுரம் சாய்வதில்லை; மாணிக்கம் கூழாங்கல் ஆவதில்லை' என்ற பாடல்தான் என்னுடைய நினைவுக்கு வருகிறது என்பதை மட்டும் சொல்லிக்கொண்டு, இங்கே பேசிய அருமைச் சகோதரர் திரு. ரங்கநாதன் அவர்களும், அதேபோல் அன்புச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்களும், அமைச்சர் அவர்கள் விருந்து படைக்க வேண்டியதில்லை; இந்த நாட்டுக்கு நல்லது செய்யுங்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் கூறிக்கொள்கிறேன்: அவருடைய 61-வது வயதிலே, குடிசைகளுக்கு மின் இணைப்பு 40 ஆயிரமும், விவசாயப் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு 40 ஆயிரமும், தெருவிளக்குகள் 30 ஆயிரமும், 60 துணை மின் நிலையங்களும் அளிப்பதாக இங்கே பெருத்த மகிழ்ச்சிக்கிடையே தெரிவித்தார். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மின்வாரியத் தொழிலாளர்களுக்கு அறுவைச் சிகிச்சைக்காக ஒரு இலட்சம் ரூபாய் மானியமாகவும், தேவைப்பட்டால் ஒரு இலட்சம் ரூபாய் கடனாகவும் அளிக்கப்படுமென்று சொன்னார். அதற்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைச் சொல்லிக் கொண்டு,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1997 ஏப்ரல் 22] [திரு. இ. கணேசன்]

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு—என்.எல்.சி.-க்கு—நிலம் கொடுத்து 40 ஆண்டுகளாகியும், அந்த நிலத்திற்கு உரிய நஷ்டஈடோ, நிலம் கொடுத்தோரின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்போ இதுவரை கொடுக்கப்படவில்லை.

முற்பகல் 11-25

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ஐயா அவர்கள் சென்ற 25 நாட்களுக்கு முன்னால் சுமார் 10,000 பேரோடு ஒரு மாபெரும் பேரணியை நடத்தி உரிமைக் குரலை எழுப்பியிருக்கிறார்கள். நம்முடைய கலைஞர் அரசு அந்த ஏழை எளியவர்களுக்கு, கருப்புத் தங்கத்தை இந்த நாட்டுக்கு அளிக்கக்கூடிய அந்த ஏழைகளுக்குச் சேர வேண்டிய, முறையாகக் கிடைக்க வேண்டிய அந்த நஷ்டஈட்டுத் தொகையையும், நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பையும் பெற்றுத்தர வேண்டுமென்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கோரிக்கையை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, 1987-லிருந்து 1996 வரை கிட்டத்தட்ட 30 கிராமங்களில் 30,000 ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கக்கூடிய குடும்பங்களில், 16,282 பேர்களுக்கு வேலை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை 1,626 பேருக்கு மட்டும்தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. 2,211 பேர்களுக்கு மீண்டும் வேலை கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுவரையிலே கொடுக்கப்படவில்லை. தமிழக அரசும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இதன்மீது தனிக் கவனம் செலுத்தி அந்த ஏழை எளியவர்களுக்குக் கல்வி வசதி, மருத்துவ வசதி, தொழில் வசதி, மின்சார வசதி ஆகியவைகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

பவானி பவர் ஹவுஸ் திட்டத்திலே கதவு 1, கதவு எண் 2 ஆகிய கட்டுமானப் பணிகள் மிகவும் மெதுவாக, எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படாமல், சர்வே செய்ததோடு இருக்கின்றன. உடனடியாகத் தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையை உணர்ந்து (மணியடிக்கப்பெற்றது) அந்த வேலையை உடனே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ரேணிகுண்டா, ஆந்திராவினுடைய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டுக்குக் கிட்ட வேண்டிய மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை உடனடியாகத் தமிழக அரசு பெற்றுக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது ரேணிகுண்டா அல்ல, இராமகுண்டம்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி. அதேபோல மின்சார வாரியத்திலே இதுவரை 25,000 ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அவர்களுக்கு எந்தவிதமான வேலையும் வழங்கப்படவில்லை. உடனடியாக மின்சார வாரியத்தில் தற்காலிக வேலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அந்த 25,000 பேர்களுக்கும் நிரந்தர வேலைவாய்ப்பினை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத் துறை அதிகாரிகளைப் பற்றிச்சொல்ல வேண்டுமானால் ஆட்சி மாறியும் அதிகாரிகள் தங்களுடைய இஷ்டம் போலக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது எந்தெந்தத் தொகுதியில் என்று சொல்வதைவிட, அனைத்துத் தொகுதிகளிலும் அதிகாரிகள், வீட்டுக்கு மின்சார இணைப்புக் கேட்டால்கூட அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால்தான் மின்சாரம் கிடைக்கிறது. ஆனால் நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல உள்ளத்தோடு, வீட்டுக்கு மின்சாரம் வேண்டுமென்றால் ஒரு மாத காலத்திலே கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் கப்பம் கட்டினால்தான் மின்சாரம் கிடைக்கிறது. அதுவும் இணைப்புக் கிடைக்க 6 மாத காலத்திற்கு மேலே ஆகிறது என்பதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எடப்பாடித் தொகுதி விசைத்தறிகள் நிறைந்த தொகுதி. விசைத்தறித் தொழிலாளர்கள் சுமார் 10,000 பேருக்கு மேலே அங்கு விசைத்தறித் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 2,000 பவர் பம்புகள் இருந்தால், அவற்றிற்கு மின் இணைப்பு பெற்றிருந்தால் அது நகரப் பகுதியாக கணக்கிடப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் எடப்பாடியிலே 2,500 பவர் பம்புகள் மின் இணைப்பு பெற்றிருந்தும் இதுவரை அதை நகரப் பகுதியாகக்



கணக்கிடாததனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை. பகல் 2 மணிக்கு நிறுத்தி மாலை 6 மணிக்கு அல்லது 7 மணிக்குத்தான் மின்சாரத்தைக் கொடுக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து இந்த நிலைமையை மாற்ற வேண்டும். காலையிலும், மாலையிலும் 1 மணி நேரம் வேண்டுமானால் நீங்கள் மின்சாரத்தை நிறுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து அந்த மக்களுக்கு மின்சாரம் கிடைக்க வேண்டும். மின்சாரத்தைத் தடை செய்வதால் அங்குள்ள விவசாயத் தொழிலாளர்களும், நெசவுத் தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

நம்முடைய ஏழை விவசாய நாட்டில் விவசாயிகளுடைய பம்பு செட்டுகளுக்கு பவர் குறைவாக வருவதால் அப்படியே தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது. அந்த எரிச்சலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று தணிக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எடப்பாடி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஒரு எச்.டி. லைன் சென்று கொண்டிருக்கிறது. அது மிகத் தாழ்வாகச் சென்று கொண்டிருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியில் விளையாடக்கூடிய பெண் குழந்தைகள் மிகவும் பயப்படுகிறார்கள். காக்கை மற்றும் பறவைகள் அந்தக் கம்பியில் உட்கார்ந்தால் மாபெரும் வேட்டுச் சத்தத்தோடு அந்தப் பறவைகள் வெட்டு எழுப்பி இறக்கின்றன. அதைப் பார்த்து குழந்தைகள் மிகவும் பயந்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த எச்.டி. லைனை ஒரு ஓரமாக எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். ஜீவன்தாரா கிணறுகளுக்கு அரசாங்கம் மானியம் வழங்குகிறது. ஆனால் அந்தக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்க மானியப் பணத்தில் கிணறு வெட்டியுள்ள அந்த ஏழைகளுக்கு மின் இணைப்பு கிட்டவில்லை என்றால் அந்த ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு லிட்டர் டீசல் 9 ரூபாய், 10 ரூபாய் என்று கிராமப் பகுதிகளில் கிடைப்பது இல்லை. 15 ரூபாய், 20 ரூபாய் என்று

வாங்கி விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. இதனால் நாட்டில் உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுகிறது. இதை உணர்ந்து ஜீவன்தாரா கிணறுகள் வெட்டக்கூடிய அந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு உடனடியாக மின்சாரம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக ஒன்று. என்னுடைய கிணற்றுக்கு மின்சாரம் வேண்டுமென்று சென்ற முறை முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே ஒரு விண்ணப்பதை நான் கொடுத்து இருந்தேன். அவர்கள் இணைப்பு போடுவதாக வந்தார்கள், நான் பயந்துகொண்டு அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய கிணறுகள் ஒன்றுக்குக் கூட..(மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம், என்னுடைய பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் ஆரம்பத்திலே மாண்புமிகு அமைச்சருக்கு 5 நிமிடம் வாழ்த்து சொன்னது ஏனென்று இப்போதுதான் தெரிகிறது. (சிரிப்பு) இந்தக் கோரிக்கையை முன்பே வைத்து இருக்கலாம்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே உள்ள கிணறுகளுக்கு எல்லாம் முதலில் மின் இணைப்புக் கொடுங்கள், சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய கணேசனுக்கு பின்னால் கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தேன். இப்போது பக்கத்தில் இருக்கக்கூடிய அத்தனை கிணறுகளுக்கும் மின்சாரம் வந்து விட்டது. மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக நான் இப்போது இருக்கிறேன். 20 ஆண்டு காலமாக என்னுடைய கிணறுக்கு மின்சாரம் வரவில்லை. என்னவென்று புரியவில்லை. அதிகாரிகளிடத்திலே சென்று கேட்டால் அவர்கள் மனு வரவில்லை என்று சொல்கிறார்கள். நான் அப்போதிருந்த முதலமைச்சரிடத்திலே, அப்போதிருந்த அந்த மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே மனுக்களைக் கொடுத்தேன். அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறேன். என்னுடைய மனு எப்படியோ காணாமல் போய்விட்டது என்று சொல்கிறார்கள். அரசாங்க ஆணை நிச்சயமாக அமைச்சரிடத்திலே இருந்து சென்று இருக்கும். ஆகவே இதுபோல், என்னைப் போல் இன்னும் எத்தனையோ ஆயிரம் பேர் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த விவசாயிகள் மீது கருணை கொண்டு அவர்களுக்கு ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை செலவானால் மட்டும் அதில் அரசாங்கம் மின்



இணைப்பு வழங்குகிறது. ஆனால் 2 இலட்சம், 3 இலட்சம் ரூபாய் செலவு செய்து ஏழை விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி விரும்பி கேட்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு இலட்சம் ரூபாய் வரை அவர்களுக்கு செலவு ஆகிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

* **திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையினை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென் மண்டலத்திலேயே மின்வெட்டு இல்லாத ஒரே மாநிலம் தமிழகம்தான். குறிப்பாக மின் கட்டண உயர்வு என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கூடச் சொன்னார்கள். அகில இந்தியாவிலேயே வீடுகளுக்கு உபயோகிக்கின்ற மின்சாரத்திற்கு தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உபயோகிக்கின்ற மின்சாரத்திற்கு மிகக் குறைந்த கட்டணம் தமிழகத்தில் தான் உண்டு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் 15.62 இலட்சம் பேர்களுக்கும், அதைப்போல குடிசையில் வாழும் தாழ்த்தப்பட்ட மின் நுகர்வோர்கள் 14 இலட்சம் பேர்களுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கி வருவதை நான் பெரிதும் வரவேற்கிறேன். மின்சாரம் உற்பத்தி செய்வதன் மூலம் அல்லது விற்பனை செய்வதன் மூலம் 4.827.68 கோடி ரூபாய் அந்த வாரியத்திற்கு வருமானம் வருகிறது, ஆனால் உற்பத்திச் செலவு 5,166.28 கோடி ரூபாய். ஆக 338 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு நஷ்டம். ஏறக்குறைய ஆண்டுக்காண்டு 400 மெகாவாட் மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகிறது. தனியார் மூலமாக—16 தொழில் முனைவர்களிடம்—9,273 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. இந்தத் திட்டம் 1999-லேதான் நிறைவேற்றப்படும்.

முற்பகல் 11-35

அடுத்து, 7 ஆயிரம் மில்லியன் யூனிட் பவர் லாஸ் என்று சொல்லப்படுகிறது. இது குறைந்தபட்சம் 20 முதல் 25 சதவீதம் வரை இருக்கும். ஆக மின் உற்பத்தியிலே 25 சதவீதம் லைன் லாஸ் ஆகிறது.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு சீராக மின்சாரத்தை வினியோகிக்கவும். 'line loss,' line theft, power loss' போன்றவற்றைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொது உடைமையிலே அக்கறை உள்ள மேற்கு வங்க அரசு கல்கத்தா மாநகரத்திலே, மின்சாரத்தை தனியார்கள் வினியோகிக்கிறார்கள். சமீபத்தில் 12-4-1997 நாளைய 'ஹிந்து' நாளிதழில் மிட்னாபூர் என்ற மாவட்டத்திற்குக்கூட தனியார் மின்சாரத்தை வினியோகிப்பதற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கிறது.

ஆகவே, குறைந்தபட்சம் சென்னையிலாவது மின்சாரம் வினியோகிக்கும் பணியை தனியாருக்கு ஒப்படைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

குப்பையிலிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பதைப் பொறுத்தவரையில்—இது கடந்த கால அரசினுடைய திட்டமாக இருந்தாலும் கூட—நம்முடைய அரசுதான் இதற்காக நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 4 ஏஜென்சிகள் முன்வந்துள்ளார்கள். அவர்கள் மூலம் அண்ணா மாவட்டத்திலுள்ள பழையசிவரம் என்ற கிராமத்தில் 120 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதாக நிர்ணயிக்கப்பட்டு, முதல் கட்டமாக அது 6 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய துவங்கியிருக்கிறது. இதில் டிட்கோ நிறுவனத்திற்கு—இடையில் இருந்து செயல்படுகின்ற நிறுவனமாக—குப்பைகள் சப்ளை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலே ஒரு நாளைக்கு 2,500 டன் குப்பை சேருகிறது. ஆகவே, இடையிலே அதற்கு எதற்கு டிட்கோ? எனவே நேரடியாக சென்னை மாநகராட்சிக்கே அதை ஒப்படைத்துவிட்டால் குறைந்த செலவில் நீங்கள் எங்கே கேட்கிறீர்களோ அங்கு குப்பைகள் சப்ளை செய்வதற்கு சென்னை மாநகராட்சி தயாராக இருக்கிறது. இதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கால அரசு 1994-95ல் ஆதிதிராவிட மக்களுக்கு, ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அது முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இந்த நிதிநிலை அறிக்கையில் 2,050 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு தெரு விளக்கு வசதியை ஏற்படுத்த அரசு திட்டமிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஆகவே, ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.



கடந்த ஆட்சி காலத்தில் நிலக்கரி கொள்முதல் செய்ததில் பெரிய ஊழல் ஏற்பட்டது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்—7 அமெரிக்க நிறுவனங்கள்—அதிலே 5 நிறுவனங்கள் சப்ளை செய்துள்ளது. இரண்டு நிறுவனங்கள் சப்ளை செய்யாமல் இருந்தன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி நிலக்கரியிலே மட்டும் 4.68 கோடி ரூபாயை மிச்சப்படுத்தி இருக்கிறார்கள். ரீ-டெண்டர் கோரி மிச்சப்படுத்தியிருக்கிறார்கள். அதைப்போல, 5,700 டன் மின் கடத்திகள்—'டிரான்ஸ்பார்மர்கள்'—வாங்கியதிலேகூட அவர்கள் 7.62 கோடி ரூபாயை மிச்சப்படுத்தி இருக்கிறார்கள். இதுவும் வரவேற்கக் கூடியதாகும். புதை கேபிள்களிலே 2.25 கோடி ரூபாயை மிச்சப்படுத்தி இருக்கிறார்கள்.

கடந்த ஆட்சி காலத்தில் அடிக்கடி கேபிள் பழுது அடைந்து உள்ளது என்று சொல்லி, அடிக்கடி தரைகளைத் தோண்டுவது, கேபிள் புதைப்பது போன்றவற்றில் பெரிய ஊழல் நடைபெற்று இருக்கிறது. ஆனால் தோண்டுவதே கிடையாது. ஆனால் அதற்கான பில்களை போட்டார்கள். இன்றைக்கும் அப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதாக அறிகிறோம். அதை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'பியூஸ் ஆப் கால்' ஆபீஸ்களில் இரவு நேரங்களில் யாருமே இருப்பது இல்லை. வாச்மேன்கள்கூட சரியாக அங்கே இருப்பதில்லை. அங்கே போன் கால்கள் அட்டெண்ட் செய்யப்படுவதில்லை. எனவே இதில் ஷிப்ட் முறையைப் பின்பற்ற வேண்டும். எனவே ஒரு நாளைக்கு 3 ஷிப்டுகள் என்று வைத்து, குறைந்தபட்சம் அங்கே அசிஸ்டென்ட் எஞ்சினியர் லெவலிலே இந்த பியூஸ் ஆப் கால்களை அட்டெண்ட் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து, உடனுக்குடன் பொதுமக்களுக்கு அவற்றை நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தென் சென்னை அனல் மின் நிலைய உற்பத்தித் திட்டம். (குறுக்கீடு) வடசென்னை அல்ல. அண்ணா மாவட்டம் செய்யூர் கிராமத்தில் 2000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறைவேற்றவுள்ளது உண்மையிலே வரவேற்கத்தக்கதாகும்.

கேரள மாநிலத்தில் காயங்குளத்திலே, மின் நிலையம் அமைக்கப்பட்டு 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த மின்சாரம் முழுவதையும் அவர்களே பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதேபோல், தென் சென்னை அனல் மின் நிலையத்திலே உற்பத்தியாகும்

[திரு. செங்கை சிவம்] [1997 ஏப்ரல் 22

2,000 மெகாவாட் மின்சாரத்தையும் நமக்கே வழங்க மத்திய அரசைக் கோர வேண்டும். கல்பாக்கத்தில் அணு மின் நிலையத்திலே இரண்டு யூனிட்டுகள் இருக்கின்றன. முதல் யூனிட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் தமிழகத்திற்கு 80 சதவிகிதம் மின்சாரமும் மற்றும் ஆந்திரம், கேரளம், கர்நாடகாவுக்கு 20 சதவிகிதமும் வழங்குகிறார்கள். இரண்டாவது யூனிட்டிலே 50 : 50 என்று வழங்கப்படுகிறது. அதையும் 80 சதவிகிதமாக மத்திய அரசை வலியுறுத்திப் பெறவேண்டும்.

முற்பகல் 11-40

கூடங்குளம் அனல் மின் நிலையத் திட்டம். இது சமீபத்திலே, நம்முடைய முன்னாள் பிரதமர் திரு. தேவகவுடா அவர்கள் ரஷ்யாவிற்குச் சென்றிருந்தபோது, 17,000 கோடி ரூபாயிலே கூடங்குளத்திலே அனல் மின் திட்டத்திற்கு ஒப்பந்தம் செய்தார்கள். அது மிகவும் வரவேற்கத்தக்கது. நமது நாட்டிலே 2000-ஆவது ஆண்டில் ஏறக்குறைய 100 கோடியாக மக்கள் தொகை உயர்ந்துவிடும். எனவே, அதனைக் கருத்திலே கொள்ள வேண்டும். நமது மாநிலத்தில் நெய்வேலி, கல்பாக்கம் உள்ளிட்ட அனைத்து மின் நிலையங்களிலும் சுமார் 5,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. 2000-ஆவது ஆண்டில் மின் உற்பத்தி பற்றாக்குறை என்பது நிச்சயமாக 4,500 மெகாவாட் அளவுக்கு இருக்கும். கூடங்குளம் அனல் மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை தமிழகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 1989-ல் நடைபெற்ற ஒரு கருத்தரங்கிலேகூட, இந்திய சமூக விஞ்ஞானிகள் கழகத்தைச் சேர்ந்த திரு. வி. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூடங்குளத்திலே அணு மின் நிலையம் வருவதை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது கூடங்குளம் அணு மின் நிலையம்.

**திரு. செங்கை சிவம்:** கூடங்குளம் அணு மின் நிலையம்தான். காலித் கமிஷன் குத்தகைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய சிபாரிசு செய்து கடந்த காலத்திலே அதற்குப் பின்னாலே, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அதை உறுதி செய்தது. மூன்று சங்கங்கள் கொடுத்த அந்தப் பணியாளர்களை, அந்த ஒப்பந்தப் பணியாளர்களைத்தான் நியமிக்கிறார்கள். திரு. ஞானசேகரன் அவர்கள்கூட அதை வலியுறுத்திச் சொன்னார்கள். நான் உண்மையிலேயே சொல்கிறேன். இன்னமும் 20,000 கான்ட்ராக்ட் வேலைதாரர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் கொடுக்கிற அந்தப் பட்டியலை



1997 ஏப்ரல் 22] [திரு. செங்கை சிவம்]

நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரத்தின் போதுகூட ஒன்றை வலியுறுத்தினேன், கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு காலத்தில் 500-க்கு மேற்பட்டவர்களை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்று கூறிவிட்டு, ஒரு சங்கத்தினுடைய பெயரைத் தான் சொல்கிறார்கள். ஒரே சங்கம் கொடுக்கின்ற பட்டியலைத்தான் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்வதை, மாண்புமிகு உறுப்பினர் மாற்றிக்கொள்வாரா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.என்.டி.யு.சி., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு. எல்லாம் பட்டியல் கொடுக்கிறார்கள். அதைக் கொடுத்து ஏற்றுக் கொண்டிருக்கின்றது நிருவாகம். ஆகவே, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பரிந்துரை மற்றும் கோரிக்கை செய்கிற இந்த 20,000 தொழிலாளர்கள் இன்னும் வேலை நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களைத்தான் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேனே தவிர இதிலே வேறு ஒன்றுமில்லை, குற்றம் ஒன்றுமில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் சீக்கிரம் பேசிமுடியுங்கள்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது இல்லையென்கிறது எனக்குத் தெரியும். ஆனாலும் கூட அதிலே இப்போது பல முறைகேடுகள் இருக்கின்றன. ஆகவேதான் இன்னமும் 20,000 தொழிலாளர்களையும் நீங்கள் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே 500-க்கு மேற்பட்டவர்களை கருணை அடிப்படையிலே வேலையில் அமர்த்தவில்லை. ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் 552 பேரை இப்போது வேலைக்கு அமர்த்துவதாக உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். இதிலே ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1990-ல் நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பீடத்திலே இருக்கிறபோது 8-வது வகுப்புக்குக் கீழே படித்து இருப்பவர்களுக்கு கல்வித் தகுதியைத் தளர்த்தி, பியூன், அட்டெண்டர், வாட்ச்மேன் மற்றும் ஹெல்பர் போன்ற பதவிகளில் அவர்களைப் பணி நிரந்தரம் செய்திருக்கிறார்கள். ஆகவே, நான் வலியுறுத்திக்

[திரு. செங்கை சிவம்] [1997 ஏப்ரல் 22

கேட்டுக்கொள்கிறேன், ஏறக்குறைய 10 ஆண்டு, 18 ஆண்டு காலமாக கஷ்டப்பட்டுக்கொண்டு, பிச்சையெடுக்கின்ற சூழ்நிலையில் இருக்கிற அந்தத் தொழிலாளர்களையும் பணியமர்த்துவதற்கு கருணை உள்ளத்தோடு நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலுரையில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தயவுகூர்ந்து ஒன்றே ஒன்று கூறிவிட்டு, பேச்சை முடித்துக்கொள்கிறேன். மின்வாரியக் குடியிருப்புகளில் குடியிருக்கிறவர்கள் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்துவிட்டாலோ அல்லது ரிடையர் ஆனவுடனோ குடியிருப்பவர்களை உடனே காலி பண்ணிவிடுகிறார்கள். ஆனால், அப்படி செய்யக்கூடாது. குறைந்தது மூன்று மாத கால அவகாசமாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்த மூன்று மாத காலத்திற்குள் அவர்களுக்குச் சேரவேண்டிய, பணம் முழுவதும் வழங்க வேண்டும். இரயில்வே, ஏர்லைன்ஸ் போன்ற மற்ற துறைகளில் பணியாற்றியவர்களுக்கு இரயில்வேயில், ஏர்லைன்சில் இலவச பாஸ் எல்லாம் கொடுக்கிறார்கள். மின்வாரியத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? அவர்கள்தான் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கவேண்டாம், சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியில் ஜெகஜீவன்ராம் நகர், உங்களுக்குத் தெரியும், உங்களுக்குத் தெரிந்ததால்தான் சொல்கிறேன், ஏனென்றால், நீங்கள் ஏற்கெனவே சட்டமன்றத்திலே பேசியிருக்கிறீர்கள், ஜெகஜீவன்ராம் நகர் என்று பேசின் பிரிட்ஜ் பகுதியிலே இருக்கிறது. அங்கே அதிகமாக வீடுகட்டுவதற்கு காலி இடம் இருக்கிறது. பல ஆண்டுகளாக எவ்வளவோ தொழிலாளிகள் குடியிருப்பு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தொழிலாளர்கள் தேவையை உணர்ந்து காலியாக இருக்கின்ற அந்த இடத்திலே குடியிருப்புகள் கட்ட வேண்டும். அதேபோல, அதிகாரிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டும், கடந்த ஆட்சிக் காலத்திலே வீடுகள் கட்டப்படாமலே போய்விட்டது. ஆகவே, அதிகாரிகளுக்கும் சேர்த்து குடியிருப்புகள் கட்ட வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு, மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். சந்தானம்.



1997 ஏப்ரல் 22]

* திரு. எஸ். சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், இந்தத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற எங்களது பாசமிகு சகோதரர் அவர்கள் 60 வயதைத் தாண்டி இன்றைக்குப் பிறந்த நாள் கொண்டாடுகிற நிலை இருந்தாலும்கூட, அவர் அடக்கத்தோடு, அத்தனை வசதிகளையும் பெற்றிருந்தாலும்கூட, பிறந்தநாள் விழா வேண்டாம் என்று அடக்கத்தோடு இருக்கின்ற அந்த நிலையை நான் வெகுவாகப் பாராட்டி, அவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, பொது நலத் தொண்டில் ஈடுபட்டு, தமிழக மக்களுக்கு இன்னும் பல அரிய செயல்களை ஆற்றிட வேண்டும் என்று என்னுடைய இயக்கத்தின் சார்பிலே அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கைமீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்:

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்.”

என்று பாரதி சொன்னான். ஒரு நாட்டிலே முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்று சொன்னால், உழவுத் தொழிலும், பிற தொழில்களும் முன்னேற்றம் அடைவதன் மூலம் தான் சமுதாய முன்னேற்றம் ஏற்படும் என்ற அடிப்படையில், இந்த இரண்டு தொழில்களைச் செய்கின்றவர்களையும் பாராட்ட வேண்டுமென்றும், அந்தத் தொழில்கள் முன்னேற வேண்டும் என்ற கருத்தையும் பாரதி எடுத்து வைத்தான். இன்றைக்கு இந்த இரண்டு தொழில்களும் முன்னேறுவதற்கு அடிப்படையாக இருப்பது மின்சாரம். உழவுத் தொழிலாக இருந்தாலும் சரி, மற்ற ஆலைகள் மூலம் செய்யப்படுகின்ற தொழிலாக இருந்தாலும் சரி, இரண்டிற்கும் மின்சாரம் என்பது மூலப் பொருளாக இருக்கின்ற காரணத்தினால், மின்சாரம் இன்றியமையாத ஒன்று என்று நாடு இன்றைக்கு உணர்ந்திருக்கிறது. எனவே, அந்த மின்சாரத்தைப் பல வகையிலே உற்பத்தி செய்தாலும்கூட—நீர் மூலமாக, அனல் மூலமாக, காற்றின் மூலமாக, எத்தனையோ வழிகளில் மின்சாரத்தை உற்பத்தி செய்தாலும்கூட—இன்றைக்கு தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை என்று சொல்கிற அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. அதை வருகின்ற காலங்களிலே போக்குவதற்கு அரசு முனைய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலே அவர்கள் மின்சாரத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். கடந்த காலங்களிலே நிலத்தடி நீர் என்பது பூமிக்கு மிக அருகாமையிலே இருக்கின்ற சூழ்நிலை இருந்தது. 10 அடி, 15 அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கின்ற சூழ்நிலை மாறி, ஏறக்குறைய 50 அடி, 100 அடி என்று கிணறுகளை ஆழப்படுத்தி, விவசாயத்தைச் செய்கின்ற நிலையில், மின்சாரத்தைத் த்விர் வேறு மாற்று வழியே இல்லை என்கிற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. மோட்டார் போன்றவைகளை வைத்து. எவ்வளவோ அடி ஆழ்த்தில் கிடைக்கின்ற தண்ணீரை இறைப்பதற்கு முடியாது. ஆகவே மின்சாரத்தைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நமது அமைச்சர் அவர்கள் பகல் நேரங்களிலே 4 மணி நேரம் எந்தவிதத் தங்குதடையுமின்றி மின்சாரம் கிடைக்கும் என்று அறிவித்திருந்தாலும்கூட, இன்றைக்கும் கிராமப்புறங்களிலே நாங்கள் எல்லாம் சென்று பார்க்கும்போது, அந்த விவசாயிகள் எல்லாம் எங்களிடத்திலே வந்து, பகல் நேரங்களிலே 4 மணி நேரம் மின்சாரம் முறையாகக் கிடைக்கவில்லை என்று சொல்லுகிற நிலைதான் உள்ளது. அதை முறைப்படுத்தி, அந்தமாதிரி 4 மணி நேரம் மின்சாரம் பகல் நேரங்களிலே கொடுக்கப்படும் என்பதை, முடிந்தால் 6 மணி நேரமாகக் கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது பகுதியைப் பொறுத்தவரையில், கரடிக்கல் என்ற ஊரிலே துணை மின் நிலையம் இருக்கிறது. அந்தப் பகுதியை ஒட்டியிருக்கின்றவர்களுக்கெல்லாம் 24 மணி நேரமும் மின்சாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், எங்களுக்கு ஒரு மணி நேரம்கூட சரியாக மின்சாரம் கிடைப்பதில்லை. எனவே, எங்களுடைய பகுதியில் விக்கிரமங்கலம், சக்கரப்ப நாயக்கனூர் போன்ற இடங்களுக்கு, கரடிக்கல் பகுதியிலிருந்து மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோல், இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில், நெல் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அங்கு இருக்கின்ற விவசாயிகளுக்கு மின் இணைப்பு அதிகப்படியாக வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுகூட 2,000 மின் இணைப்புகள் அதிகமாக வழங்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல, எனது மதுரை மாவட்டம், தமிழகத்திலே இரண்டாவது நிலையில்,



பெரியார் நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்திக்கொண்டு அதிகப்படியான நெல் உற்பத்திசெய்கின்ற இடமாக இருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதியிலே, பெரியாறு நீர்ப்பாசனப் பகுதியிலே, ஒவ்வொரு ஆண்டும், தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுப்பதுபோல, குறைந்தபட்சம் 200 மின்சார மோட்டார்களுக்காவது மின் இணைப்பு வழங்கப்படுகின்ற ஒரு நிலையை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பேசது துணை மின் நிலையங்களை அமைக்கின்ற இந்த நேரத்திலே, விவசாயத்தை அதிகப்படியாகச் செய்கின்ற தஞ்சை, திருவண்ணாமலை-சம்புவராயர், மதுரை போன்ற மாவட்டங்களுக்கு, விவசாயப் பகுதிகள் நிறைந்த அந்த இடங்களுக்கு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஊராட்சி மன்றங்களில் இருக்கின்ற தெருவிளக்குகள், பணம் செலுத்தப்படவில்லை என்று சொன்னால், அவைகளுக்கெல்லாம் மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. தெருவிளக்குகளோடு மட்டுமல்லாது, குடிநீருக்காகப் பயன்படுத்தப்படுகிற மோட்டார்களுக்கும் மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அதேபோல கூட்டுறவு நூற்பாலைக்கும் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. மேலூரில் ஒரு கூட்டுறவு நூற்பாலை இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த நூற்பாலை 6 இலட்ச ரூபாய் மின் கட்டண பாக்கியைக் கட்டவில்லை என்பதற்காக இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால், அந்த நூற்பாலையினுடைய மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதன் காரணமாகத் தொழிலாளர்கள் எல்லாம் தங்களுடைய வேலையை இழந்து, அவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டார்கள். எனவே இப்படிப்பட்ட அரசு மேற்கொண்டு நடத்துகிற அந்த ஆலைகளுக்காவது பொருளாதார நிலை சீரடைகின்ற வரையிலும், அவர்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படாமல், அந்தத் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கிராமப்புறங்களில் இருக்கின்ற தெருவிளக்குகள், குடிநீர் போன்றவைகளுக்கெல்லாம் மின் இணைப்பு-அந்த ஊரர்ட்சி மன்றங்களில் நிதியில்லாது இருந்து வருகின்ற நிதிநிலையின் அளவைக் கருத்தில்கொண்டு-துண்டிக்கப்படாத அளவுக்கு பாதுகாப்பளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru. B. Venkatasamy:** Hon. Deputy Speaker, Sir, I thank you for giving me an opportunity to speak on the Electricity Board Budget. At the outset, I thank the Hon. Minister for Electricity, for not reintroducing tariff system for agricultural pumpsets. Really, agriculturists were feeling that this Government might reintroduce the tariff system for agricultural pumpsets. In the reply given by the Hon. Minister last time also, he has expressed his feelings that since the present ruling party had brought the scheme of free power supply, they were not going to withdraw that scheme. So, I wholeheartedly thank him on behalf of the agriculturist community of the State as well as the entire Nation, for maintaining the status-quo in this matter.

Coming to the other points, Electricity is the main source of economic development in the entire Nation. By keeping this idea in view, you must see that more electricity is produced. I came to know that the Hon. Minister has taken a lot of steps, such as hydro-electric, thermal, wind generation, bio-gas, municipal waste bio-gas and private participation projects. In the production of electricity, all these schemes have been taken up. But, I wanted to stress one more thing. Regarding bio-gas, lot of potential is there. For example, about 10 cattle farms are there. Cow dung is being wasted there by using them as manure. We can generate lot of electricity through cow dung which is available in an abundant measure. So, I request the Hon. Minister to examine that and do it.

முற்பகல் 11-55

Sir, some new Central sector units have also come here. For example, there is N.L.C., TSI with 2 units with a capacity of 210 MW, N.T.P.C. with 500 MW at Ramagundam, Rihand Thermal Station in U.P. which is going to give power to the southern States. Then there is a 2000 MW. Project at the Koodangulam Atomic Power Project, which was discussed by the then Prime Minister Sri Deve Gowda with the Russian President so as to allocate the entire power generated to Tamil Nadu. It should also be expedited. We are also going to take the surplus power from Orissa. I came to know that there is a very big project to be set up at Hogenakkal. I request the Hon. Minister to see that this project is speeded up for generating electricity.

Sir, regarding the supply of electricity to the ryots there should not be any restriction because they are depending on rainfall only. In our State,



there are a few drought-stricken districts like Ramanathapuram and Dharmapuri. In those places there is no river. So, they are depending only on pumpsets. The Hon. Minister has said that they will get electricity connections after 11 years. Is it possible for the small ryots to wait for 11 years? In Karnataka, they are giving the supply within 15 days or a month. You must see that priority is given to the poverty-stricken areas with regard to electricity connections whenever the applications are given by the farmers. For example, if you put a bore well and leave it unused for 11 years, then it will completely silt up. What is the use of giving electricity after that? So, at least in the case of bore wells, you must see that electricity is given urgently.

Sir, in my constitutency, there is low-voltage in about 25 per cent of the villages. Even the children cannot read the school books in the night. I request the Hon. Minister to see that the voltage drop is minimised. The people of Dharmapuri can be compared to ill-fed children. You must give them medicine in the form of more water and more electric power. Then only they can come up on par with the other districts like Thanjavur and other places. So, you must give priority to these ill-fed children. You must give them more nourishment.

Regarding clean administration, Sir, there is corruption in this department and you must look into this very, very seriously. You must tell the facts. Otherwise, you may be thinking that your administration is very good. Whenever a man goes from the village, definitely your people are not treating him properly. I request you to see that at least the agriculturist who enters your office is given due respect. I wish that, at least in your period, self-sufficiency in electricity is attained in Tamil Nadu so that all developments take place through electricity. Sir, I thank you very much for giving me this opportunity.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு முதலில் நன்றி கூறிக்கொள்கிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1997 ஏப்ரல் 22

மின்சாரம் என்றால், தொட்டால்தான் ஷாக் அடிக்கும் என்பார்கள். ஆனால் பல ஆண்டு காலமாகத் தமிழகத்தில் மின்சாரம் என்று நினைத்தாலே ஷாக் அடிக்கக்கூடிய அளவிற்கு நிலைமைகள் இருந்துகொண்டு இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, இன்றைய அரசினுடைய சில கொள்கைகளின் மீது எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

அமைச்சரின் உரையில் பல்வேறு நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதாவது alternative, eco friendly plants. மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் சூரிய ஒளி, காற்றாலை, சாண எரிவாயு ஆகிய திட்டங்களையெல்லாம் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புத் திட்டங்கள் என்ற வகையில் அறிவித்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் பாராட்டுக்குரியவைகள். ஆனால் நடைமுறையில் 20-க்கும் மேற்பட்ட திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை 11 திட்டங்களில், தனியார் துறைகளுக்கு அனுமதி தரப்பட்டிருக்கிற திட்டங்களில் இந்தச் சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாக்கக்கூடிய திட்டங்கள் வராதது வருந்தத்தக்கது. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கக்கூடியது மட்டுமல்ல அந்தத் திட்டம். அனல் மின் திட்டம் போன்ற மற்ற திட்டங்களின் மூலம் தயாரிக்கப்படக்கூடிய மின்சாரத்தைக் காட்டிலும் அவற்றுக்குச் செலவு குறைவு. உதாரணமாக, கூடங்குளத்திலே வரக்கூடிய அணுமின் திட்டத்திற்கு 17,000 கோடி ரூபாய் செலவாகும். ஆனால் அதேயளவு மின்சாரத்தை, இன்னும் சொல்லப்போனால் அதைவிட இரண்டு மடங்கு மின்சாரத்தை இந்தப் பதினேழாயிரம் கோடியில் சூரிய ஒளியிலிருந்து தயாரிக்க முடியும். கூடங்குளத்திலே அணுமின் நிலையத்தைக் கொண்டு வருவதற்குத் தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும்கூட, ரஷியாவிடம் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் அங்கே அத்திட்டம் வரவிருக்கின்றது. எனவே, அதுபோன்ற திட்டங்கள் வர விடாமல், நாம் எதிர்ப்புத் தெரிவித்து அவற்றுக்கு மாறாக சூரிய ஒளியின் மூலமாக மின்சாரத்தைத் தயாரிப்பதற்கான திட்டத்தைத்தான் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும். ஏனென்றால் கூடங்குளம் அணுமின் திட்டம் ஏற்கெனவே அந்தப் பகுதி மக்களால் புறக்கணிக்கப்பட்டது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இப்போதுதான் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்காக, குறிப்பாக வள்ளியூர், ராதாபுரம் தாலுகாக்களின் வளர்ச்சிக்காக பச்சையாறு, நம்பியாறு போன்ற திட்டங்களை இந்த அரசு அறிவித்திருக்கின்றது. அந்த நம்பியாற்றுத் திட்டமும், பச்சையாற்றுத் திட்டமும் பலன் அளிக்கவிருக்கின்ற இந்த வேளையில் அந்தப் பகுதியை அழிக்கக்கூடிய



1997 ஏப்ரல் 22] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

ஒரு அணுமின் திட்டத்தினைக் கொண்டு வருவது சரியாக இருக்க முடியாது. எனவே, கூடங்குளம் அணுமின் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய தமிழக அரசு கடுமையாக மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே வற்புறுத்திக்கூறி இருக்கிறார்கள். அதாவது ஏற்கெனவே இங்கே செயல்பட்டுக்கொண்டு இருக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் இன்றைக்குத் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் இப்போது புதிதாகக் கட்டக்கூடிய ஒரு திட்டம் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே நல்ல முறையில் நடந்து வரக்கூடிய திட்டத்தை அரசாங்கமே நடத்தினால் இலாபம் ஈட்ட முடியும். ஏன் அதை மீண்டும் தனியாருக்குத் தாரை வார்க்க வேண்டும்? எந்தக் கம்பெனியும் தமிழகத்திற்குள்ளே இலாப நோக்கில்லாமல் நுழைவது கிடையாது.

ரஷ்யாவில் 1918-ல் புரட்சி ஏற்பட்டு, பிறகு ஐந்து ஆண்டுகளில் லெனின் அவர்கள் அந்த நாட்டை மின்மயமாக்கினார். ஏன் நம்மால் அதைச் செய்ய முடியாது? அந்தக் கருத்தை ஏன் பரிசீலிக்கக் கூடாது? (குறுக்கீடு) மன்னிக்கவும், 1918 அல்ல, 1917-ல் தான் புரட்சி ஏற்பட்டது. ஆனால் 1922-க்குள் அந்த நாட்டை மின் மயமாக்கிக் காட்டினார்கள். அதேபோல ஒரு தீவிரமான மின் மயமாக்கும் திட்டத்தை, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே ஏற்படுத்துவதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக் காட்டியதைப்போல இங்கே விவசாயிகள் மின் இணைப்புக்காக 10 ஆண்டுகள். 12 ஆண்டுகள் காத்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, 50,000 ரூபாய்க்குள் எஸ்டிமேட் இருந்தால், 10,000 ரூபாய் கட்டிவிட்டு எஸ்டிமேட் போட்டுவிடுகிறார்கள். 50,000 ரூபாய்க்கு உள்ளே இருந்தால் 10,000 ரூபாய்தான். ஆனால் அந்த எஸ்டிமேட் 50,000-த்திலிருந்து 51,000, அல்லது 52,000, அல்லது 55,000 என்றிருந்தால் ஒட்டுமொத்தமான தொகையையும் கட்ட வேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். இது சரியானது அல்ல. ஒரு இலட்ச ரூபாய் வரையிலும் திட்ட மதிப்பீடு இருந்தாலும்கூட, 10 ஆயிரம் ரூபாய் கட்டினால் போதும் என்ற அளவிற்கு அரசு உத்தரவிட்டால் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான விவசாயிகள்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1997 ஏப்ரல் 22

பலன் பெறுவார்கள். நாட்டிலே விவசாய உற்பத்தி பெருகும், விலைவாசி குறையும். எனவே இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

அதேபோல இங்கே அறிவிக்கப்படாத மின் தடையைப்போல, பல கிராமங்களில் குறிப்பாக என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள பல கிராமங்களில் ஏறக்குறைய 4 மணி நேரத்திற்குக்கூட மின்சாரம் வராத நிலைமைகளை நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் எல்லாம் படிக்க முடியாமல் திணறுகிறார்கள். அது ஏற்கெனவே ஒரு வறட்சியான பகுதி. அந்தப் பகுதியிலே 4 மணி நேரம் மட்டுமே மின்சாரம் வந்தால் அவற்றைக் கொண்டு எப்படி விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும்? எனவே அங்கே மின்தடை இல்லாமல், வோல்டேஜ் குறைவு இல்லாமல் இருப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதியில் துணை மின்நிலையங்கள் மிகமிகக் குறைவாக இருக்கின்றன. அதன் காரணமாக அந்தப் பகுதியின் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறது. ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட குறுக்குச் சாலை முதல் புளியம்பட்டி வரையான பிரதான சாலையில் 110 மெகாவாட் அளவில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள ஓட்டநத்தம் கிராமத்தில் 30 மெகா வாட் துணை மின்நிலையம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு இன்னும் அது செயல்படாமல் இருக்கிறது. அதை ஒரு பிரதானச் சாலையிலே துவக்கி, அதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக, தனியார் துறைக்கு நாம் அதிகமாகக் கவனம் செலுத்தாமல், பொது நிறுவனங்களின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு கொள்கையை இந்த அரசு கடைபிடித்தால்தான் சரியாக இருக்கும். அது பல்வேறு விதங்களிலே சரியானது. ஏனென்றால் தனியார் நிறுவனங்கள் எல்லாம் நாளை வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீட்டு முறையைக் கடைபிடிக்க மாட்டார்கள். ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான பிற்படுத்தப்பட்ட,



1997 ஏப்ரல் 22] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

தாழ்த்தப்பட்ட மக்கள் வேலையின்றித் தவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். மேலும் வெளிநாட்டுத் தனியார் கம்பெனிகளை நம்புவது, புலிவாலைப் பிடிப்பது போலாகும். எந்தத் தனியார் கம்பெனியும், அந்த நாட்டினுடைய வளர்ச்சி, பொருளாதாரம், அவர்களுடைய இலாப நோக்கத்தை மட்டுமே பார்ப்பார்களே தவிர, எந்த நாட்டிலே தொழில் தொடங்கி இருக்கிறார்களோ அந்த நாட்டினுடைய நலனைக் கருத மாட்டார்கள். எனவே அது வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவதைப் போல, புலிவாலைப் பிடிப்பதைப் போலாகும். எனவே தனியார் மயமாக்குவதை விட்டுவிட்டு, பொது நிறுவனங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. சி. விஜயன்.

***திரு. டி. சி. விஜயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. மின்வாரியத்தின் மீதான விவாதத்தில் என்னைப் பேச அனுமதித்தற்கு தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் தொகுதிக்குத் தேவைப்படும் செயல் திட்டங்களையும், மற்ற உதவிகளையும் இம்மன்றத்தில் எடுத்துக் கூறுவதில் நான் மிகவும் பெருமையடைகின்றேன். இந்த அவையில் நான் முதலில் பேசியபோதே என் தொகுதி பெரியது என்றும், எனவே தேவைகள் அதிகம் என்றும் கூறினேன். கடந்த ஆட்சியாளர்களால் என் தொகுதி புறக்கணிக்கப்பட்டதால் மிகவும் பின்தங்கிய தொகுதியாக அது மாறி வருவதை மாற்றி ஆவன செய்யும் முகமாய், கேடு செய்த, புறம்பேசும் மாற்றார் தொகுதிகளுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்காக, எல்லா சட்டமன்ற உறுப்பினருக்கும் தலா ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்த முதல்வரின் தாயுள்ளம் கண்டு நாடே மகிழ்ச்சி அடைந்துள்ளது.

கழக ஆட்சியில் ஏழையெளிய மக்களின் துன்பங்களும், துயரங்களும் படிப்படியாகக் குறைந்து வருவதைப் பாராட்டத் துவங்கியுள்ளனர். இவ்வேளையில் என் தொகுதியின் தேவைகளை நிறைவேற்றிட உடனடியாக நடவடிக்கை தேவை என்று நான் இவ்வுரையின் துவக்கத்திலேயே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் மட்டுமல்லாமல், பல்வேறு மாநிலங்களின் மின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாய் என் தொகுதியில்

அமைந்துள்ள இரண்டு பெரிய மின் நிலையங்களும் மின் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பினும் என் தொகுதியில் அடிக்கடி மின் தடங்கல் ஏற்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருக்கும் டிரான்ஸ்ஃபார்மர்கள் ஆகும். இவற்றை மாற்றியமைக்க உறுதிபூண்டு புதிதாக பல டிரான்ஸ்ஃபார்மர்கள் வாங்கப்பட்டு ஆண்டுகள் பல ஆகியும், இன்னமும் மாற்றியமைக்காமல் நாட்களைத் தள்ளிப் போட்டு வரும் கடந்த ஆட்சியாளர்களின் அடிவருடிகளை இனம் கண்டு அவர்களை உடனே இடமாற்றம் செய்தும் புதிய டிரான்ஸ்ஃபார்மர்களை உடனே நிறுவிடவும் வழிவகை செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

திருவொற்றியூர், எண்ணூர், மணலி போன்ற பகுதிகளில் பல சிறு தொழிற்சாலைகள் தினமும் துவக்கப்படுகின்றன. மின் இணைப்பு வேண்டி மனு கொடுத்து நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. காரணங்கள் பல இருப்பினும் அதிகாரிகள் கூறுவது என்னவோ மீட்டர் இல்லை, கேபிள் இல்லை என்பதுதான். இந்நிலையை மாற்றிட அரசு மின் உபகரணங்களை வேண்டுமளவிற்குத் தந்திட வேண்டும் என்று தாழ்மையுடன் நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மின் இணைப்பு வேண்டி மனு செய்ய வருவோரை இன்முகம் காட்டி, பல வழிமுறைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி, மின் இணைப்பு எளிதில் பெற உதவி புரிய வேண்டிய அதிகாரிகள் அதற்கு நேர் மாறாக இருந்து, மனு செய்ய வருவோரிடம் தொல்லைகள் கொடுத்து பல முறை அலைக் கழிக்கும் அதிகாரிகளை மாற்றி, புதிய தொழில் வளம் சிறக்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று இந்த மன்றத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக திருவொற்றியூர் நகரில் பூமியில் போடப்பட்டுள்ள கேபிள்கள் மிகப் பழமையானவையாகும். எனவே, ஏராளமான இடங்களில் துண்டிக்கப்பட்டு இணைக்கப்பட்டிருப்பதாலும், தற்போதைய மின் அளவைத் தாங்கும் சக்தியை இழந்திருப்பதாலும், அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுகின்றது. எனவே, அரசு, நகரில் போடப்பட்டுள்ள பழைய கேபிள்களை அகற்றி, நவீன கேபிள்களைப் பொருத்திட முன்வரவேண்டும் என்று நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





எனது தொகுதியில் உள்ள எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கூட்டுறவு சேவைச் சங்கம் மூலமாக சுமார் 700-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கடந்த 10, 15 வருடங்களுக்கு மேலாக குறைந்த ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டு வருகின்றார்கள். அவர்களை நிரந்தரப்படுத்தி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும் என்று நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதே மின்வாரியத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணிபுரியும் தோழர்களை தினக் கூலியாக அதே மின்வாரியத்தின் மூலமாக பணி அமர்த்திட வேண்டும் என நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் தொகுதியில் உள்ள சில பிரச்சினைகளைச் சொல்லி விடைபெறலாம் என்று நினைக்கிறேன்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக அமைய உள்ள எண்ணூர் துறைமுகம், வடசென்னை அனல் மின்நிலையம் ஆகியவற்றிற்கு சென்னையிலிருந்து செல்ல தற்போதுள்ள சாலை வசதிகள் போதாது. அவற்றை அகலப்படுத்தி, சீர் செய்து, செப்பனிட்டு பதிய சாலை அமைத்திட அரசு முன்வரவேண்டும் என நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூரில் கடலோரப் பகுதியில் உள்ள குப்பங்களான கன்னிகோயில்பாட்டை, அப்பர் நகர், காசி விசாலாட்சிகோயில் குப்பம், அன்னை சிவகாமி நகர், காசி கோயில் குப்பம், பெரிய எர்ணாவூர் குப்பம், பலகைதொட்டி குப்பம், காசி விசுவநாதர் கோயில் குப்பம் ஆகிய பகுதிகள் ஏற்கெனவே கடல் அரிப்பினால் மறைந்து போய்விட்டது. மேலும், இருக்கும் பகுதிகள் தொடர்ந்து மூழ்காமல் தடுக்க அரசு முன்வருவதுடன், பெரும் பாறை கற்களைக் கொட்டுவதைத் தவிர்த்து, நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு, மும்பை துறைமுகச் சாலையைப் போன்று, எண்ணூர் நெடுஞ்சாலையை மாற்றி அமைத்து, வட சென்னை குறிப்பாக, திருவொற்றியூர் மக்களின் குறை தீர்க்க அரசு முயலவேண்டும் என்று நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் உள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலைகூட பல இடங்களில் குறுகி இருப்பதால் போக்குவரத்துத் தடை அடிக்கடி ஏற்பட்டு, தடை அகல பல மணி நேரம் ஆகின்றது. பல இடங்களில் சாலை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், பொதுமக்கள் மிக

[திரு. டி. சி. விஜயன்] [1997 ஏப்ரல் 22

அவதிக்குள்ளாகின்றனர். எனவே, குறுகிய இடங்களில் நிலங்களை கையகப்படுத்தியும் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தியும், அமைக்கப்படும் சாலையில் சோடியம் மின்விளக்குகள் அமைத்தும், நான்கு வழிச் சாலையாக மாற்றி, எழில்மிகு சென்னை 2000-ல் என் தொகுதியைச் சேர்த்திட வழிவகை செய்திட அரசு முனைய வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

*** திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவாதத்தில் பங்கேற்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்தையும் கூறி எனது உரையைத் துவங்குகிறேன்.

பிற்பகல் 12-15

மின்சார உற்பத்தியைவிட நமது நாட்டில் மின்சாரத் தேவை அதிகமாகி இருக்கிறது. மின்சாரத்தை அதிமாக உற்பத்தி செய்யலாம் என்றால் எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றால் புதிய மின் உற்பத்தித் திட்டங்களைத் துவங்க முடியவில்லை. 5,758 மெகாவாட் உற்பத்திக்கான பலவகைப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களில் வெறும் 800 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்களுக்கு மட்டும் மத்திய அரசு எரிபொருளை வழங்குவதாக உறுதி அளித்திருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் மேலும் நிலக்கரித் தட்டுப்பாடு, நிலக்கரியால் மாசு அதிகமாக ஏற்படுகிற காரணத்தால் இதுபோன்ற மின் உற்பத்தித் திட்டங்களைத் துவக்குவது அரிதாக உள்ள காரணத்தினால் இந்த நிலைக்கு ஒரு மாற்று நிலையை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். பல்வேறு ஆராய்ச்சியின் மூலம் வேறு வழிவகைகளைக் கண்டறிந்து அதன்மூலம் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் போதுமான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யவேண்டும். சமீபத்தில் ஒரு குறிப்பு ஒன்றைப் படித்தேன். கோழியிலிருந்து வரும் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியும். அந்தக் கழிவுகளினால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும்போது அதில் மாசு, சாம்பல் போன்றவை மிகவும் குறைவாக வருகின்றது என்பதை ஆராய்ச்சிக் குறிப்பு ஒன்றில் படித்தேன். அது எந்த அளவிற்குச் சாத்தியமானது, அது நடைமுறைக்கு ஒத்துவருமா



1997 ஏப்ரல் 22] [திரு. ஜி. நிஜாமுதீன்]

போதிய கோழிக்கழிவுகள் தமிழ்நாட்டில் கிடைக்குமா என்பதை இந்த அரசு கவனத்தில்கொண்டு ஆராய்ந்து, அதன்மூலம் மின் உற்பத்தியைப் பெறுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார்களுக்கு மின் உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்குவதை முழுமனதோடு ஆதரிக்கின்றோம். மேலும் தொழில்முனைவோர்கள் முன்வந்து மின் உற்பத்தியைச் செய்வதற்கு இந்த அரசு அவர்களுக்கு ஊக்கத்தை வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால், தனியார்கள் மட்டுமே ஒரு காரியத்தை வெற்றியாகவும், சிறப்பாகவும் செய்ய முடியும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வாதத்திற்கு வலு சேர்க்கும் வகையில் இங்கே சற்று முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். ஒரு காரியத்தை மின்வாரியம் செய்வதைவிட, அதை தனியார்களுக்கு கான்ட்ராக்ட் எடுக்கக் கொடுத்தால், அந்தக் காரியம் சீக்கிரம் நடைபெறுகிறது என்ற வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைய கால கட்டத்தில் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள்கூட தனியார்களுக்கு சப்போர்ட்டாகப் பேசுவதைக் கவனத்திலேகொண்டு, மின் உற்பத்தியை மட்டுமல்லாது, மின் வினியோகத்தையும் தனியார்களுக்கு வழங்குவதில் அரசு கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும். ஏனென்றால் தனியாரிடம் இதை விடுவதனால் விரயமாகும் சுமார் 7,000 மில்லியன் யூனிட் மின்சாரத்தையும் அவர்கள் மிச்சப்படுத்துவார்கள் என்ற கருத்தையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் இலவசம், இலவசம் என்ற பெயரால் மின்சாரத்தையோ, மற்றவற்றையோ வாங்கி வழங்கும்போது இந்த இலவசத்தை ஈடுகட்டுவதற்காக மீண்டும் அந்த மக்களிடத்திலிருந்தே பணத்தைப் பெறக்கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற இரண்டுங்கெட்டான் நிலையிலிருந்து மாறி தெள்ளத் தெளிவாக ஒரு டிரான்ஸ்பரன்சியான ஒரு நிலையை, கொள்கையைக் கொள்ள வேண்டும். இலவசமாகக் கொடுப்பது என்றால் எங்கிருந்து கொடுப்பது. அதைக் கொடுத்து விட்டால், அதை ஈடுசெய்வதற்குப் பணம் எங்கிருந்து வரும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே இலவசமாகக் கொடுத்தாலும், அதையும் முறைப்படுத்தி இவ்வளவுதான் கொடுக்க முடியும் என்ற அளவையும் நிர்ணயித்து வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லோ வோல்டேஜ், ஹை வோல்டேஜ் ப்ராப்ளம் தமிழ்நாடு முழுவதும் பெரும்பாலும் இருந்து கொண்டிருக்கிறது. இதனால்

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1997 ஏப்ரல் 22

விளக்குகள் போன்ற பொருட்கள் பழுதடைந்து வீணாக பாழ்பட்டுப் போகின்றன. ஆகவே அவற்றைச் சீரமைத்து எப்போதும் ஒரே சீரான மின்சாரம் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது தொகுதியிலே பிரதாபராமபுரம், காமேஷ்வரம், விழுந்தமாவடி, வேட்டைக்காரனிருப்பு. மேலைபிடாகை உள்ளிட்ட கீழையூர் ஒன்றியங்களின் பெரும்பாலான கிராமங்கள் மிகவும் லோ வோல்டேஜில் இருக்கின்றன. தெருவிலே போனால் சிறிய மண்ணெண்ணெய் விளக்கு எரிவதைவிட மிக மோசமான நிலையில் எரிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் புதிய துணை மின்நிலையம் ஒன்றை ஏற்படுத்திட மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்யவேண்டும்.

அதேபோல் நாகையிலே பாலம் கேட்டேன், துறைமுகம் கேட்டேன், தொழிற்சாலைகள் கேட்டேன், எதுவுமே கிடைக்கவில்லை. ஒரு அனல் மின் நிலையமாவது நாகப்பட்டினத்தில் ஏற்படுத்திட அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்திடம் சென்று மின் இணைப்பு கேட்டால், மீட்டர் இல்லை, ஒயர் இணைப்புக் கம்பம் இல்லை, அது இல்லை, இது இல்லை என்று தட்டிக் கழித்து அலைக் கழிக்கின்றார்கள். மீண்டும் வலியுறுத்திக் கேட்டால், வெளியே விற்கிறது. அதை வாங்கிக்கொண்டு வந்து கொடுங்கள். உடனே இணைப்புத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். அதுவே வெளியே கிடைக்கும்போது, ஏன் மின்சார வாரியத்திற்கு மட்டும் கிடைக்கவில்லை? வெளியே வாங்குகின்ற மீட்டரை மின்சார வாரியம் வைக்க அனுமதிக்கின்றது. அதை வாங்கி வாருங்கள் என்று மின்சார வாரியம் கூறுகின்றது. அப்படியென்றால், வெளியே அந்த மீட்டர் கிடைக்கும்பொழுது ஏன் மின்சார வாரியத்திற்கு மட்டும் கிடைக்கவில்லை என்பதைக் கவனத்தில் கொண்டு கன்ஸ்யூமர் என்ற நிலையிலே கன்ஸ்யூம் பண்ணுகிறவர்கள் ஒரு பொருளைக் கேட்கும்பொழுது, அதை உடனடியாகக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். ஆகவே, அதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

பிற்பகல் 12-20

1993-ஆம் ஆண்டு புயல் அடிக்கும்பொழுது பல மின்சாரக் கம்பங்கள் கீழே விழுந்தன. வளைந்து, உபயோகமற்ற நிலையிலே கீழே விழுந்தன. அதில் இரும்புக் கம்பங்கள் ஏராளம். அந்தக் கம்பங்கள் எல்லாம் என்ன ஆயிற்று? அதைக் கடந்த காலத்தில் என்ன செய்தார்கள் என்று ஒன்றுமே புரியவில்லை. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விசாரிக்க



1997 ஏப்ரல் 22] [திரு. ஜி. நிஜாமுதீன்]

வேண்டும். ஏனென்றால், ஒவ்வொரு கம்பமும் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கம்பம். பழைய இரும்பாக விற்றால்கூட, ஆயிரம் ரூபாய்க்கு மேல் பெறும். ஆயிரக்கணக்கான கம்பங்கள் அப்பொழுது கீழே விழுந்தன. ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டு, அவை என்ன ஆயிற்று என்று அமைச்சர் அவர்கள் விசாரணை வைக்க வேண்டும். கட்டணங்கள் பல்வேறாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு பொருளை ஒருவர் கன்ஸ்யூம் செய்கிறார். கன்ஸ்யூமராக இருக்கிறவர் வீடு வைத்திருந்தாலும் சரி, கடை வைத்திருந்தாலும் சரி, அதை பல்வேறு நிலையிலே பிரித்து, கட்டணம் உயர்வாகக் கேட்கும்பொழுது, அதையும் மக்கள்தான் கொடுக்கிறார்கள். கடைக்காரருக்குக் கூடுதலாகக் கட்டணம் விதிக்கும்பொழுது, அந்தக் கட்டணத்தை, அந்த வியாபாரி மக்களிடத்திலேதான் சுமத்துவார். அதனால், இந்தப் பல்வேறுதரப்பட்ட நிலையைத் தவிர்த்து ஒரே சீரான கட்டண முறையை உருவாக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

அதுபோல், 1996-97-ஆம் ஆண்டு அறிக்கைகளில் வேளாண்மை விரிவாக்கத் திட்டத்தின்கீழ் உணவு உற்பத்திக்காக ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 5,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதை வரவேற்கின்றோம். ஆனால் இத்திட்டத்தின்கீழ் இன்றுவரை 100 பம்ப் செட்டுகளுக்குக்கூட மின் இணைப்பு வழங்கப்படவில்லை. மேலத் தஞ்சை மாவட்டத்திற்கு 2,500 மின் இணைப்பும், கீழைத் தஞ்சை மாவட்டத்திற்கு 2,500 மின் இணைப்பும் என்ற நிலையிலே மேலத் தஞ்சை மாவட்டம் 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை என்ற நிலையிலே இந்த பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு பிரித்து வழங்கப்பட வேண்டும். நிலத்தடி நீர் அதிகமாக உள்ள கும்பகோணம் கிராமிய மின்சாரக் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்திற்குத் தனியாக 79 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க நிதி ஒதுக்கீடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மயிலாடுதுறையிலே 110/33 கே.வி. மின்மாற்றி ஒன்று உபயோகம் இல்லாமல் உள்ளது. இதை மணல்மேடு பகுதியில் மின்சார வாரியம் பொருத்த உத்தரவிட்டும், இன்னும் பொருத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவற்றை விரைவாகப் பொருத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து சர்க்கரை ஆலைகளும் கட்டாயமாக மின் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற ஒரு உத்தரவை இந்த அரசு பிறப்பிக்க வேண்டும். ஏனென்றால், சர்க்கரை ஆலைகளிலிருந்து வெளியாகக்கூடிய

கழிவுகளிலிருந்து சில ஆலைகள் மின் உற்பத்தி செய்கிறார்கள். சிலர் அதை விஸ்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கட்டாயமாக ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் மின் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நிலையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மேலும் திருப்பனந்தாளில் ஒரு துணை மின்நிலையம் துவங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலையில் அந்த வேலை இன்னும் துவங்கப்படாமல் உள்ளது. அவற்றை கவனத்தில் கொண்டு, உடனடியாக அந்த வேலையைத் துவங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். கும்பகோணம் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரியும் 103 ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டா இல்லாதவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படாத நிலை இருக்கிறது. கொஞ்ச நாளைக்கு முன்பு சிலர் பட்டா வாங்கி விட்டார்கள். ஒரே பகுதியில் வாழ்பவர்களில் ஒருசிலர் பட்டா வாங்கி விட்டார்கள், ஒருசிலர் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். இருவேறுபட்ட நிலை இருக்கிறது. கொடுத்தால், அனைவருக்கும் பட்டா கொடுக்க வேண்டும், இல்லையென்றால் அனைவரிடமிருந்தும் பிடுங்கிவிட வேண்டும். ஆகவே, இதில் எது சிறந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே கருத்தில்கொண்டு, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் துறையிலே தனியாரை அதிகமாக ஈடுபடுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கான மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், தமிழக காங்கிரசாரின் தன்மானத்தை மீண்டும் நிலைநாட்டிய எங்களது மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைக் கூற முன்வருகிறேன். விவசாயிகளைப்பற்றி குறிப்பிடும்பொழுது இந்த நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கின்றோம். நாட்டிற்கே உணவு வழங்கக் கூடியத் துறை இந்த விவசாயத் துறை. ஆனால், இந்த விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் சுமார் 7 அல்லது 8 வருட காலங்கள்



ஆகின்றன. ஒரு விவசாயி கேட்பதே 5 எச்.பி. மின்சாரம்தான். ஆனால், தொழிற்சாலைகளுக்கு 100 எச்.பி., 500 எச்.பி. என்று கேட்டால்கூட உடனடியாக வழங்க முன்வரும்போது, 5 எச்.பி. மின்சாரத்தை, இந்த விவசாயிகள் பெறுவதற்கு, இத்தனைக் காலம் காத்திருக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை நான் அறிய விரும்புகின்றேன். சிறந்த அறிவாற்றலும், சிறந்த ராஜதந்திரமும் கொண்ட இந்த அரசு, மத்தியிலும், மாநிலத்திலும் பொறுப்பேற்று இருக்கின்ற இந்த அரசு, இந்த ஏழை விவசாயிகளுடைய துயரைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் சுமார் 17 இலட்சம் மின் இணைப்புகள் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. மக்கள் தொகையைக் கணக்கிடும்போது, இது மிகவும் குறைவான ஒரு எண்ணிக்கையாகும். கடந்த ஆண்டுகூட, 40,000 மின் இணைப்புகள் என்று நிர்ணயித்தும் சுமார் 37,800 பேருக்கு மட்டும்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நடப்பாண்டிலாவது விண்ணப்பித்த அனைவருக்கும், அதாவது குறைந்தபட்சம் 5 எச்.பி. என்று விண்ணப்பித்த அனைவருக்கும் மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சுயநிதி திட்டத்தின்கீழ் விண்ணப்பித்திருந்தவர்களுக்குக்கூட ஆங்காங்கே உள்ள கோட்டத்திலே உச்சவரம்பு நிர்ணயித்திருப்பதாக அறிகின்றேன். ஆகவே அந்த உச்சவரம்பை விலக்கிவிட்டு அவர்களுக்கும் அந்த மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போலவே ஆட்சி மாறியும் அதிகாரிகளின் போக்கு மாறவில்லை என்பதை பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மின்துறையைப் பொறுத்தமட்டிலே அது மிகவும் வேரூன்றி இருக்கக்கூடிய ஒரு செயலாகக் கருதப்பட்டு வருகின்றது. ஒரு தொழிற்சாலை 25 எச்.பி. என்று விண்ணப்பித்தால் சுமார் ரூபாய் 25,000-லிருந்து 30,000 செலவு செய்தால்தான் அவர்களுக்கு அந்த மின் இணைப்பு கிடைக்கின்றது. இந்த உண்மையை மிகவும் வெட்கத்துடனும் வேதனையுடனும் நான் சொல்லிக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-25

'ஊழலை ஒழிப்போம், மக்களுடைய இன்னலைத் தீர்ப்போம்' என்று சொல்லி, எங்களது மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களோடு சேர்ந்து மக்களிடம் வாக்கு கேட்டோம். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் ஊழலும் தீரவில்லை; மக்கள் வேதனையும் தீரவில்லை,

[திரு. ஆர். ஆர். சேகரன்] [1997 ஏப்ரல் 22

மக்கள் எங்களை கேள்விக்குறியோடு பார்க்கிறார்கள். ஒரு பியூஸ் ஆஃப் கால் அட்டெண்ட் செய்தால்கூட 10 ரூபாய், 20 ரூபாய் கொடுத்தால்தான் பார்க்கிறார்கள். இந்தக் குறையை போக்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு மாவட்டந்தோறும் ஒரு கண்காணிப்புக் குழு ஏற்படுத்தினால் ஆங்காங்கே வரக்கூடிய அந்தக் குறைகளை அவ்வப்போது நாம் நிவர்த்தி செய்ய முடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொருள்களுக்கான கொள்முதல் ஆணை, பர்சேஸ் ஆர்டர் வழங்குவது தொடர்பாக வாரியத்தைச் சீரமைக்க இந்த அரசு மேற்கொண்ட முயற்சி வரவேற்கத்தக்கது. ஆனாலும்கூட தற்போதுள்ள நிலைமை, அதிகாரிகளுக்கே முழு உரிமையும் அளிக்கிறது. இதனை கண்காணிக்க அதிகாரிகள் அல்லாத நிபுணர்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு உயர் மட்டக் குழுவை ஏற்படுத்தி இந்த பர்சேஸ் ஆர்டர்களை மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது இந்தக் குழு கூடி கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே சிறு தொழில்களை எடுத்துக்கொண்டால், இது நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும் ஒரு வடிகாலாக இருந்து வருகின்றது. இந்தச் சிறு தொழிற்சாலைகளுக்கு மிகவும் குறைந்த கட்டணத்திலே மின்சாரம் வழங்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். மின் இணைப்பு வழங்கப்படும்போது டெவலப்மென்ட் சார்ஜ், செக்யூரிட்டி டெப்பாசிட் போன்றவைகளில் சிறு தொழில்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதைப்போலவே மீட்டர் இல்லை, மெட்டீரியல் இல்லை, கண்டக்டர் இல்லை என்று பல்வேறுவிதமான குறைபாடுகளைச் சொல்கிறார்கள். ஆகவே அரசு இதிலே கவனம் செலுத்தி அந்தந்தப் பகுதி பயனீட்டாளர்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரையுள்ள நேரக் கட்டுப்பாட்டிலிருந்து சிறு தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோடைக் காலங்களைத் தவிர மற்ற காலங்களில், அனைத்துப் பயனீட்டாளர்களுக்கும் இந்த நேரக்



1997 ஏப்ரல் 22] [திரு. ஆர். ஆர். சேகரன்]

கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே மின் கட்டணத்தை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வசூலிப்பது என்ற முறையை மாற்றி மாதம் ஒரு முறை வசூலிக்கும் முறையை அரசு ஏற்படுத்த வேண்டும். சிறு தொழிற்சாலைகள் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மின்சாரக் கட்டணம் செலுத்தும்போது மிகவும் அதிக பளுவினால் அவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்.டி. கன்சியூமர்களுக்கு 150 எச்.பி. உச்சவரம்பு என்று இருப்பதை குறைந்தபட்சம் 250 அல்லது 300 எச்.பி.-யாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் எங்களது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஜெனரேஷன், ட்ரான்ஸ்மிஷன், டிஸ்ட்ரிபியூஷன் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து தற்போது ஜெனரேஷனைப் பொறுத்த அளவிலே தனியார் துறையை ஊக்குவித்திருக்கிறார்கள். அதைப்போலவே டிஸ்ட்ரிபியூஷனிலும் தனியார் துறைக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், எங்களது சேலம் மாவட்டத்திலே முன்பு சேலம்-ஈரோடு எலெக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் என்ற ஒரு முறை இருந்து வந்தது. அப்போது அவர்கள் குறைந்த பணியாளர்களை வைத்துக் கொண்டு மிகவும் சீராக மின் விநியோகம் செய்து வந்தார்கள். ஃபியூஸ் ஆஃப் கால்கூட ஒரு மணி நேரத்திலே அட்டெண்ட் செய்து வந்தார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு முறையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மஹாராஷ்டிரா மாநிலத்தில், மும்பையில் உள்ளதுபோல் தனியார் துறைகளை இந்தப் பகுதியில் ஊக்குவிக்க வேண்டும். அங்கே ஃப்ரிஜ், டெலிவிஷன் போன்றவைகளில் ஸ்டெபிலைஸர்கள் கூட வைப்பதில்லை. அந்த அளவுக்குச் சீரான மின்சாரம் அங்கே வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, டிஸ்ட்ரிபியூஷன் துறையிலும் தனியார் துறைக்கு நீங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு 110 மெகாவாட் திறன் கொண்ட 20 யூனிட்டுகள் அமைக்கவிருப்பதாக இந்த அரசு அறிவித்தது. அவற்றின் தற்போதைய நிலை என்ன என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அவற்றிற்கான டெண்டர்கள் விடப்பட்டதா? அவற்றின் தற்போதைய நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரின் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே வாரியத்திலே காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அதிலே அப்ரான்டிஸ்களுக்கு முன்னுரிமை அளித்து இந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே குறிப்பாக சேலம் மாவட்டத்திலே பல பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு இருந்து வருகிறது. தமிழகம் நேஷனல் கிரிட்டில் இருந்தும்கூட, ஏன் இந்த நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். சேலத்திலே பல பகுதிகளிலே மதியம் 2-00 மணி முதல் 6-30 வரை மின் தடங்கல் இருக்கிறது.

கருப்பூரிலே உள்ள 110 கிலோவாட் துணை மின்நிலையத்தில் உள்ள 5 பீடர்களும் அந்தப் பகுதியிலே உள்ள தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குகின்றன. சேலம் மாநகராட்சியின் ஒரு பகுதிக்கு இதிலிருந்துதான் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. ஆனால் இந்தத் துணை மின் நிலையம் கிராமப்புற துணை மின் நிலையமாகக் கருதப்பட்டு மதியம் 2-00 மணி முதல் 6-30 மணி வரை துண்டிக்கிறார்கள். இந்தப் பகுதியிலே அரசினர் பொறியியல் கல்லூரி இருக்கிறது. பல்வேறு மருத்துவமனைகள் இருக்கின்றன. எல்.பி.ஜி. பாட்லிங் பிளான்ட் இருக்கிறது. ஆகவே இந்தப் பகுதியை நகர்ப்புற துணை மின் நிலையமாக மாற்றி, மின் துண்டிப்பு இல்லாமல் வழங்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

என்னுடைய தொகுதியிலுள்ள காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கனவாய்புதூர், வேப்பிநாயக்கன் ஆகிய கிராமங்களுக்கு தினமும் 4 மணி நேரம்கூட மின்சாரம் வழங்கப்படுவதில்லை. 2 பேஸ் மின்சாரம்தான் வழங்கப்படுகிறது. இப்போதுதான் மழை பெய்து கிணறுகளில் தண்ணீர் இருக்கிறது. இந்தத் தண்ணீரை உபயோகம் செய்ய முடியாத நிலையில் அங்கே குறைந்த அழுத்த மின்சாரம்தான் இருக்கிறது. பல மோட்டார்களின் காயில் பழுதுபட்டு விவசாயிகள்





மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதியில் தனியாக ஒரு பீடர் ஏற்படுத்தி தடங்கல் இல்லாமல் மின்சாரம் வழங்கவேண்டும்.

ஓமலூர் நகரில் பல்வேறு பள்ளிகள், மருத்துவமனைகள் இருக்கின்றன. அங்கே மருத்துவமனைகளில் ஆப்பரேஷன் தியேட்டருக்குக்கூட மின் சப்ளை இல்லாத அளவுக்கு மின் தடை ஏற்பட்டு வருகிறது. ஆகவே இதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

சேலத்திற்கு ஒதுக்கப்பட்ட ரீஜனல் சீஃப் இன்ஜினியர் அலுவலகம் கடந்த ஆட்சியின்போது சேலத்தில் கட்டிடம் இல்லாததால் ஈரோட்டில் செயல்பட்டு வந்தது. ஆனால் இப்போது சேலம் உடையார்பட்டியில் துணை மின்நிலையத்தில் அதற்குத் தேவையான கட்டிடங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த ஆர்.சி.இ. அலுவலகத்தை மீண்டும் சேலத்திற்குக் கொண்டு வந்து, அங்கே செயல்படுவதற்கு உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின் கட்டண உயர்வு, எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பிட்டதுபோல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மின் கட்டண உயர்வை மீண்டும் பரிசீலனை செய்து, குறைத்து உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் தனியார் துறையை ஊக்குவிப்பதுபோல, மதுரை மாநகராட்சியில் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதாகக் குறிப்பிட்டார்கள். அதனுடைய டெக்னிக்கல் நோ-ஹவ் என்ன என்பதை எல்லா மாநகராட்சிகளுக்கும் தெரியப்படுத்தி தனியார்கள் விருப்பப்பட்டால் எல்லாப் பகுதியிலும் அந்த அடிப்படையில் மின் உற்பத்தியைத் துவங்குவதற்கு அரசு முற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிலங்களில் மின்கம்பங்கள் செல்லும்போது அவற்றை மாற்றி அமைக்க விரும்பினால் அவற்றிற்கான முழு செலவையும் அந்தத் தனியாரே செலுத்த வேண்டுமென்று அரசு உத்தரவு இருக்கிறது. அப்படி செலுத்தும்போது அங்கே அந்த டிஸ்மேண்டல் செய்யப்பட்ட பொருட்களுக்கான காஸ்ட்டை அவர்கள் அந்த எஸ்டிமேட்டிலிருந்து கழித்துக்கொள்வது இல்லை. அந்தப் பொருட்களை மீண்டும் உபயோகப்படுத்தலாம். இந்த மின் கடத்திகள், கண்டக்டர்கள்

இவைகளை மீண்டும் உபயோகப்படுத்தலாம். ஆனால் அதற்கான காஸ்ட்டை அவர்கள் கழித்துக்கொள்வது இல்லை. ஆகவே அதனை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டா இல்லாத ஏழைகளில் சிலருக்கு மின் இணைப்பு கொடுத்து இருக்கிறார்கள். சிலருக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. அதையும் இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும், அதை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் குறிப்பிட்ட நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையை முடிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு அவரை அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்வாரியத்தினுடைய 1996-1997 மற்றும் 1997-98-ஆம் ஆணடுக்களுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1995-96 மற்றும் 1996-97-ஆம் ஆண்டுகளுக்கான திருத்திய மதிப்பீடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 21 பேர் தங்களுடைய அரிய கருத்துக்களை மின்சார வாரியத்தினுடைய முன்னேற்றத்திற்கும், அதனுடைய பணிகள் வேகமாக நடைபெறுவதற்கும், அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்வதற்கும், ஏற்ற கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த மின்சார வாரியத்தை பொறுத்தவரையிலே, இந்தத் துறைக்கு நான் அமைச்சராக இருந்தாலும் இந்த 10 மாத காலத்தில் நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி மின்சார வாரியத் தலைவர் மற்றும் அதிகாரிகளோடு கலந்து பேசி, தமிழகத்திலே மின்சார உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் பற்றியும், சீரான மின்சாரம் கிடைப்பது பற்றியும் தொடர்ந்து விவாதித்து சில நல்ல முடிவுகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால ஆட்சியில் மின்சார வாரியத்தில் ஒவ்வொரு ஆண்டும் மின்வாரியத்தினுடைய செலவினங்கள் அதிகரித்து. அதன்மூலம் மின்சாரக் கட்டண விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டு வந்தன. ஆனால் இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் தேர்தலை முன்னிட்டு 1995 ஆம் ஆண்டு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவில்லை. 1996 ஆம் ஆண்டில் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்ட காரணத்தால்



பிற்பகல் 12-35

ஆட்சிக்கு வந்த உடனே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் நம் மீது பழி வந்துவிடுமே என்று எண்ணி 1996-லும் மின்சாரக் கட்டணத்தை இந்த அரசு உயர்த்தவில்லை. எனவேதான் 2 ஆண்டுகளுக்குப் பிறகு வேறு வழியில்லாமல் 15-2-1997-க்கு முன்னர் மின்சாரக் கட்டணங்களைச் சீரமைப்பது என்று ஒரு முடிவு எடுத்து தமிழக அரசுக்கு அறிவிக்கப்பட்டது. அதன்மூலம் இந்த மின்சார வாரியத்தினுடைய வரவு-செலவு எப்படி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். 1995-96-ஆம் ஆண்டில் வரவு 4,544.20 கோடி ரூபாய், செலவு 4,205.01 கோடி ரூபாய். இலாபம் 339.19 கோடி ரூபாயாக இருந்தது. ஏனென்றால், ஒவ்வொரு ஆண்டும் மின் கட்டணத்தை உயர்த்திய காரணத்தால். 1997-இல் வரவு ரூ.4,827.68 கோடியாகவும், செலவு ரூ.5,166.28 கோடியாகவும், இழப்பு ரூ.338.6 கோடியாகவும் உயர்ந்தது. இருந்தாலும்கூட, வாரியத்திலே புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட தலைவர் மற்றும் ஊழியர்கள் சிக்கன நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாகவும், பொருள்களை வாங்குவதிலே ஒப்பந்தக்காரர்களை அழைத்து, புள்ளி விகிதங்களைக் குறைத்ததன் மூலமாகவும் அந்த ரூ.338.6 கோடி என்ற இழப்பு ரூ.32.3 கோடியாகக் குறைந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு, 1997-98 ஆம் ஆண்டில் வரவு ரூ.5,473.6 கோடியாகவும், செலவு ரூ.5,808.5 கோடியாகவும், ஆக நிகர இழப்பு ரூ.334.98 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படி இழப்பு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதையும் விளக்குவது என்னுடைய கடமை.

எரிபொருள் 1995-96-லே ரூ.1,860 கோடியாக இருந்தது, 1996-97-லே ரூ.2,262 கோடியாக உயர்ந்து, இந்த ஆண்டு ரூ.2,597 கோடியாக இன்னும் உயர்ந்திருக்கிறது.

மின்சக்தி வாங்கும் செலவு 1995-96-லே ரூ.870 கோடியாக இருந்தது, கடந்த ஆண்டு ரூ.1,026 கோடியாக உயர்ந்து, இந்த ஆண்டு ரூ.1,057 கோடியாக மேலும் உயர்ந்திருக்கிறது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

பழுது பார்க்கும் செலவு 1995-96-லே ரூ.163 கோடியாகவும், கடந்த ஆண்டு ரூ.176 கோடியாகவும், இந்த ஆண்டு ரூ.202 கோடியாகவும் உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

ஊழியர்களுடைய சம்பளம் ரூ.684 கோடியாக 1995-96-லே இருந்தது, கடந்த ஆண்டு ரூ.942 கோடியாக உயர்ந்து, இந்த ஆண்டு ரூ.1,105 கோடியாக உயர்ந்திருக்கிறது.

அரசுக் கடன் தவிர மற்ற கடன்களுக்கு வட்டி 1995-96-லே ரூ.338 கோடியாகவும், 1996-97-லே ரூ.445 கோடியாகவும், இந்த ஆண்டு ரூ.488 கோடியாகவும் உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, மின் பங்கீடு சட்டப்படி மின் வாரியம் ரெவின்யூ கணக்கிலே ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 3 சதவிகித நிகர இலாபத்தை, நெட் ரெவின்யூ சர்ப்ளஸ் காட்ட வேண்டும். ஆனால், அது தவிர, பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன், ஏ.டி.பி., போன்ற நிதி நிறுவனங்கள் கடன் கொடுக்கும்முன், வாரியத்தின் கடன் திருப்பிக் கொடுக்கும் திறன் Debt சர்வீஸ் கவரேஜ் ரேஷியோ 1.1 சதவிகிதமாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. இந்தக் குறிக்கோளை எட்டவும், அதிகரித்து வரும் செலவினங்களை ஈடு கட்டவும், வருடத்திற்கு ஒருமுறையாவது மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் வாரியத்திற்கு ஏற்படுகிறது.

தமிழக அரசும் ஈட்டுத் தொகையை ஒவ்வொரு ஆண்டும் முடிந்த அளவிற்குக் கொடுத்துக்கொண்டு வருகிறது. 31-3-1997 வரை, வாரியம் தமிழக அரசுக்குத் திருப்பித் தர வேண்டிய கடன் தொகை 543 கோடி ரூபாய். மற்றக் கடன்கள் 3502 கோடி ரூபாய். தமிழக அரசிடமிருந்து பெற்ற முதலீட்டுத் தொகை ரூ.533.75 கோடி.

1996-97ஆம் ஆண்டு 3 சதவிகிதம் நிகர இலாபம் எட்டத் தேவையான ஈட்டுத் தொகையாகத் தமிழக அரசு 165 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது. கடன் திருப்பித் தர 1.1 சதவிகிதம், தேவையான ஈட்டுத் தொகையாக நம்முடைய தமிழக அரசு 259 கோடி ரூபாய் தந்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், மின்சார வாரியத்திலே நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால், அதற்கு அடிப்படைக் காரணம் ஒன்றை நான் இங்கே தெளிவுபடுத்தியாக வேண்டும்.



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு 1995ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், உலக வங்கி மற்றும் மத்திய அரசு விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை நீங்கள் விதித்து வசூல் செய்தால்தான் உலக வங்கி கடன் கொடுக்கும் என்று கட்டாயப்படுத்தியதன் காரணமாக அவர்கள் அந்த நேரத்திலே ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டார்கள். நிச்சயமாக 1996ஆம் ஆண்டு முதற்கொண்டு விவசாயிகளுக்கு நாங்கள் மின்சாரக் கட்டணம் வசூல் செய்வோம் என்று வாக்குறுதி தந்தார்கள். அதற்கு என்ன ஆதாரம், எப்படிச் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டபோது, நாங்கள் கடந்த ஆண்டு 1995-96 இலே 350 கோடி ரூபாய் வாரியத்திற்கு இழப்புத் தொகையாகக் கொடுத்துக் கொண்டிருந்தோம்.

பிற்பகல் 12-40

அதை 1996-97-லே 300 கோடி ரூபாயாக குறைத்துக் கொள்வோம், இந்த ஆண்டு 1997-98-லே 275 கோடியாக குறைத்துக்கொள்வோம் என்று வாக்குறுதி தந்து, படிப்படியாக நாங்கள் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துகிறோம் என்று சொன்ன காரணத்தினால், அவர்களும் அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டார்கள். ஆனால், இதற்கிடையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டிருந்தாலும் அந்த ஒப்பந்தப்படி நாம் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதற்கு முடியவில்லையென்று சொன்னாலும்கூட, தமிழக அரசு மின்சார வாரியத்திற்குக் கொடுக்க வேண்டிய அந்த 350 கோடி ரூபாய் என்பதை கடந்த ஆண்டு 300 கோடி ரூபாயாகவும், இந்த ஆண்டு 275 கோடி ரூபாயாகவும்தான் கொடுக்க முடிந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டார்கள். திரு. வெங்கடசாமி போன்றவர்கள் எல்லாம் கேட்டார்கள். இந்த அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து மீண்டும் மின்சாரக் கட்டணத்தை வசூலித்துவிடுமோ என்று அச்சம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால், இன்றுள்ள சூழ்நிலையிலே மத்திய அரசாங்கமும், உலக வங்கியும் விவசாயிகளிடமிருந்து மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்று வற்புறுத்துவது உண்மையாக இருந்தாலும்கூட, தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக விவசாயிகளிடமிருந்து மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்வதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

இப்படி ஒருபக்கத்திலே மின்சார வாரியத்தினுடைய செலவுகள் அதிகமாகிக் கொண்டிருக்கும்போது, இந்த ஆண்டு நிலக்கரி வாங்குவதிலே மத்திய அரசாங்கம் நிலக்கரியினுடைய விலையை உயர்த்தியதன் காரணமாகவும், கூட்ஸ் கட்டணத்தினுடைய விகிதாசாரத்தை உயர்த்தியதன் காரணமாகவும், நிலக்கரி வாங்குவதிலே 30 சதவிகிதம் அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் 50 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகக்கூடிய ஒரு சூழ்நிலை இந்த ஆண்டு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போலவே, 1-12-1996 முதல் ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பள விகிதம் ஒப்பந்தப்படி கொடுத்தாக வேண்டும். ஆனால், ஊழியர்கள் 4, 5 மாதங்களாகப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால், மத்திய அரசாங்கம் சம்பளக் கமிஷன் நியமித்திருக்கின்ற காரணத்தினாலே அதன் அறிக்கைகள் எப்படியும் வரும், அது வந்ததற்குப் பிறகு மின்சார வாரியத்திலே அதிகாரிகளோடு கலந்துபேசி நம்முடைய சம்பள விகிதங்களை மாற்றிக்கொள்ளலாம் என்று அவர்களும் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். மின்சார வாரியம் இந்த ஆண்டு சம்பள உயர்வுக்காக ஒதுக்கிய பணம் 90 கோடி ரூபாய். ஆனால், மத்திய அரசு நியமித்த சம்பளக் கமிஷன் இப்போது அறிவித்திருக்கின்ற சம்பள விகிதங்களைப் பார்க்கின்றபோது, இன்னும் கூடுதலாக 214 கோடி ரூபாய் அளவுக்கு ஊழியர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று மின்வாரியத்திலே கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு பக்கத்திலே ஊழியர்களுடைய சம்பள விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நிலக்கரியினுடைய விலை உயர்ந்துகொண்டே போகிறது. மின்சாரம் வாங்கக்கூடிய அந்த விலையும் உயர்ந்துகொண்டே போகிறது. டீசல், போன்றவைகளுடைய விலையும் உயர்ந்து கொண்டே போகிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் மின்சார வாரியம் ஆண்டுதோறும் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு வந்திருக்கிறது என்பதை நான் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் நாம் மின்சார உற்பத்தியிலே அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பல மேற்கோள்களைக்கூட காட்டினார்கள். அது உண்மைதான். உலகத்திலே இன்றையதினம் ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால், தொழில் துறையிலே முன்னேற வேண்டுமென்றால், பொருளாதாரத் துறையிலே முன்னேற வேண்டுமென்றால், மின்சாரம்தான் அடிப்படை. அதை



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

உணர்ந்துதான் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே மின்சார உற்பத்தியிலே கவனமே செலுத்தாத ஒரு சூழ்நிலையிலே உடனடியாக் 20 இடங்களிலே மின்சாரத்தை தயார் செய்வதற்கு தனியாரிடத்திலே ஒப்படைக்கலாம் என்று முடிவு எடுத்து, அதற்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டு, எந்தெந்த இடங்களிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்று டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டு, இன்று அரசுக்கு அந்தத் தகவல்களும் கிடைத்திருக்கின்றன. இதிலே, அமெரிக்கா போன்ற நாடுகளிலே 6 இலட்சத்து 93 ஆயிரத்து 20 மெகாவாட் மின்சாரத்தைத் தயாரிக்கிறார்கள். ஜப்பான் நாட்டிலே 1 இலட்சத்து 79 ஆயிரத்து 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கிறார்கள். ஜெர்மனியில் 1 இலட்சத்து 18 ஆயிரத்து 120 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கிறார்கள். ஆனால், நம்முடைய இந்தியாவில் இதுவரையிலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிகின்றவரையில் 80 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தைத்தான் தயாரிக்க முடிந்தது. அதிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே 6,908 மெகாவாட் மின்சாரத்தை நாம் தயாரிக்கிறோம். திரு. ரங்கநாதன் அவர்கள் கேட்டார். 6,908 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறோமே, திட்டங்கள் இருக்கின்றதே, ஏன் 4,800 மெகாவாட்தான் உச்சக்கட்ட தேவையாக நாம் தயாரித்துக்கொண்டிருக்கிறோம் என்று கேட்டார். 6,908 என்பது installed capacity. ஆனால், அந்த installed capacity அளவிற்கு மின்சாரத்தை தயாரிக்க முடியும் என்று இயந்திரங்களை நிறுவுகின்ற நேரத்தில், 100 சதவீதம் மின்சாரத்தை நாம் எதிர்பார்க்க முடியாது.

பிற்பகல் 12-45

சர்க்கரை ஆலைகள்கூட 2,500 டன் கெப்பாசிட்டி என்றால் 2,000 டன்தான் ஒரு நாளைக்கு சர்க்கரையைத் தயாரிக்க முடியும். அப்படி, installed capacity என்பது வேறு. ஆனால், நிலையாக ஒவ்வொரு நாளைக்கு என்று கிடைக்கக்கூடிய உச்சக்கட்ட மின் தேவை என்பது 4,888 மெகாவாட்-ஆக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், 28-3-1997-ன்படி நாம் பயன்படுத்துகின்ற அந்த மின்சாரத்தினுடைய அளவு 103.6 மில்லியன் யூனிட்டாக உயர்ந்திருக்கிறது. இதுவரையில், தமிழகத்தில் நாம் சராசரியாக 96 மில்லியன் யூனிட் மின்சாரம்தான் பயன்படுத்திக்கொண்டு வந்தோம். ஆனால், மார்ச் மாதத்திலேயிருந்து, பயன்படுத்துகின்ற மின்சாரத்தினுடைய அளவு உயர்ந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

என்று கேட்டால், டிசம்பர் மாதத்திலே பெய்த மழையின் காரணமாக விவசாயிகள் எல்லோரும் பயிர் செய்வதற்கு முனைந்துவிட்டார்கள். ஆனால், திடீரென்று ஏரிகளிலே, கால்வாய்களிலே தண்ணீர் கிடையாது, மின்சார பம்புசெட்டுகளைத்தான் பயன்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அறுவடை செய்கின்ற வரையிலே மின்சாரத்தை அவர்கள் கட்டாயம் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்ட காரணத்தாலே 96 மில்லியன் யூனிட் மின்சாரம் பயன்படுத்துவதற்குப் பதிலாக 103.6 மில்லியன் யூனிட் மின்சாரத்தை ஒரு நாளைக்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அத்தோடு எட்டாவது ஐந்தாண்டு திட்ட இறுதியிலே நம்முடைய தேவை 5,290 மெகாவாட்டாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மின் பயனீட்டு அளவு 32,375 மில்லியன் யூனிட்டாக உயரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்திலே, தமிழகத்தைப் பொறுத்தவரையில்-இந்தியாவைப் பற்றி என்னால் சொல்ல முடியாது-நாம் 6,943 மெகாவாட அதிகமாக மின்சாரத்தைத் தயாரிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தாலும்கூட, குறைந்தது 7,000 மெகாவாட் மின்சாரம் இந்த ஐந்து ஆண்டுகாலத்திலே உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம், கடந்த ஆட்சியில் 16 தனியார் நிறுவனங்களுக்கு Memorandum of Understanding ஒப்பந்தம் செய்யப்பட்டும், ஒரு தனியாரிடத்திலேகூட அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான Power Purchase Agreement ஒப்பந்தம் ஆகவில்லை. என்ன காரணம் என்று கேட்டால் ஒவ்வொரு இடத்திலேயும் எதையோ எதிர்பார்த்தார்கள். தொழில் ஆரம்பிக்க வருகின்ற நேரத்திலேயே எதிர்பார்த்த காரணத்தாலே, வந்தவர்கள் எல்லாம் ஓடிப்போய்விட்டார்கள் இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, இந்த ஆட்சியிலே நிச்சயமாக எந்தவிதமான ஊழலுக்கும் இடமில்லை. ஆட்சியாளரும் எதையும் எதிர்பார்க்கவில்லை. தமிழகத்திற்குச் சென்றால் தைரியமாக மின்சார உற்பத்தி செய்யலாம் என்ற அந்த முனைப்போடு வந்த காரணத்தாலே இப்போது கிட்டதட்ட 2,800 மெகாவாட் மின் உற்பத்திக்காக Power Purchase Agreement செய்திருக்கின்றோம். இன்னும் ஐந்து, ஆறு நிறுவனங்களோடு ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக Power Purchase Agreement செய்யக்கூடிய ஒரு நிலையிலே மின்சார வாரியம் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்திலே நாம்



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

எந்த அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதைவிடக் கூடுதலாக மின்சாரத்தைத் தயாரிக்கக்கூடிய ஒரு சக்தி தமிழகத்திற்குக் கிடைக்கும் என்று நான் மனமார நம்புகின்றேன். இந்த ஆண்டு 35,646 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி செய்ய நாம் இலக்கை நிர்ணயித்திருக்கிறோம். இது கடந்த ஆண்டைவிட ஏழு சதவிகிதம் அதிகமாகும். இன்றைக்கு மின்சாரத்தை எப்படியெல்லாம் தயாரிக்கவிருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே கேட்டார்கள். எங்கெங்கே அந்த வசதி கிடைக்கிறதோ, அது அனல் மின்சாரமாக இருந்தாலும்சரி, அணு மின்சாரமாக இருந்தாலும்சரி, அல்லது புனல் மின்சாரமாக இருந்தாலும்சரி, சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதானாலும்சரி, காற்றாலைகள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதானாலும்சரி, முழு சக்தியை நாம் பயன்படுத்தவிருக்கின்றோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 1997-98-ல் 825 மெகாவாட் மின்சாரத்தைக் காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்வதற்கு நாம் திட்டங்களைத் தீட்டியிருக்கின்றோம்.

அதைப்போலவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்க்கரை ஆலை அதிபர்களை எல்லாம் அழைத்து co-generation மூலம் அதாவது இணை மின் உற்பத்தியைச் செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்து, இந்த ஆண்டு 169.7 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டே அந்த உற்பத்தி கிடைக்கக்கூடிய நிலையிலே சர்க்கரை ஆலைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இயற்கைக் கழிவுகள் மூலமாகக் கிடைக்கின்ற அல்லது குப்பைக் கூளங்கள் மூலமாகக் கிடைக்கின்ற அந்தப் பொருட்களிலேயிருந்து மின்சாரத்தை ஏன் உற்பத்திச் செய்யக்கூடாது என்றெல்லாம், மாண்புமிகு திரு. செங்கை சிவம் போன்றவர்கள் எல்லாம் கேட்டார்கள். அதிலும் குப்பைக்கூளங்களிலிருந்து மின்சாரத்தை தயாரிக்கின்ற திட்டத்தை சென்னை மாநகராட்சிக்கு அளிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், சென்னை மாநகராட்சிக்கு அந்தத் திட்டத்தை அளிப்பதற்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது. ஒரு மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 4 கோடி ரூபாய்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

செலவாகும். இந்த நிலையில், 10 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய சென்னை மாநராட்சி முன்வருமானால், அதற்குத் தேவையான பண வசதிகளைக்கூட 'டெடா'-(TEDA) மூலமாக ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது 'நீங்கள் ஏன் தனியாரை மின்சார உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கிறீர்கள், இந்த நாட்டில் சூரிய சக்தி அதிகமாக இருக்கிறதே, அதன் மூலம் ஏன் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடாது ' என்று கேட்டார்கள். எங்களுக்குக்கூட அதுபோன்று செய்வதற்கு ஆசைதான். இருந்தாலும், அதற்கான டெக்னாலஜி கிடைக்கவில்லை. இதுவரையில் உலகத்திலுள்ள எந்த நாட்டிலேயும் சூரிய சக்தி மூலம் மிகக் குறைந்த செலவில் மின்சாரத்தைப் பயன்படுத்த முடியும் என்பதற்கோ அல்லது மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்பதற்கோ தேவையான டெக்னாலஜி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இது விஷயமாக நான்கூட மத்திய அரசின் சார்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபோது, அந்தக் கருத்தை வலியுறுத்தினேன். மத்திய அரசின் சார்பில்கூட அதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகவும், ஆனால் அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென்று விட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது நாம் கோவை மாவட்டத்தில், சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, தனியார் மூலம் முயற்சி எடுத்தோம். அப்போது ஒரு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 8 கோடி ரூபாய் செலவாகும் என்று தெரிந்தது. 8 கோடி ரூபாய் செலவு செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய தனியார் யாரும் முன்வராத காரணத்தால், அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த அரசு, என்னென்ன ஆதாரங்கள் கிடைக்கின்றதோ அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கின்றது. அதற்கு உதாரணமாக, தமிழ்நாடு மின்சார வாரியம், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள கோவில்களப்பாலில் 30 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டத்தையும், இராமநாதபுரம் மாவட்டம்,



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பெருங்குளத்தில் மற்றொரு 30 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டத்தையும் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. 1998-99-ஆம் ஆண்டில் மேற்சொன்ன பணிகள் நிறைவேறும். மேலும், நரிமணம் எரிவாயு சுழலி மின் உற்பத்தி நிலையத்தில், 5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, 1998-99 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் நிறைவேறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோலவே, பேசின்பாலம் எரிவாயு சுழலி மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து வெளியாகும் வெப்பத்தை அடிப்படையாகக் கொண்டு, 60 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி 1998- செய்ய திட்டமிடப்பட்டு, இந்தப் பணி 99-ஆம் ஆண்டில் நிறைவேறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

மேலும், கயத்தாறிலே காற்றாலை டர்பைன் சோதனை மையம் அமைக்கவும், காற்றாலை விசிறிகளைச் சோதனை செய்யும் மையம் ஒன்றை சென்னையிலே அமைக்கவும் மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி நிறுவனத்துடன் தீவிரமாக ஆலோசனைகள் செய்யப்பட்டு வருகின்றன. எண்ணூரிலுள்ள அனல் மின்நிலையத்தின் ஐந்து பிரிவுகளையும் சீரமைப்பு செய்வது மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக சுமார் 200 கோடி ரூபாய் அளவுக்கு ஒப்பந்தம் ஏற்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பாபநாசம், மேட்டூர் அணை மற்றும் பெரியாறு ஆகியவற்றின் புனல் மின்நிலையங்களின் நிறுவுத் திறனை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. நெய்வேலி முதல் அனல் மின்நிலையத்தின் விரிவாக்கம் மூலமாக தமிழ்நாட்டுக்கு இன்னும் மூன்று ஆண்டுகளில் 168 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. அதுபோலவே, இராமகுண்டம் விரிவாக்கம் மூலம் மேலும் 138 மெகா வாட் மின்சாரம் இன்னும் மூன்று ஆண்டுகளில் கிடைக்க வாய்ப்புள்ளது.

கூடங்குளம் அணு மின்நிலையம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். கூடங்குளம் அணு மின்நிலையம் தொடங்குவது சம்பந்தமாக ஒரு கருத்து வேறுபாடு உள்ளது. அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இது சம்பந்தமாக எந்தவித ஒப்பந்தமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால், முன்னாள் பிரதமர் திரு. தேவ கவுடா அவர்கள் ரஷ்யா சென்றிருந்தபோது இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு வந்தார்கள். அதுபற்றி இந்த அரசு ஆராய்ந்து உண்மையிலேயே அந்தப் பகுதியிலுள்ள

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

மக்களுக்கு இடையூறு இல்லாமல் மிகச் சிறப்பாக அரசு அதை நிறைவேற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டால், இந்த அரசு அதை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசிய அனல் மின் கழகம், சென்னையில் இரண்டாயிரம் மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முன்வந்திருக்கிறது. இதற்காக செய்யூர் பகுதியில் ஒரு நிலத்தைப் பார்வையிட்டார்கள். ஆனால் அங்கே அவர்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்காது என்பது தெரிய வந்தது. பக்கத்திலே வேறு எங்கே தண்ணீர் கிடைக்கின்றதோ அந்த இடத்திலே பணியைத் துவக்கலாம் என்று முடிவு செய்து, இப்போது அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். அதிலும் அவர்கள் தயாரிக்கக் கூடிய இரண்டாயிரம் மெகா வாட் மின்சாரத்தில், ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தைத்தான் தமிழகத்துக்குக் கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாம் இரண்டாயிரம் மெகாவாட் மின்சாரத்தையும் தமிழகத்திற்கே வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

அதுபோன்று, 16 தனியார் நிறுவனங்களுக்கு இந்த அரசு இதுவரையில் கொடுத்து வந்த ஒப்பந்தங்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்களும் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும் ஒரு கேள்வியை எழுப்பினார்கள்.

பிற்பகல் 12-55

தூத்துக்குடி மற்றும் வடசென்னை போன்ற இடங்களில் ஏன் தனியாருக்கு மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க அனுமதி அளித்தீர்கள் ; தமிழக அரசே செய்யக் கூடாதா என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். இது 1993-ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தம். இந்த அரசு வந்து, இப்படிப்பட்ட ஒப்பந்தங்களைச் செய்யவில்லை. இப்போது 20 இடங்களில், டெண்டர் மூலம் போடப்படுகிற ஒப்பந்தங்களைத் தவிர வேறு ஒப்பந்தங்கள் செய்யப்படவில்லை. திரு. நரசிம்மராவ் ஆட்சிக் காலத்திலே அனுமதிக்கப்பட்ட, யாருக்கு வேண்டுமானாலும், மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு எந்தத் தனியாரிடமும் 'எம்.ஓ.யூ.' கையொப்பம் செய்யலாம் என்று இருந்ததுபோல், இப்போது இல்லை. அப்போது அரசாங்கம், விரும்பியவர்களுடன் ஒப்பந்தம் செய்தார்கள். இப்போது அப்படி அல்ல.



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

டெண்டர் போடுகிறோம். எந்த தயவுதாட்சண்யமும் இல்லாமல், உலகத்திலிருந்து எத்தனையோ நாடுகள் கலந்துகொண்டு, அவர்களெல்லாம் பாராட்டக்கூடிய அளவிலே, டெண்டர்கள் பரிசீலிக்கப்பட்டு இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, தூத்துக்குடி மற்றும் வடசென்னை ஆகிய இடங்களில் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க போடப்பட்ட ஒப்பந்தங்கள், கடந்த காலத்திலே போடப்பட்ட ஒப்பந்தங்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே இரண்டுவிதமான கருத்துக்கள் சொல்லப்பட்டன. தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்று திரு. சுப்பராயன் அவர்களும், தனியாருக்குக் கொடுப்பதில் தவறில்லை என்று திரு. நிஜாமுதீன் அவர்களும் கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பணமிருந்தால் இந்த அரசாங்கமே செய்வதற்குத் தயாராக இருக்கிறது. 5,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் 20,000 கோடி ரூபாய் தேவை. ஆனால் மின்சார வாரியம் தற்போது அந்த முதலீட்டைச் செய்வதற்குத் தயாராக இல்லை. இந்தச் சூழ்நிலையில்தான் தனியார் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை நாம் ஒப்பந்த அடிப்படையிலே, அதேநேரத்திலே வாங்கக்கூடிய மின்சாரத்தைக்கூட நெகோஷியேட் செய்து இன்றையதினம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். அந்தவகையிலே மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாம் எதிர்பார்த்த அளவைவிட இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு 20 இடங்களிலே மின் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொன்னபோது, திரு. ரங்கநாதன் அவர்கள் எந்தெந்த இடங்களில் என்று கேட்டார்கள். ஏனென்றால் ஒரே இடத்தில் செய்யக்கூடாது. தொழிற்பேட்டைகள், இன்னும் எங்கெங்கே மின்சாரத்தைப் பயன்படுத்த முடியுமோ அந்த இடங்களில் மின் உற்பத்தி செய்தால்தான் நல்லது என்று சொன்னார்கள். நான் அவருக்காகச் சொல்கிறேன். தமிழக அரசு அனுமதியளித்த 20 இடங்களில் 11 இடங்களை இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறது.

1. கங்கைகொண்டான் - சுஜானா டனாகா என்ற நிறுவனத்திற்கு 103 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறோம்.

2. ஓசூரில் டி.எல்.எஃப். பவர் என்ற நிறுவனத்திற்கு 52.8. மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய அனுமதி தந்திருக்கிறோம்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

3. மதுரை மாவட்டத்திலே வாடிப்பட்டியிலே பாலாஜி வாட்சிலா என்று நிறுவனத்திற்கு 117.5 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறோம்.

4. மணலியிலே பி.டி. விஸ்மகார்டியா என்ற நிறுவனத்திற்கு 138 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறோம்.

5. கரூர் மாவட்டத்திலே மணவாசியிலே அபான்லாயிட் என்ற நிறுவனத்திற்கு 126 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறோம்.

6. ராணிப்பேட்டையிலே என்ரான்

7. சமயபுரத்திலே பிரஸ்டின்டெனாக்கா

8. சிறுமுகையிலே பி.சி.எம். ஸ்ரீ ரான்

9. தூத்துக்குடியிலே கஜானா டனாகா

10. துவாக்குடியிலே பிரஸ்டின்டெனாக்கா

11. செங்கல்பட்டு-2-இலே டி.எல்.எஃப். பவர் நிறுவனம் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி தந்திருக்கிறோம். இந்த 11 இடங்களிலும், நிறுவனங்களோடு பேசிப் பேசி மின்சார வாரியமும், 'டிட்கோ' வும் எந்த அளவுக்கு வாங்கும் விலையைக் குறைக்கலாமோ அந்த அளவுக்குக் குறைந்து, இன்றைக்கு அவர்களோடு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் மீதியிருக்கக்கூடிய 9 இடங்களில் டெண்டர் கோரியிருக்கிறார்கள். முதலமைச்சரும், தலைமைச் செயலாளரும், நானும், இன்னும் மற்றச் செயலாளர்களும், மின்வாரியத் தலைவர், 'டிட்கோ' தலைவர் ஆகியோரெல்லாம் கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த 9 இடங்களில் ஏற்கெனவே டெண்டர் போடப்பட்ட நேரத்தில் மத்திய அரசாங்கம் ஒரு சலுகையை அளித்தது. அந்தச் சலுகை அளித்ததன் காரணமாக, அவர்கள் மின்சாரத்தை குறைவாக விற்கக்கூடிய அளவில் ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இதில் சிறு தவறும் நடக்காமல், யாரும் நீதிமன்றத்திற்குப் போகமுடியாத வகையில்—இந்த அரசு தெளிவான அரசு; எந்தச் சந்தேகத்திற்கும் இடம் அளிக்காத அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையிலே—அவைகளுக்கெல்லாம் மறு ஒப்பந்தப்புள்ளி கோர முடிவெடுக்கப்பட்டுள்ளது. அந்த 9 இடங்கள், பெரும்புதூர்-1, கும்மிடிப்பூண்டி-1, [illegible], பெரும்புதூர்-2, கும்மிடிப்பூண்டி-2, அரக்கோணம், [illegible], மற்றும்



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பள்ளிப்பாளையம் ஆகியவைகளாகும். அந்த 9 இடங்களுக்கு இப்போது புதிதாக டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. ஒரு மாத காலத்திற்குள்ளாக டெண்டர்கள் வரவழைக்கப்பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

நிலக்கரியைப் பொறுத்தவரையில், ஓராண்டில் 12.65 மில்லியன் டன் நிலக்கரியை நாம் வாங்குகின்றோம். இப்பொழுது 5 இலட்சம் டன் நிலக்கரி கையிருப்பில் இருக்கிறது. சில உறுப்பினர்களுக்குச் சந்தேகம் வந்தது: நம்மிடத்திலே நிலக்கரி கையிருப்பில் இருக்கிறதா, திடீரென்று பற்றாக்குறை ஏற்பட்டால் என்ன செய்வது என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால், நம்மிடத்தில் தற்போது 5 லட்சம் டன் நிலக்கரி கையிருப்பில் இருக்கின்றது. நாம் இன்றையதினம் 11.11 மில்லியன் டன் நிலக்கரியை 'கோல் இந்தியா' மூலம் பெறுகின்றோம். ஆனால், ஆண்டொன்றுக்கு நமக்குத் தேவையான 12 மில்லியன் டன் நிலக்கரியை அவர்களால் சப்ளை செய்ய முடிவதில்லை. எனவே, 'கோல் இந்தியா' மூலமாக சப்ளை செய்யப்படுகின்ற நிலக்கரியிலே பற்றாக்குறை இருக்கின்றது. 1997-98ஆம் ஆண்டில் நமக்கு 15 மில்லியன் டன் நிலக்கரி தேவைப்படுகின்றது. அதிலே, 90 சதவிகித நிலக்கரியைத்தான் 'கோல் இந்தியா'-வால் சப்ளை செய்ய முடியும் என்றும், மீதம் 10 சதவிகித நிலக்கரியை எங்களால் சப்ளை செய்ய முடியாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், "ஏன் நீங்கள் இதைக் கட்டிக்கொண்டு அழுகிறீர்கள்; இதிலே அதிகமான கலோரி இல்லையே; 3,000-லிருந்து, 3,500 கலோரிதானே இருக்கின்றது; சாம்பல் சத்துதானே அதிகமாக இருக்கின்றது; வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நிலக்கரியில் 5,400 கலோரி வரை இருக்குமே; விலையும் குறைவாக இருக்குமே; அதை வாங்க வேண்டியதுதானே" என்று சொன்னார்கள். ஆனால், இதிலே இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே, நிலக்கரி இறக்குமதி செய்ததில் எப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெற்றன என்பதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட தவறு நடந்து விடவும் கூடாது; அதேநேரத்தில், முடிந்த வரையில், இங்கே உற்பத்தியாகின்ற நிலக்கரியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற திட்டத்தின் அடிப்படையிலேதான், இப்பொழுது நிலக்கரியை நாம் பயன்படுத்தி வருகின்றோம்.

இன்னொன்று, மின் நிலையங்களில் நாம் நிறுவியிருக்கின்ற இயந்திரங்களுடைய வடிவமைப்பு, வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நிலக்கரியை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கின்ற வகையில் இல்லை. இந்தியாவிலே கிடைக்கின்ற நிலக்கரியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில்தான் அந்த இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற நிலக்கரியில், 10 முதல் 15 சதவிகித நிலக்கரியை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, பற்றாக்குறை ஏற்படுமானால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்ற அதிகாரிகளையும் கலந்துபேசி, உண்மையிலேயே நிலக்கரியை நாம் இறக்குமதி செய்தே ஆகவேண்டும் என்ற நிலை வந்தால், அது பற்றி ஒரு முடிவு எடுத்து, கடந்தகால ஆட்சியைப்போல் இல்லாமல், மிகச் சிறந்த முறையிலே, 'ஓப்பன் டெண்டர்' மூலம் அழைத்து, எந்த அளவிற்கு மின்சார வாரியத்திற்கு இலாபம் கிடைக்க முடியுமோ, அந்த அளவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. கிருட்டிணன் போன்றவர்கள், "நீங்கள் தனியாரை மட்டும் நம்பினால் போதாது; மின்சார வாரியமே மின் உற்பத்தியில் ஈடுபட வேண்டும்" என்று சொன்னார்கள். இந்த எண்ணத்தை அவர்கள் சொல்வதற்கு முன்னாலே, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் எண்ணிய காரணத்தால், இந்த ஆண்டு உடனடியாக 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு புதிய மின் உற்பத்தி நிலையங்களை சென்னைக்கு அருகிலேயே நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு வாரியத்திற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக, 500 மெகாவாட் திறன் கொண்ட அந்த இரண்டு மின் உற்பத்தி நிலையங்களும் சென்னைக்கு அருகிலேயே அமைக்கப்பட்டு, மின்சார வாரியத்தாலே நடத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம், அவரவர்கள் பகுதிகளிலேயே மின்சார உற்பத்திக்கு வாய்ப்பே இல்லாமல் போகின்றது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது உண்மைதான். ஏனென்றால், ஒன்று, நாம் நீரை நம்பியிருக்க வேண்டியுள்ளது. இல்லையென்றால், நிலக்கரியை நம்பியிருக்க வேண்டியுள்ளது. இல்லையென்றால் அணுமின்சாரத்தை நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஆனால், கிராமப்பகுதிகளில் ஏராளமான கழிவுப்பொருட்கள் நமக்குக்



கிடைக்கின்றன. எனவே, 5 மெகாவாட், 10 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு, அங்கே கிடைக்கின்ற கழிவுகளை, அரிசியிலேயிருந்து கிடைக்கின்ற உமி போன்றவற்றைக் கொண்டு சிறு, சிறு நிலையங்களை அமைக்கலாமா என்பதைப் பற்றி விவாதித்தோம். முதற்கட்டமாக, தமிழகத்திலேயுள்ள சுமார் 100 இடங்களிலே ஆராய்ச்சி செய்து, அவற்றில் 10 இடங்களில், கிராமப்புறங்களில், உடனடியாக, இந்த ஆண்டிலேயே 5 மெகாவாட், 10 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சியிலே வாரியம் ஈடுபட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, மாண்புமிகு உறுப்பினர் எடப்பாடி கணேசன் போன்றவர்களெல்லாம் வருத்தப்பட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கே, எங்களுடைய நிலத்தில் கிணறு எடுத்து, பம்புசெட் வைக்க வேண்டுமென்றால் கூட, அதற்கு மின் இணைப்பு கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். ஆனால், இலவசமாகக் கொடுக்கப்படுகின்ற மின்சார இணைப்பை நாம் கொடுக்க முடியாது. ஏனென்றால் அந்த இணைப்பு 'ப்ரையாரிட்டி' அடிப்படையில் வழங்கப்படுகிறது. 10 ஆண்டு காலம், 11 ஆண்டு காலம் காத்திருப்பவர்களுடைய பட்டியலிலே போய், நடுவிலே புகுந்துகொண்டு மின் இணைப்பை நாம் கொடுக்க முடியாது. எனவே, நான் இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடும், அதிகாரிகளோடும் கலந்து பேசினேன். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'செல்ஃப் பைனான்ஸிங் சிஸ்டம்'-படி, சுயநிதித் திட்டத்தின்படி, 10,000 ரூபாய் கட்டினால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கட்டிய ஒரு மாதத்திற்குள்ளாக, அவர்களுடைய நிலத்திற்கு நிச்சயமாக இணைப்பு தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

விவசாயிகளுக்குப் பகல் நேரத்திலே மின்சாரம் கிடைப்பதில்லை என்ற ஒரு கருத்து இங்கே சொல்லப்பட்டது. விவசாயிகளைப் பொறுத்தவரையிலே, நான் இங்கே ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயத்திற்கு நாம் ஆண்டு ஒன்றிற்கு 40 ஆயிரம் பம்புசெட்டுகளைத் தருகிறோம். இதிலேகூட மாண்புமிகு உறுப்பினர்கள் பல சந்தேகங்களைக் கிளப்பினார்கள். அதாவது, மாண்புமிகு உறுப்பினர்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

திரு. ரங்கநாதன் போன்றவர்களும், மற்றவர்கள் எல்லாம், பம்புசெட்டுகள் நாம் 40 ஆயிரம் தருகிறோம்; ஆனால், அறிவிக்கப்படாத மின்வெட்டாக இருக்கிறதே, அது நியாயமா என்று கேட்டார்கள். தயவுசெய்து நீங்கள் பெங்களூர் செல்ல வேண்டும் அல்லது ஹைதராபாத் செல்ல வேண்டும்; அல்லது வேறு எந்த மாநிலத்திற்கும் போகலாம். அங்கே போய்விட்டு வந்தால், இந்த மின்சாரத்தினுடைய அருமை தெரியும். தமிழ்நாடு ஒன்றுதான் இந்தியாவிலே மின்சார வெட்டு இல்லாமல் நடந்து கொண்டிருக்கிற மாநிலம் என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்வேன். ஆனால், அதற்காக மின்சார வெட்டே இல்லையா என்றால், ஏதாவது கோளாறு காரணமாக ஒரு மணி நேரம், அரை மணி நேரம் மின்சார வெட்டு ஏற்படுமே தவிர, அல்லது அறிவிக்கப்பட்டு, அங்கே நம்முடைய வாரியத்திலே திடீரென்று டிரான்ஸ்ஃபார்மர் பழுதானாலோ அல்லது பிரேக்டவுன் ஆனாலோ அப்படிப்பட்ட நேரங்களிலே ஏற்படுமே தவிர, திட்டமிட்டு எங்கேயும் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டுமென்று இந்த அரசு செய்வதில்லை. ஏற்கெனவே, விவசாயிகளுக்கு அறிவித்த நேரப்படி, இரவு நேரத்திலே 6 மணி நேரமும், பகல் நேரத்திலே 4 மணி நேரமும் மின்சாரத்தைக் கொடுப்போம் என்று அறிவித்தபடி, முறையாக வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் ஒன்று சொன்னார்கள். 40 ஆயிரம் பம்பு செட்டுகள் கொடுத்தால், எந்தக் காலத்திலே விவசாயிகளினுடைய பிரச்சினை தீருவது; அதை ஏன் உடனடியாகக் கொடுக்கக் கூடாது என்று கேட்டார்கள். இன்றையதினம், மின்சார வாரியத்திலே 4 இலட்சம் பேர் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டு, காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பம்புசெட்டுக்கு மின் இணைப்புக் கொடுக்க 50 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இந்த 4 இலட்சம் பம்புசெட்டுகளுக்கு நம்மிடத்தில் 2 ஆயிரம் கோடி ரூபாய் இருந்தால்தான், 2 ஆண்டுக் காலத்திலே கொடுத்து விடலாம். ஆனால், 40 ஆயிரம் பம்புசெட்டுகளுக்குக் கொடுப்பதற்கு 200 கோடி ரூபாயைக் கடன் வாங்கித்தான் இந்த இணைப்புகளைக் கொடுத்திருக்கிறோம். 40 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு, 200 கோடி ரூபாய் செலவு செய்து, நாம் இணைப்பைத் தருகிறோம். அதற்கு 200 கோடி ரூபாய் கடன் வாங்குகிற இடத்திலே, வருடத்திற்கு 32 கோடி ரூபாய் வட்டி கேட்கிறார்கள். இப்படி 32 கோடி ரூபாய் வட்டியையும் கொடுத்து நாம் வாங்கக்கூடிய அந்தப் பணத்திலே, 40 ஆயிரம் பம்புசெட்டுகளுக்குத்தான் கொடுக்க முடியுமே தவிர, அதற்குமேல் கொடுக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சிலபேர் இங்கே குறிப்பிட்டார்கள், அதிகாரிகள் இலஞ்சம் கேட்கிறார்கள் என்று. அது இன்னும் மாறவில்லை; சில இணைப்புகளுக்கு அவர்கள் பணம் கேட்கிறார்கள்; ஆயிரம், 500 ரூபாய் கேட்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் உறுதியாகச் சொல்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, மின்சார வாரியத் தலைவரை வைத்துக் கொண்டு, எல்லா தலைமைப் பொறியாளர்களையும் கூப்பிட்டு, இரண்டு, மூன்று கூட்டங்கள் போட்டு, யாராவது இப்படிப்பட்ட புகார்களுக்கு இலக்கானால், அவர்கள் நிச்சயமாக வேலைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டு, சிலபேர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், அப்படி எங்கேயாவது அந்தக் குறைபாடு இருக்குமென்று சொன்னால், என்னை நம்பி நீங்கள் அந்தப் பட்டியலைக் கொடுப்பீர்களேயானால், 10 நாட்களுக்குள்ளாக, நிச்சயம் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள்; ஆனால், ஆதாரத்தோடு கொடுக்க வேண்டுமென்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, மின் இணைப்பு கேட்கிற நேரத்தில், முந்தைய தி.மு.க. ஆட்சியிலே கிணறுகளுக்கு 50 மீட்டர் தூரத்தில் இருந்தால், ஆற்றங்கரையிலிருந்து, ஒரு சர்டிபிகேட் கொடுத்தார்கள், என்.ஓ.சி. என்று; ஆனால், கடந்த காலத்திலே அதை 200 மீட்டராக ஆக்கிவிட்டார்கள்; அதை மாற்ற முடியாதா என்று கேட்டார். என்னைப் பொறுத்தவரையில், மாற்ற முடியாதா, அல்லவா என்பதைவிட, நம்முடைய தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இதைக் கண்டிக்கிறது. 200 மீட்டருக்குக் குறைவாக இருந்தால், நீங்கள் என்.ஓ.சி. கொடுக்கக் கூடாது என்று அவர்கள் கண்டிப்பாக முறையீடு செய்கிறார்கள். எனவே, விவசாய சங்கம் இதிலே தலையிட்டிருக்கிற காரணத்தினாலே, இந்தப் பிரச்சினையிலே எதையும் செய்ய முடியவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் அழுத்த தொழில் இணைப்புகளைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு 450 இணைப்புகள் கொடுப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலையாக இருந்தாலும்சரி, அல்லது சிமெண்ட் ஆலையாக இருந்தாலும்சரி, இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகளுக்கு, 450 தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு கொடுக்க இருக்கிறோம். அதிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

15-2-1997-லேயிருந்து, அந்த எச்.டி.சப்ளைகளுக்கு—அந்த தொழிற்சாலைகளுக்கு நீங்கள் சலுகைகளை அளித்தீர்கள்; அதை திடீரென்று நீங்கள் எடுத்து விட்டீர்களே; அதனால் தொழிற்சாலைகள் எல்லாம் வருமா என்று கேட்டார்கள்.

பிற்பகல் 1-10

அதிலே 2, 3 பிரச்சினைகள் இருக்கின்றன. 15-2-1997-க்கு முன்னாலே விண்ணப்பம் போட்டு, தயாராக இருந்து, மின்சார வாரியம் இணைப்பு கொடுக்காமல் இருந்தால் என்ன செய்யலாம் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் 'ரெடினஸ் சர்டிஃபிகேட்' கொடுத்தவர்களுக்கு நாம் இணைப்புக் கொடுக்காமல் இருந்தால் நியாயம் அல்ல என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. 15-2-1997-க்கு முன்னாலே விண்ணப்பித்தவர்கள், நாங்கள் தயாராக இருப்பதால் எங்களுக்கு அரசாங்கம் மின்னிணைப்புக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள்; அந்தச் சலுகை வேண்டும் என்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் முதலமைச்சரை கலந்து பேசித்தான் முடிவெடுக்கமுடியுமே தவிர, நானாக எடுக்கமுடியாது. ஆக, ஒரு நல்ல முடிவை இந்த அரசு எடுக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகளுக்கு இந்த ஆண்டு 16,000 குறைவழுத்த மின்னிணைப்புகள் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. அதுமட்டும் அல்ல, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டேவிட் செல்வின், திரு. இரா. பெர்னார்டு, திரு. பாலசுப்பிரமணியன் போன்றவர்கள் எல்லாம் ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். இணைப்புகளெல்லாம் கொடுக்கிறீர்கள் சரி, ஆனால் கிராமப் பகுதிகளில் சரியாகக் கம்பங்கள் கிடைப்பதில்லை, மீட்டர்கள் கிடைப்பதில்லை என்ற கருத்தை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

நான் உறுதியாகச் சொல்கிறேன். 1,50,000 ஆர்.சி.சி. போஸ்ட்டுகளை உடனடியாகத் தயார் செய்வதற்கு மின்சார வாரியம் திட்டமிட்டிருக்கிறது. இந்த இரண்டு மாத காலத்திலே 25,000 கம்பங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்று முடிவெடுத்து வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் 3 மாத காலத்திற்குள்ளாக கம்பங்கள் இல்லை என்று குறைபாடு முழுமையாகப் போக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அதைப்போலவே, வீடுகளுக்கு மின்னிணைப்பு கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். சென்னையிலே வீடுகளுக்கு அளிக்கும் மின்னிணைப்பைப் பொறுத்தவரையிலே சொல்கிறேன். ஒரு மாத காலத்திற்குள்ளாக மின்னிணைப்பு கொடுக்காமல் போனால் அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கிறோம். சஸ்பென்ட் செய்கிறோம். ஆனால் கிராமப் பகுதிகளிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. அங்கே சில இடங்களிலிருந்து மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கு கம்பங்கள், மற்ற வசதிகள் தேவைப்படுகிற காரணத்தினாலே கொஞ்சம் காலதாமதம் ஆவதாகச் சொன்னார்கள். நம்முடைய திரு. கணேசன் அவர்கள் கூடச் சொன்னார்கள், வீடுகளுக்கு மின்னிணைப்பு கேட்டால் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஆண்டைப் பொறுத்தவரையிலே 1,56,532 வீடுகளுக்கு இணைப்பு கொடுத்திருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டும் 1996-97-லே மட்டும் 12,388 பேருக்கு இணைப்பு கொடுத்திருக்கிறோம். இணைப்பு வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு கிராமப் பகுதியாக இருந்தால் 2 மாதத்திலேயும், நகரப் பகுதியாக இருந்தால் ஒரு மாதத்திலேயும் எந்தச் சூழ்நிலையிலும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று மின்சார வாரியம் முடிவெடுத்திருக்கிறது. அப்படிக் கிடைக்காவிட்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் அதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே குடிசைப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதில், இந்த ஆண்டு 40,000 குடிசைகளுக்கு மின்சாரத்தை வழங்குவது என்று முடிவெடுத்திருக்கிறோம். இலவசமாகக் கொடுக்கிறோம். குடிசைகளுக்கு ஒரு பல்பு போட்டு இலவசமாகக் கொடுக்கிறோம். ஆனால் சில குடிசைகளிலே ஒரு பல்பு என்று அனுமதி பெற்றுக்கொண்டு, இணைப்பு பெற்றுக் கொண்டு அவர்கள் டியூப் லைட் போட்டுக்கொள்கிறார்கள், ரேடியோ வைத்துக் கொள்கிறார்கள், டி.வி. வைத்துக் கொள்கிறார்கள், இப்படித் தவறாக அதைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கெல்லாம், இந்த வரவு-செலவு திட்டத்தின்மீது பேசுகையில் ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். தயவுசெய்து ஒரு விளக்குக்குமேல் பயன்படுத்தாதீர்கள்; அப்படிப் பயன்படுத்தினால் மின்சார வாரியம் சோதனையிட வேண்டிய நிலைமையிலே இருக்கிறது. அவர்களை நாங்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறோம். போன மாதமே அந்த நடவடிக்கையிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள், அவகாசம் கொடுப்போம் என்று

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

சொல்லியிருக்கிறோம். எனவே இதனைத் தவறாகப் பயன்படுத்துவோர் எல்லாம் தங்களுடைய அந்நிலையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தெரு விளக்குகளைப் பொறுத்தவரையிலே, பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் சொன்னார்கள். அதாவது 50,000-லிருந்து 75,000 தெரு விளக்குகள் தமிழ்நாட்டிலே கிராமங்களிலிருந்து, நகரங்களிலிருந்து, நகராட்சிகளிலிருந்து, மாநகராட்சி வரையிலும் பொருத்த வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்த மின் கம்பங்கள் பொருத்துவதற்கு ஒன்றுக்கு 3,640 ரூபாய் செலவாகிறது என்று கடந்த காலத்திலே எஸ்டிமேட் போட்டார்கள். இப்போது 4,500 ரூபாய் செலவாகும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதை யார் கொடுப்பது? கிராமத்திலே, பஞ்சாயத்திலே பணம் இல்லை என்கிறார்கள், பேரூராட்சியிலே பணம் இல்லை என்கிறார்கள், அதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். நானும், உள்ளாட்சித் துறை அமைச்சரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட ஆணையின்பேரில் அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசி ஏற்கெனவே கடந்த காலத்தில் ஒரு கம்பத்திற்கு இவ்வளவு செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருந்த 3,640 ரூபாயை நம்முடைய உள்ளாட்சித் துறை கொடுப்பது என்றும், இப்போது கணக்கிடப்பட்டிருக்கும் 4,500 ரூபாய்க்கும் இதற்கும் இடையிலே இருக்கக்கூடிய வித்தியாசமான சுமார் 900 ரூபாயை, முதலமைச்சரோடு பேசி, நிதித் துறைச் செயலாளரோடு பேசி மின்வாரியத்திற்கு அந்த இழப்பைக் கொடுப்பதற்கு வேண்டிய முடிவுகள் செய்யப்படுமா என்பதை விவாதிக்க இருக்கிறோம். எனவே எப்படியிருந்தாலும் இந்த ஆண்டு 50,000 தெரு விளக்குகள் நிச்சயமாக இந்த அரசாங்கத்தாலே அமைத்துத் தரப்படும். மீதியிருக்கக்கூடிய 25,000 தெரு விளக்குகளுக்கு அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாக மின் இணைப்புக் கொடுத்து, அமைத்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர்க் குழாய்களுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வேண்டுமென்று நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே சொன்னார்கள். சேலம், மேட்டூர், திருவண்ணாமலை போன்ற பகுதிகளிலே 24 மணி நேரமும் மின்சாரம் குடிநீருக்காக வழங்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே சொல்லப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. நகராட்சிகள், பேரூராட்சிகள் வரையிலேகூட 24 மணி நேரமும் மின்சாரத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். ஆனால் கிராமங்களிலே



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

24 மணி நேரமும் மின்சாரம் தேவைப்படாது. எந்த கிராமமாக இருந்தாலும் 5 ஆயிரம் பேர், 10 ஆயிரம் பேர் இருக்கக்கூடிய கிராமங்கள்தான் இருக்கும். எனவே, அங்கே குறைந்தது அவர்களுக்கு 20 மணி நேரம் மின்சாரம் கிடைக்கிறது. அந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நிச்சயமாக தங்களுக்குத் தேவையான குடிநீரைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

புதிய துணை மின்நிலையங்களைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு—மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கேட்டார்கள்—60 துணை மின்நிலையங்கள் 170 கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் யார், யார் பேசினார்களோ, அவர்களுடைய பகுதிகளில் எல்லாம் நிச்சயம் அமைத்துத் தரப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அப்படியென்றால் பேசாத உறுப்பினர்களுக்குக் கிடைக்காதா என்று சந்தேகப்பட வேண்டாம். எங்கெங்கே அவசியம் ஏற்படுகிறதோ அங்கேயெல்லாம் நிச்சயமாக—இதில் பேசியவர்கள் ஏறக்குறைய 21 பேர், அதிலே துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டவர்கள் 10 பேர்—அந்த 10 பேர்கள் போக மீதம் உள்ள 50 பேர்களுக்கு எந்த எந்த இடத்தில் தேவை என்று மின்சார வாரியம் கருதுகிறதோ அங்கே எல்லாம் இந்தத் துணை மின்நிலையங்கள் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக 170 கோடி ரூபாயை செலவு செய்கின்ற நேரத்திலே, நம்முடைய சுப்பராயன் எங்களுடைய திருப்பூரிலே 3 துணை மின் நிலையங்கள் என்ன ஆயிற்று என்று கேட்டார். திருப்பூர், சந்தைப்பேட்டையில் உடனடியாக வேலைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தாலுகா ஆபீஸ் துணை மின்நிலையம் மட்டும் ரெவின்யூ இலாகா அந்த நிலத்தை ஒப்படைத்த உடனே இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார இழப்பு பற்றி இங்கே சொன்னார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மின்சார இழப்பு குறைவாக இருக்கிறது. 17 சதவிகிதம்தான் உண்மையிலேயே மின்சார இழப்பு. ஆனால் டெல்லியில் 40 சதவிகிதம் மின்சார இழப்பு ஏற்படுகிறது; அரியானாவில் 25 சதவிகிதம் மின்சார இழப்பு ஏற்படுகிறது. அகில

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

இந்திய அளவில் 21 சதவிகிதம் மின்சார இழப்பு ஏற்படுகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 17 சதவிகிதம் என்பதும் அதிகம்தான் என்று சொல்லி, அதையும் ஒரு சதவீதம் குறைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இந்த மின்சார இழப்பு என்பது வெறும் லைன் லாஸ் மட்டுமல்ல, சிலர் மின்சாரத்தைத் திருடுகிறார்கள். அதைத் தடுப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திடீர் ஆய்வுப் படை, மின் திருட்டு தடுப்புப் படை போன்றவை எல்லாம் அமைக்கப்பட்டு இப்போது ஓரளவுக்குக் கட்டுப்பாட்டிற்குள் வந்திருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின் கட்டமைப்பினுடைய ஒட்டுமொத்த மின்னழுத்தத்தைச் சீராக்க துணை மின் நிலையங்களிலும், உயரழுத்த மின் பாதைகளிலும் கெப்பாசிட்டர்கள் அமைக்கப்படும். இது ஒரு புதிய திட்டமாகும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் புதிதாகக் கொண்டுவந்திருக்கிறோம். அதாவது எங்கு பார்த்தாலும் லோ-வோல்டேஜ் என்று சொல்லுகிறார்கள். அதை எப்படி தடுக்கலாம் என்று பார்த்து—தற்போது 1,500 எம்.வி.ஏ.ஆர். அளவுக்கு கெப்பாசிட்டர்கள் தமிழ்நாட்டிற்குத் தேவைப்படுகின்றன. கடந்த ஆண்டில் 500 எம்.வி.ஏ.ஆர். அளவுக்கு துணை மின் நிலையங்களிலே கெப்பாசிட்டர்களை நாம் பொருத்திவிட்டோம். இந்த ஆண்டுக்கு 900 எம்.வி.ஏ.ஆர். அளவுக்கு இந்த இணைப்புகளைக் கொடுக்கும் அளவில் 45 கோடி ரூபாய் செலவிலே இந்த திட்டம் சீர் செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் இன்னும் இந்த லோ-வோல்டேஜ்-ஐ தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்து, தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளிலே 80 சதவிகிதம் இந்திய அரசு மானியத்துடன் 62 லட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய யுக்தியை ஆய்வு அடிப்படையிலே செயல்படுத்த இந்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 3 பேஸ் பயன்படுத்துகிற பம்ப் செட்டுகளுக்கு சிங்கிள் பேஸ் மூலமாகவே இணைப்பு கொடுக்கலாம் என்று அந்த ஆய்விலே சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு வசதி ஏற்பட்டுவிட்டால் இந்தப் பிரச்சினையே வராது. ஏனென்றால் இப்போது 3 பேஸ் கரண்ட் இருந்தால்தான் பம்ப் செட்டுகள் ஓடும். ஆனால்



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சிங்கிள் பேசிலேயே பம்ப்செட்டுகள் ஓடும் என்ற நிலை வந்து விடுமானால் தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு எந்தக் குறையும் இருக்காது. இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக மின்சார வாரியம் முன்வந்திருக்கிறது என்கிற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 80 சதவிகித மானியத்துடன் ரூ.5.94 கோடி செலவிலே இந்தப் புதிய திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

மொத்தம் 374 பகிர்மான மின் மாற்றிகளைக் கொண்ட மதுராந்தகம் பகுதியிலுள்ள கடுகப்பட்டு 33 கே.வி. துணை மின் நிலையத்திலும், மறைமலைநகர் பகுதியிலுள்ள கூடுவாஞ்சேரி துணை மின் நிலையத்திலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதைப்போலவே, மின் ஊழியர்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதிலே திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது, 21,000 தொழிலாளர்களின் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார். இன்னொரு கருத்தையும் அவர் சொன்னார். 1988ஆம் ஆண்டு மொத்த இணைப்புகளே 50 இலட்சம் என்றும், இப்போது ஒரு கோடியே 10 இலட்சம் இணைப்புகளாக உயர்ந்திருக்கிறது என்றும், அந்த அளவிற்கு தொழிலாளர்களுடைய எண்ணிக்கை உயர வேண்டாமா என்றும் கேட்டார். அது உண்மை. ஆனால் 25,000 பேர் கான்ட்ராக்ட் லேபர் என்ற முறையிலே இன்றையதினம் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். அதற்குக் காரணம், புதிய தொழிலாளர்களை நியமிக்கக்கூடாது என்று நீதிமன்றங்களுக்கு எல்லாம் சென்று, பல ஆண்டு காலமாக, உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் என்று வழக்குகள் போய் பின் காலித் கமிஷனைப் பொறுத்தவரையிலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அந்த 18,000 பேரிலே, உங்களுக்கு மகிழ்ச்சியோடு சொல்கிறேன், 8,047 தொழிலாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மின்சார வாரியத்திலே இப்போது நியமிக்கப்பட்டு விட்டார்கள். இன்னும் 5,000 பேர்களை இன்டர்வியூ செய்யவேண்டியிருக்கின்றது. கொஞ்சம்பேர் கொடுத்த விலாசங்கள் சரியாக இல்லை. எனவே, இதையெல்லாம் சீர் செய்து, அந்த காலித் கமிஷனிலே கொடுத்த ஆணையை இந்த வாரியம் நிறைவேற்றும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

அதைப்போலவே, இறந்து போன தொழிலாளர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு, 552 பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம். மின் வாரியத்திலே பணியாற்றிய நேரத்திலே இறந்த ஊழியர்களுடைய வாரிசுகள் 500 பேருக்கு கல்வித் தகுதி இல்லாத காரணத்தினாலே, அது நிலுவையிலே இருக்கின்றது. திரு. சுப்பராயன் அவர்கள்கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதுகுறித்து இன்று காலையிலே கூட, முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன். அதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், இறந்து போனவர்களுடைய பெண் நான்காவது படித்திருந்தால் அவர்களுக்கு வேலை கொடுக்கலாம், ஆனால், ஆண் நான்காவது படித்திருந்தால் வேலை கொடுக்கக் கூடாது, எட்டாவது படித்திருக்க வேண்டும் என்ற ஒரு நிலை ஆணை இருக்கின்றது. கல்வித் தகுதியைப் பொறுத்தவரையிலே யாராக இருந்தாலும், நான்காவது வகுப்பு வரையிலே வைக்கலாமா என்பதுபற்றி, முதலமைச்சர் அவர்களோடு பேசி நல்ல முடிவை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, வடசென்னை மற்றும் கீழ்மேட்டூர் புனல் மின் திட்டங்களில் எல்லாம் நிலங்கள் கொடுத்தவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இவர்களிலே நிலம் கொடுத்தவர்களுக்கு 1,525 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கொடுக்க வேண்டிய தொழிலாளர்கள் 500 பேர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்னும் இரண்டு ஆண்டு காலத்திலே வேலைகளைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வாரியம் எப்படி செயல்பட வேண்டும் என்பதைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் இங்கே சொன்னார்கள். பட்டா கொடுப்பதிலே இருக்கக்கூடிய தகராறு பற்றி அனைவருமே பேசினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு இதுகுறித்து நான் கலந்து பேச வேண்டும். ஏனென்றால் பட்டா கொடுத்தால்தான், மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று 1995-ஆம் ஆண்டு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின்படி, இப்போது மின்சாரம் கொடுக்க முடியாத நிலையிலே இருக்கிறோம். ரெவின்யு இலாகாவிலே அதுபற்றி நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். இதுகுறித்து இந்த



1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அவையிலே இருக்கக்கூடிய அத்தனை உறுப்பினர்கள் மட்டுமல்ல, நாங்கள் எங்கேயாவது கூட்டங்களுக்குப் போனாலும்கூட, இந்தக் கோரிக்கையினை மக்கள் வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். விரைவிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் கலந்துபேசி, பட்டா கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு நிச்சயமாகச் செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பட்டா இல்லாமல் மின்சாரம் கொடுப்பது என்று சொன்னால், அது உண்மையிலேயே மின்சார வாரியத்திற்கு ஒரு சுமையாக வந்து சேரும்.

**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அநேகமாக 234 உறுப்பினர்களும் சேர்ந்து முன் வைத்திருக்கிற ஒரு கோரிக்கை, அதாவது பட்டா இல்லையென்றாலும் அவர்கள் குடியிருந்து வருகின்ற வீடுகளுக்கு மின் இணைப்பு தரவேண்டும் என்பதுதான். இது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட, முன்வைக்கப்பட்டிருக்கிற ஒரு கோரிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள், அவர்கள் கருணைகூர்ந்து இதற்கு தீர்வு அளிக்கின்ற வகையில் பதில் அளிக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

**திரு. ப. ரங்கநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் அமைச்சர் பதிலை முடிக்கவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே, திரு. சுப்பராயன் அவர்கள் பேசியே காரியங்களைச் சாதிக்கக்கூடியவர். எனவே, அந்தக் கோரிக்கையினை வைத்த உடனே, முதலமைச்சர் அவர்கள் தலை அசைத்து விட்டார்கள். எனவே, அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, டிப்ளமா ஹோல்டர்களுக்கு வேலை கொடுப்பது சம்பந்தமாக, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய திரு. அழகிரி அவர்களும் சொன்னார்கள். அவர்களுக்கு 50 : 50 என்ற அடிப்படையிலே, நேர்காணலிலே அவர்களுடைய தகுதியின் அடிப்படையிலே அவர்களை நியமிப்பதற்கு மின்வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார், எதற்காக நீங்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்கிறீர்கள் என்று. ஏன் அந்த இலாகாவிலேயே பணியாற்றியிருக்கக்கூடிய திரு. அப்பாதுரை முதலியார் போன்ற வாரியத் தலைவர்கள் இருந்தார்களே, அவர்களைப் போன்று நியமிக்கக்கூடாதா என்றும் சொன்னார். அப்பாதுரை முதலியார் அவர்களை நாம் ஒப்பிட்டுப் பேசுவது சரியில்லை. ஏனென்றால், அவர் காலையிலே 6-30 மணிக்கு அலுவலகத்திற்கு வந்தால், இரவு எப்போது வீடு திரும்புவார் என்று தெரியாது. அப்படி வேலை செய்யக்கூடிய அதிகாரிகள் மின்வாரியத்திலே மிகவும் குறைவு. அதுமட்டுமல்ல, அவருக்கு இருந்த திறமை, அறிவு, ஆற்றல் ஆகியவற்றோடு மற்றவர்களை நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. Technical People — Engineering படித்தவர்கள் உண்மையிலேயே இந்தத் துறையிலே மிகச் சிறந்து விளங்குகிறார்கள். அவர்களுக்கு மெம்பர் வரையிலே பதவி உயர்வு கொடுக்கிறோம். ஆனால், நிர்வாகத்தைப் பார்க்க வேண்டியது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான். ஆனால், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிலும் சிலர் தவறு செய்யக்கூடும். அவர்களும் மனிதர்கள்தான். எனவே, நாம் அதிலே யாரையும் வற்புறுத்த முடியாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இப்போது புதியதாக ஐ.ஏ.எஸ். அதிகாரியை நாம் நியமித்திருக்கிறோம். எந்த அளவுக்கு இந்த இலாகா சிறப்பாக நடைபெறுகிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லுகிறேன்.

பிற்பகல் 1-25

ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் கமிஷன் கொடுத்து பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதற்கான ஆதாரங்கள் எல்லாம் இருக்கின்றன. 10 சதவிகிதத்திற்குக் குறையாமல் கமிஷன் கொடுத்தால்தான் ஆர்டர்கள் கொடுக்கப்படும் என்ற நிலை இருந்தது. அதை இப்போது புதிய தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு கூட, ACSR கண்டக்டர்கள் வாங்குவதில், கடந்த கால ஆட்சியிலே எவ்வளவு வாங்கினார்களோ அந்த பொருளை வாங்குவதற்கு 7.61 கோடி ரூபாய் குறைத்து வாங்கியிருக்கிறார்கள். அதாவது, ரூ. 7 கோடியே 61 இலட்சம் குறைத்து வாங்கியிருக்கிறார்கள். Distribution Transformers ரூபாய் 11 கோடியே 81 இலட்சம் குறைத்து வாங்கியிருக்கிறார்கள். Power Transformers ரூபாய் 6 கோடியே 29 இலட்சம் குறைத்து



[1997 ஏப்ரல் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வாங்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், ஒவ்வொரு பொருளையும் வாங்குவதற்கு அந்த நிறுவனங்களைக் கூப்பிட்டுப் பேசி, 10 சதவிகிதம் நீங்கள் குறைத்தால்தான் நாங்கள் ஆர்டர்கள் கொடுப்போம். கடந்தகால ஆட்சியில் முடிவு செய்யப்பட்ட விலையை நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று சொல்லி, குறைத்த விலை இது. அதுமட்டுமல்ல, அவர்களிடம் அப்படிச் சொல்லிய நேரத்திலே அதை ஏற்கமாட்டோம் என்றார்கள். அப்போது மின்வாரியத்தினுடைய தலைவர், நீங்கள் கொடுக்காவிட்டால் இதே பொருட்களை நான் கேட்கின்ற விலைக்குக் கொடுப்பதற்குப் பக்கத்திலே இருக்கிற மாநிலங்கள் தயாராக இருக்கின்றன என்று சொன்னதற்குப் பிறகு, அவர்கள், நீங்கள் சொல்கின்றபடியே 10 சதவிகிதம் குறைத்துக் கொள்கிறோம் என்று சொல்லி, இன்றையதினம் அந்த விலைகளை எல்லாம் குறைத்திருக்கிறார்கள். Production and Communication-ல், ரூபாய் 7 கோடியே 32 இலட்சம் குறைத்திருக்கிறார்கள். கடந்தகால ஆட்சியிலே நிலக்கரி இறக்குமதி செய்வதிலே 3 இலட்சத்து 63 ஆயிரம் டன் இறக்குமதி செய்யாமல் போய்விட்டார்கள். நாம் அதை ரத்து செய்யலாம் என்று பார்த்தோம். ஆனால், அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று டெமரேஜ் கிளைம் செய்யப்போகிறோம் என்று சொன்னார்கள். உடனே அவர்களுக்கு ஆணை வழங்கலாம் என்று சொல்லி 4½ டாலர் ஒரு டன்னுக்குக் குறைத்துக்கொண்டால், நான் ஆர்டர் தருகிறேன் என்று வாரியத்தினுடைய தலைவர் சொன்னதன் அடிப்படையிலே, 4 கோடியே 67 இலட்சம் ரூபாய் குறைத்து வாரியத்திற்குச் சப்ளை செய்வதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி, இந்த 6 மாத காலத்தில் புதிய தலைவர் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு 37 கோடியே 3 இலட்சம் ரூபாய் வாரியத்திற்கு இலாபம் கிடைத்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நிலக்கரி இறக்குமதி செய்வதிலே கடந்த கால ஆட்சியிலே ஒரு டன்னுக்கு 4½ டாலர் குறைத்து இருப்பார்களேயானால் மின்சார வாரியத்திற்கு 37½ கோடி இழப்பு ஏற்பட்டிருக்காது. எனவே, இப்படி டிரான்ஸ்பார்மர்கள் வாங்குவது, மீட்டர்கள் வாங்குவது, கண்டக்டர்கள் வாங்குவது, நிலக்கரி வாங்குவது இவைகள் அத்தனையிலுமே 10 சதவிகிதம் இலாபம் வைத்து வாங்கிய காரணத்தால் மின்சார வாரியத்திற்கு இந்த இழப்பு ஏற்பட்டது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இனிமேல் அப்படிப்பட்ட தவறுகள் நிச்சயமாக

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 ஏப்ரல் 22

நடக்காது என்று சொல்லிக்கொள்வதோடு மட்டுமல்ல. மின்சார வாரியம், நீங்கள் சொன்ன ஆலோசனைகளை எல்லாம் ஏற்று, மிகச் சிறந்த நிர்வாகத்தைத் தந்து, நீங்கள் எல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு இன்னும் இரண்டாண்டு காலத்திலே Low Voltage இல்லாத அளவுக்கு எந்த இடங்களிலும் மின்சாரத் தடங்கல் இல்லாத அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயல்படும் என்பதை நான் உங்களுக்கு வாக்குறுதியாகத் தந்து, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையெல்லாம் மின்வாரியம் குறிப்பெடுத்து வைத்திருக்கிறது, அந்தக் குறைபாடுகளை எல்லாம் போக்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(சில உறுப்பினர்கள் விளக்கம் கேட்பதற்காக எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு நாட்களாக அமைச்சர் 20 முறை விளக்கம் சொல்லியிருப்பார். எனவே இனிமேல் எந்த விவாதமும் கிடையாது. எந்த விளக்கமும் கிடையாது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

151. தமிழ்நாடு மின்வாரியத்தின் 1996-97 மற்றும் 1997-98ஆம் ஆண்டுகளுக்கான நிதிநிலை விவர அறிக்கைகள் மற்றும் 1995-96 மற்றும் 1996-97-ஆம் ஆண்டுகளுக்கான திருத்திய மதிப்பீடு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதங்களைத் தொடங்கி வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

D
21,3,1,M,97
N 97.32 216654.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules, and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.